32
26
தெளிவான
காலநிலை
காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 178 வள்ளுவர் ஆண்டு: 2045 வைகாசி 09, வெள்ளி 23.05.2014

பக்கம் 24
வலி. தெற்கு பிரதேச சபை
23 MAY 2014
பொது சன நூலகம்

# வடமாகாண சபையில் நேற்று அஞ்சலி முதல்வர், அமைச்சர்கள் புறக்கணிப்பு

## போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூர்ந்து உறுப்பினர்கள் உருக்கம்

யாழ்ப்பாணம், மே. 23
வடமாகாண சபையில் நேற்று நடைபெற்ற. இறுதிப் போரில் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், போக்குவரத்துத் துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன், உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் நியமன உறுப்பினர் ஐ.அஸ்மின் ஆகியோரும் எதிர்க் கட்சியினரும் புறக்கணித்தனர்.
கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் சபை வளாகத்தில் இருந்த போதும் சுடர் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அஞ்சலி ஆரம்பித்தபோது சபையின் உள்ளே இருந்தார்கள். அஞ்சலி ஆரம்பித்ததும் வெளியேறிவிட்டார்கள்.
முதலமைச்சர், அமைச்சர்கள் புறக்கணித்தபோதும் ஒரேயொரு அமைச்சருடன் ஏனைய உறுப்பினர்கள் தமது கைகளில் தீபம் ஏந்தி சபா மண்டபத்தின் நடுவே நின்று. தீப அஞ்சலி செலுத்தினர். முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அவர்களுடன் சேர்ந்து அஞ்சலி செலுத்தினார்.
வடக்குமாகாணசபையின் ஒன்பதாவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னதாக

21ஆம் பக்கம் பார்க்க

வடக்கு மாகாண சபையில் நேற்று இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஆரம்பமானதும் வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மெல்ல எழுந்து வெளியேறினார். அமைச்சர் ஐங்கரநேசன் வழங்கிய கறுப்புப் பட்டியையும் அவர் அணிய மறுத்து விட்டார்.

## பயங்கரவாத தொடர்பாம்; மூதாட்டி கைது

யாழ்ப்பாணம், மே 23
பயங்கரவாதச் செயற்பாடுகளில் தொடர்புடையவர் என்று தெரிவித்து மூதாட்டி ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
64 வயதுடைய பத்மாவதி என்ற மூதாட்டியே கைது செய்யப்பட்டு வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.
குறித்த மூதாட்டியின் பெயரில் காணி ஒன்று கொள்வனவு

21ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் தமிழருடன் தொடர்புகள் வேண்டாம்

### பேராசிரியர் இராசகுமாரனுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 23
தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தமிழர்களுடன் தொடர்புகளைப் பேண வேண்டாம் என்று யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரனுக்கு அறிவுறுத்தியுள்ளனர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் புதன்கிழமை காலையில் கொழும்புக்கு விசாரணைக்கு வருமாறு இராசகுமாரனுக்கு செவ்வாய்க்கிழமை மாலையில் திடீரென பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் இருந்து அழைப்பாணை வழங்கப்பட்டது. இதையடுத்து அவர் அன்றிரவே புறப்பட்டுச் சென்றார்.
யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி நிகழ்வு ஒன்றைப் புதன்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் அதற்கு முதல் நாள் இரவில் அவர் அழைக்கப்பட்டிருந்தமை பதற்றத்தை ஏற்படுத்தியது. முன்னதாக செவ்வாய்க்

21ஆம் பக்கம் பார்க்க

## அரசும் இராணுவமும் தேவையற்ற தலையீடு

### முதலமைச்சர் நேற்று உரை

யாழ்ப்பாணம், மே 23
இறந்த உறவுகளை நாம் நினைவுகூர்ந்தால் அவர்கள் எழும்பி வந்துவிடுவார்களோ என்ற பயத்தினால்தானோ என்னவோ இலங்கை அரசு தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கு தடைவிதிப்பதாக வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வின் ஆரம்பத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டது.

21ஆம் பக்கம் பார்க்க

அந்த 3 வயதுச் சிறுவன் முற்பிறவியில் தான் கொலை செய்யப்பட்டேன் என்று தெரிவித்தான். முற்பிறவியில் தான் வாழ்ந்ததாகக்கூறப்படும் இடத்தையும் கூட்டிச் சென்று காட்டினான்.

**முற்பிறவியில் நடந்ததை கூறும் சிறுவன்**

திகைக்க வைக்கும் தகவல்கள் பக்கம் 2 இல்

## சுகாதாரப் பரிசோதகர் பிரச்சினை தீர்க்க குழு

யாழ்ப்பாணம், மே 23
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில் ஒரு தீர்வை எட்டுவதற்காக, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் பத்துப் பேரைக் கொண்ட குழு நேற்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு உடனடியாக இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட சகல தரப்புடன் பேசி முடிவை எட்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அறிவிப்பு ஒன்றை அவையில் வெளியிட்டார். மலேரியா ஒழிப்புத் தொடர்பிலான விழிப்புணர்வுப் பேரணி நேற்று நடைபெறவுள்ளது என்றும் அதில் உறுப்பினர்கள் யாவரையும் பங்கெடுக்குமாறும் அவர்

21ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலை ஆசிரியர்களை தீய சக்திகளே மிரட்டியுள்ளன

### யாழ். இராணுவத் தளபதி கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மே 23
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்துக்கும், இராணுவத்துக்கும் இடையிலான முரண்பாட்டை உருவாக்குவதற்கு முயன்றுள்ள சில தீய சக்திகளே பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு உயிர் அச்சுறுத்தலை விடுத்துள்ளன என்று தெரி

வித்துள்ளார் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா.
யாழ். பல்கலைக் கழக வளாகத்துக்குள் இரு தினங்களுக்கு முன்னர் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டிருந்தன. அதுகுறித்துக் கேட்டபோதே, பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்

21ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 23
கிளிநொச்சி, திருவையாறு அம்பாள் நகரைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

21ஆம் பக்கம் பார்க்க

**பாரத தேசத்துக்கு இரண்டாவது சுதந்திரம்**

பக்கம் 12

## மீன்பிடிப் பிரச்சினை குறித்து மோடியுடன் பேசத் தீர்மானம்

கொழும்பு, மே 23
இந்திய - இலங்கை இடையிலான மீன்பிடிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இரு நாட்டு மீனவர் பிரதிநிதிகளும் புதிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச உள்ளனர்.
மீன்பிடிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக முதலில் இந்தியாவிலும் பின்னர் இலங்கையிலும் நடந்த இரு கட்டப் பேச்சுக்களில் தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.
தமிழகத்தில் தற்போது மீன்பிடித் தடைக் காலம். அதனால்

21ஆம் பக்கம் பார்க்க

## பங்களாதேஷ் உருவானது போன்ற சூழல் இலங்கையில் உருவாகலாம்

### தமிழக பா.ஜ.க. தலைவர் கூறுகின்றார்

சென்னை, மே 23
பங்களாதேஷ் உருவானது போன்ற சூழல் இலங்கையில் உருவாகாது என்று உறுதியாகக் கூற இயலாது. அது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கைகளிலேயே உள்ளது- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன்.
சென்னையில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகமான கமலாலயத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

21ஆம் பக்கம் பார்க்க

# மன்னாரில் அகழ்வாராய்ச்சி சீன ஆய்வாளர்கள் வருகை

மன்னார், மே 23

மன்னார் பழைய துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்காகச் சீனாவின் தொல்பொருள் ஆய்வாளர்கள் இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் தொல்பொருள் துறைப் பேராசிரியர் ஒருவரும், கலாநிதி ஒருவரும் இந்த குழுவில் அடங்குகின்றனர் எனத் தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வுப் பிரிவுப் பணிப்பாளர் நாமல் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவினர் தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து. மன்னார் பழைய துறைமுகத்தில் பண்டைய காலத்தில் கப்பல் போக்கு வரத்து எவ்வாறு முன்னெடுக் கப்பட்டது என ஆய்வு செய்ய வுள்ளனர் எனத் தெரியவரு கிறது.

நாட்டின் பண்டைய துறை முகங்களில் மன்னார் துறை முகமும் ஒன்றாகும். சுமார் 2,600வருடங்களுக்குமுன்ன ரான காலப்பகுதியில் இந்தத் துறைமுகத்தில் கப்பல் போக்கு வரத்து முன்னெடுக்கப்பட்டுள் ளமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளதாகத் தொல் பொருள் திணைக்களம் கூறி யுள்ளது. (த-10)

# மோதிவிட்டு நிற்காது சென்ற வாகனத்தை பிடித்த மக்கள்

யாழ்ப்பாணம், மே 23

மோட்டார் சைக்கிளில் சென்ற வரை மோதி வீழ்த்தி விட்டு அவ்விடத்தில் நிற்காது பறந் தது வட மாகாண முதலமைச் சரின் செயலாளர் பயணித்த வாகனம். ஆயினும் சம்பவ இடத்தில் இருந்த மக்களின் சம யோசித நடவடிக்கையால் பின் னர் வாகனம் மடக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று நாவற் குழி பாலத்திற்கு அண்மை யில் நடந்துள்ளது. அதில் சர சாலை தெற்கைச் சேர்ந்த ச.ஞான லிங்கம் என்பவர் படுகாய மடைந்தார்.

நேற்றுக் காலை நாவற்குழிப் பாலத்திற்கு அண்மையில் வைக் கோலுடன் சென்றுகொண் டிருந்த லொறியை முந்துவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் முயற்சித்துள்ளார். அப்போது பின்னால் வந்த வாக னம் ஒன்று. மோட்டார் சைக் கிளில் வந்தவரை மோதி வீழ்த்தி விட்டு அந்த இடத்தில் நிற்கா மல் வேகமாகச் சென்றுவிட்டது.

இந்தச் சம்பவத்தைப் பார்த்த வர்கள் சமயோசிதமாகச் செயற் பட்டு குறித்த வாகன இலக்கத் தைக் குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்தனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணை களை அடுத்து விபத்துடன் தொடர் புடையவாகனம்வடக்குமாகாண முதலமைச்சரின் செயலாள ருடையது என கண்டறிந்தனர். அதைத் தொடர்ந்து குறித்த வாகன சாரதியை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண் டார். சாரதி மோட்டார் சைக்கிள் சேதமடைந்ததற்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவை வழங் குவதாக உறுதியளித்ததை அடுத்து இரு தரப்பினரும் சம ரசமாக விலகிக் கொண்டனர்.

அதேவேளை வாகனம் விபத் துக்குள்ளானபோது அதில் செயலாளர் பயணம் செய்தார் என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். ஆயினும் அவர் அதை மறுத்துள்ளார்.

(ற-400)

# பட்டமேற்கல்வி டிப்ளோமா பரீட்சை சனிக்கிழமையே

யாழ்ப்பாணம், மே 23

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் பட்ட மேற் கல்வி டிப்ளோமா நிகழ் சித் திட்டத்திற்கான புதிய மாணவர்களைத் தெரிவு செய் வதற்கான தெரிவுப் பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்ட படியே நாளை சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 11 மணி வரை இடம்பெறவுள்ள தாக யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித் துள்ளார்.

அத்துடன் மேற்படி பரீட்சையா னது யாழ். பிராந்திய நிலையத் துக்கு விண்ணப்பித்த மாண வர்களுக்கு யாழ்ப்பாணப் பல் கலைக்கழக இரசாயனவியல் துறை மண்டபத்திலும் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்திலும் கிளி நொச்சி கற்கை நிலையத்திற்கு விண்ணப்பித்தோருக்கு கிளி. தெரேசா மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.பரீட்சைஇன்று நடைபெறும் என்று நேற்றைய உதயனில் தவறுதலாகப் பிர சுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (உ-10)

# காரைநகரில் நேற்றுப் பலர் வயிற்றோட்டத்தால் பாதிப்பு

வலி.வடக்கு, மே 23

காரைநகர் ஊரி பகுதியில் நேற்றுப் பகல் திடீரென வயிற் றோட்ட நோய்க்கு உள்ளாகிய பதினைந்துக்கும் மேற்பட்ட வர்கள் காரைநகர் வைத் தியசாலையில் சிகிச்சை பெற்ற துடன் ஒன்றரை வயது குழந்தை உட்பட மூவர் விடுதி யில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு வயதுக்கு உட் பட்ட பிள்ளைகள் உட்பட வயது வந்தவர்களும் உள்ளடங்கு கின்றனர் என பொதுச் சுகா தாரப் பரிசோதகர் தெரிவித் தார். வைத்தியசாலை வட்டா ரங்களும் அதனை உறுதி செய்தன.

இது குறித்து காரைநகர் பிர தேச பொதுச் சுகாதாரப் பரிசோ தகர் உடனடியாகத் தமது தொழிற்சங்கத்துடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். இதனையடுத்து அவர் தனது பணிப் பகிஸ்கரிப் பைக் கைவிட்டு மனிதாபி மான முறையில் அந்தப் பகுதி யில் வயிற்றோட்ட நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை களைச் சுகாதார வைத்திய அதிகாரியுடன் இணைந்து மேற்கொண்டுள்ளார் என தொழிற் சங்கம் தெரிவித்துள் ளது.

(த-86)

# வெளிநாட்டு முதலீடுகளுக்கு மாநகர சபையால் இடையூறு

வலி.வடக்கு மே 23

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் வெளிநாடுகளில் இருந்த வந்து முதலீடுகளை செய்ய முயல்பவர்களுக்கு யாழ். மாநகரசபை பெரும் இடையூறாகக் காணப்படுகின் றது. அன்மையில் வெளிநாட் டில் இருந்து வந்த தனவந்தர் ஒருவர் முதலீட்டை செய்வதற் காக யாழ்ப்பாணம் மாநகர சபையில் கட்டிட விண்ணப் பத்தை ஒப்படைத்து ஏழு மாதங்களாகின்ற போதிலும் இதுவரைக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது - என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவு னியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன்

வட மாகாண சபையின் ஒன்ப தாவது கூட்டத் தொடர் நேற்று பகல் 9.45 மணியளவில் சபையின் முதல்வர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடை பெற்றது. பிற்பகல் அமர் வில் கவனயீர்ப்பு பிரேரனை ஒன்றைச் சபையில் கொண்டு வந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வெளிநாட்டில் வாழும் எமது உறவுகள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள் வதில் பல்வேறு தடைகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. வெளிநாட் டில் இருந்து வந்த முதலீட் டாளர் ஒருவரை சந்தித்தேன். அவர் குறிப்பிட்டார் 'யாழ்ப்பா ணத்தில் முதலீடு செய்வதற் காக கட்டிடம் கட்ட அனுமதி கேட்டு கட்டிட வரைபடத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை யில் சமர்ப்பித்தேன். ஏழுமாதங் கள் கடந்து விட்டன. அந்த வரைபடத்தை அங்கீகரிப் பதற்கு யாழ்ப்பாணம் மாநகர முதல்வரும், செயலாள ராக இருக்கும் அவருடைய கணவரும் கையூட்டுக் கேட் கின்றார்கள்' என்று.

இந்த சபையில் இது பற்றி பல தடவைகள் முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் களான விந்தன் கனகரத்தினம் மற்றும் பரஞ்சோதி ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர். சபை யின் தலைவரும் கூட கதைத் துள்ளார். இந்த வகையில் இது சம்பந்த மாக உடனடியாக நட வடிக்கை எடுப்பதுடன் இத் தகைய சம்ப வங்கள் பற்றிய விசாரணை களையும் மேற் கொள்ளவேண்டும்'-என்றுதெரி வித்தார். (ற-86)

# பதவியேற்ற கையோடு மோடியை சந்திப்போம்

## கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, மே 23

இந்திய நாடாளுமன்றத் தேர்த லில் வெற்றிபெற்று பிரதமரா கத் தெரிவாகியுள்ள நரேந்திர மோடி உத்தியோக பூர்வமாகப் பதவியேற்ற பின்னர் அவர் தலைமையிலான - புதிய அர சான பாரதீய ஜனதாக் கட் சியை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. அத் துடன்தமிழகத்தில்பெருவெற்றி யீட்டிய அ.தி.மு.கவின் தலை வியும் தமிழக முதல்வருமான ஜெயலலிதாவையும் கூட்ட மைப்பு நேரில் சந்திக்கவுள் ளது. - இவ்வாறு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலை வரும்திருகோணமலைமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான இரா. சம்பந்தன் தெரி வித்தார்.

இந்தப் சந்திப்புகளுக்கு முன் னர் இந்தியப் பிரதமர் நரேந் திர மோடிக்கும், தமிழக முதல் வர் ஜெயலலிதா ஆகிய இரு வருக்கும் ஈழத்தமிழர்களின் அரசியல் நிலைமைகளை விளக்கும் பின்னணியுடன் வாழ்த்துச் செய்திகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்ப வுள்ளது என்றும் சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.

இம்மாத ஆரம்பத்தில் இந்தியர் சென்ற தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவர், நேற்று

பிற்பகல் கொழும்பு திரும்பி னார். அதனையடுத்து, தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக் கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர். எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய நான்கு கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தலை மையில் நேற்று மாலை கொழுமபில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விடுதியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தை ஆரம்பித்து வைத்து தலைமையுரையாற் றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் தற்போ தைய அரசியல் நிலைவரங் கள், இந்தியத் தேர்தல் முடிவு களை அடுத்து முன்னெடுக்கப் பட வேண்டிய நிலைப்பாடு ஆகியவை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங் களிலும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் மாவட்ட மட்டக் குழுக்களை அமைப்பது என வும், ஒவ்வொரு அங்கத்துவக் கட்சியும்கூட்டமைப்பின்மாவட் டக் குழுவில் இடம்பெறு வதற் காகத் தத்தமது கட்சி சார்பில் இரண்டுஅல்லதுமூன்றுஉறுப் பினர்களின் பெயர் விவரங் களை அடுத்த ஒரு வாரத்துக் குள் பரிந்துரை செய்ய வேண் டும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பைக்கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பான விடயங்களைக் கையாள்வதற் காக கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நியமிக்கப் பட்ட 5 பேர் கொண்ட குழு நாளை சனிக்கிழமை கொழும் பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் கூடும் என்றும் மேற்படிக் கூட் டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

(ற-சி)

## உயர்தர மாணவர் கவனத்துக்கு

க.பொ.த உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் மாகாண ரீதியில் நடத்தப்படும் பரீட்சையா னது இன்று தொடக்கம் எதிர் வரும் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சையில் மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர்கள் அறிவுறுத்தியுள் ளார்கள். (ற-10)

## மலேரியா விழிப்புணர்வு பேரணி

வலி.வடக்கு, மே 23

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணிக்கு மலேரியா விழிப்புணர்வு ஊர்வலம் பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது. பருத்தித் துறை சுகாதார வைத்திய காரி பணிமனையில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம பருத்தித்துறை ஹாட்லிக் க ல்லூரியைச் சென்றடை வதுடன் விழிப்புணர்வு சம்பந்தமான கூட்டமும் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வில் வட மாகாண சபையின் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், மருத்துவ மாது கள், பொதுச் சுகாதார பரிசோத கர்கள், சுகாதாரத் தொண்டர் கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப் பினர்கள், பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசி ரியர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ற-86)

# சிரியாவில் முற்பிறவியில் கொன்றவனை காட்டிக்கொடுத்த 3 வயது ஆண்குழந்தை

டமஸ்கஸ், மே 23

சிரியாவிலுள்ளது கோலன் குன்று. அந்தப் பகுதியைச் சேர்ந்த3வயதுஆண்குழந்தை ஒன்று முற்பிறவியில் தன்னை கொலை செய்தவனைக் காட் டிக் கொடுத்து பரபரப்பை ஏற் படுத்தியுள்ளான்.

ட்ரூஸ் தனி இனக்குமுவைச் சேர்ந்தவன் அந்தச் சிறுவன். அவன் பிறக்கும்போது அவ னது தலையில் சிவந்த நிறத் திலான நீண்ட கோடு போன்ற அடையாளம் இருந்துள்ளது. அந்த இனத்தைப் பொறுத்த வரையில அவ்வாறான கோடு முற்பிறவியைக் குறிக்கும் என்பது ஐதீகம். அதை நிரூபித் துள்ளான் இந்தச் சிறுவன். பேசும் வயதை அடைந்ததும் அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியையும் - திகைப்பை யுமே தந்தன.

அந்தச் சிறுவன் தனது முற்பிற விப் பெயரைக் கூறினான். அந்தப் பிறவியில் தன்னை ஒருவன் கோடரி கொண்டு தாக்கிக் கொன்றான் என்றும் தெரிவித்தான். அத்தோடு நிற்கவில்லை தான் முற்பிறவி யில் வாழ்ந்த இடத்துக்கும் மக் களைக் கூட்டிச் சென்று காட்டி னான்.

அங்கிருந்தவர்களை விசாரித்த போது, அந்த இடத்தில் ஒரு வன் வசித்தான் என்றும் அவன் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற் போய்விட் டான் என்று அவர்களும் தமது பங்குக்கு அதிர்ச்சியளித்தனர். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போன்று அங்கி ருந்த ஒருவனைச் சுட்டிக்காட் டிய சிறுவன், இவன்தான் என்னைக் கொலை செய்தான் என்று கூறினான். அந்த நப ரின் முகம் வெளிறிப்போனது. ஆனாலும் சிறுவன் கூறுவது உண்மையல்ல என்று அந்த நபர் சாதித்தான். ஆனாலும் சிறுவனின் அடுத்த செயல் செய்த குற்றத்தைஒப்புக்கொள்ள வைத்தது. விறுவிறு என்று சென்ற சிறுவன் தன்னைக் கொன்று புதைத்த இடத்தை யும் துல்லியமாகக் காட்டி னான். அந்த இடத்தைத் தோண்டியபோது ஓர் ஆணின் மண்டையோடும், கோடரி ஒன்றும் கிடைத்தது. அதன் பின்னர் அந்த நபர் உண் மையை ஒப்புக் கொண்டுள் ளான்.

இந்தச் சம்பவம் சிரியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

(ற-சி)

# மாநகர சபையின் மீது விரைவில் விசாரணை

## வட மாகாண அவைத் தலைவர் தெரிவிப்பு

வலி. வடக்கு மே 23

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மீது வெகு விரைவில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை வட மாகாண முதலமைச்சர் எடுத்துவருகின்றார். உள்ளூராட்சி அமைச்சராக இருப்பதன் காரணத்தினாலேயே அவர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார் என்று தெரிவித்துள்ளார் வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம்.

சபையில் நேற்றுப் பிற்பகல் லிங்கநாதனால் கொண்டு வரப்பட்ட கவனவீர்ப்பு பிரேரணை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இது தொடர்பான விவரங்கள் எனக்குத் தெரியும். விரைவில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மீதான விசாரணை மேற்கொள்ளப்படும். யாரும் தப்பிக்க முடியாது"- என்று தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவரான தவராசா சபையில் எந்த வகையான கருத்துக்களையும் கூறாது மிகவும் அமைதியாக கேட்டுக் கொண்டு இருந்ததுடன், ஏனைய எதிர் கட்சி உறுப்பினர்களும் இது பற்றி எதுவும் கூறாது இருந்தனர். (ற-86)

# கொலைகளின் பட்டியலால் வடக்கு அவை கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், மே. 23

ஈ.பி.டி.பியினர் இதுவரையில் செய்த கொலை, கொள்ளைகளை எங்களால் பட்டியல் படுத்த முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் விந்தன் தெரிவிக்க, ரெலோ என்ன செய்ததென்று என்னாலும் சொல்ல முடியும் என்று பதிலுக்குச் சவால் விடுத்தார் எதிர்கட்சி உறுப்பினர் தவராஜா.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது புரியப்பட்ட கொலைகள் தொடர்பில் திடீரென இருவருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

> "ஈ.பி.டி.பியினர் எவ்வளவு கொலை செய்தனர், எவ்வளவு கொள்ளையடித்தனர் என்ற விவரங்களை எங்களால் பகிரங்கப்படுத்த முடியும்" என்று விந்தன் கனகரட்ணம் சவால் விடுத்தார்.

வடமராட்சி கிழக்கில் மணல் அகழ்வது தொடர்பிலான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. மகேஸ்வரி மணல் கொள்ளை நிலையம் என்று அந்த அமைப்பின் பெயரை மாற்றலாம் என்று எம்.கே.சிவாஜிலிங்கம் ஒரு முன் மொழிவை வைத்தார்.

இதனால் விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியது. ஈ.பி.டி.பியின் பெயரைக் குறிப்பிட்டு, ஆளுங் கட்சி உறுப்பினர்களான சிவாஜிலிங்கமும், விந்தனும் கருத்துத் தெரிவித்தனர். ஒரு கட்டத்தில் அவைத் தலைவர் நிலைமையைக் கட்டுக்கொண்டு வருவதற்காக ஒலிவாங்கியை நிறுத்தினார். இருப்பினும் அதை கருத்தில் கொள்ளாத உறுப்பினர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

"ஈ.பி.டி.பியினர் எவ்வளவு கொலை செய்தனர், எவ்வளவு கொள்ளையடித்தனர் என்ற விவரங்களை எங்களால் பகிரங்கப்படுத்த முடியும்" என்று விந்தன் கனகரட்ணம் சவால் விடுத்தார். போரின் பின்னர் இப்போதும் உங்கள் கட்சியினரே ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா,

"கடந்த காலங்களில் ரெலோ என்ன செய்ததென்று எங்களுக்கும் தெரியும். அதையும் எங்களால் பட்டியல்படுத்த முடியும்" என்று சீறினார்.

சிறிது நேரம் நீடித்த இந்த வார்த்தைச் சமர், அவைத் தலைவரின் கண்டிப்பான அறிவுறுத்தலின் பின்னர் முடிவுக்கு வந்தது. (உ-5)

# முடிந்தால் பதவி நீக்குங்கள் பார்க்கலாம்

## வீரவன்ஸவுக்கு சிவாஜிலிங்கம் சவால்

யாழ்ப்பாணம், மே 23

"நாங்கள் எதற்கும் அஞ்சாமல் அஞ்சலி செலுத்துவோம் என்பதற்காகவே இங்கு இந்த அஞ்சலியைச் செலுத்தினோம். நாங்கள் அஞ்சலி செலுத்தியதற்காக எங்களை பதவியிறக்கச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச சொல்கின்றார். அவருக்குசவால் விடுகின்றோம் முடிந்தால் பதவி நீக்கிப் பாருங்கள் என்று. இறுதியாகச் சொல்கின்றோம், இங்கு நடந்து கொண்டிருப்பது இனப்படுகொலைதான்"- என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் ஈகைச் சுடரேற்றி, போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், "எம் உறவிகளை நினைவுகூருவதற்குத் தடை விதித்துள்ள இலங்கை அரசு, போர் வெற்றி விழாவைக் கொண்டாடுகின்றது. இதன் மூலம் இந்த அரசு, இனங்களுக்கு இடையே பிளவு இருக்கின்றது என்பதை சர்வதேசத்துக்கு தானாகவே சொல்லியுள்ளது" - என்றார்.

பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தனது உரையில், "அன்றைய காலத்தில், வீதியில் உயிரிழந்த ஒருவரின் சடலத்தைக் கொண்டு செல்லும்போதுகூட பொலிஸாரும், இராணுவத்தினரும் தொப்பியைக் கழற்றி அஞ்சலி செலுத்துவார்கள். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. சிங்களவர்களால் எழுதப்பட்ட மகாவம்சத்தில், துட்டகைமுனு காவிநாயகனாகப் புகழப்படுகின்றான். அவன், போரில் வெற்றி கொண்ட எல்லாளனுக்கு சமாதி அமைத்து அஞ்சலி செலுத்தினான். மரியாதை செலுத்தினான். அவன் வழி வந்ததாகச் சொல்லும் அரசு, அதனைச் செய்ய மறுகின்றது" - என்றார். (உ-5)

## புதிய உறுப்பினர்கள் நாளை பதவியேற்பு

வலி. வடக்கு, மே 23

வடக்கு மாகாண கூட்டுறவு ஆணைக் குழுவின் புதிய உறுப்பினர்கள் மூவர் நாளை வெள்ளிக்கிழமை பதவியேற்கவுள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் பரிந்துரைக்கு அமைவாக நியமனம் பெற்ற முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு ஆணையாளர்களாகப் பதவி வகித்த கே.சண்முகலிங்கம் சுப்பிரமணியசர்மா மற்றும் முன்னாள் உதவி தொழில் ஆணையாளர் வசந்தராசா ஆகியோரே பதவியேற்கவுள்ளனர்.

நாளை முற்பகல் 9.30 மணிக்கு வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறும் நிகழ்வில் இவர்கள் நியமனக் கடிதங்களை பெறவுள்ளதுடன், பதவிகளையும் ஏற்கவுள்ளார்கள். (ற-86)

# எழுத்துமூலமான வினாவை மாற்றிய அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், மே. 23

வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட எழுத்து மூல வினாவை, விவசாய அமைச்சருக்கான வினாவாக அவைத் தலைவர் தன்னிச்சையாக மாற்றியமைத்த விடயம் சபையில் நேற்று அம்பலத்துக்கு வந்தது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் சபையில் எழுத்து மூலமான வினாவுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அப்போது முல்லைத்தீவு மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன், கடந்த 4 ஆவது அமர்வில் கொக்கிளாய் மக்களுக்குரிய வாழ்வாதார நிலத்தில் அவர்கள் விசாயம் மேற்கொள்வதற்குரிய வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட பிரேரணை மீது விவசாய அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதை அறியத்தரு மாறு கோரினார்.

இதற்குப் பதிலளித்த விவசாய அமைச்சர், காணி என்பது காணி அமைச்சுக்குரிய விடயம். விரிவான அறிக்கை பின்னர் சமர்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், விவசாய அமைச்சரின் பதில் பொறுப்பற்றது என்றதுடன், முதலமைச்சருக்குரிய வினா விவசாய அமைச்சருக்கு மாற்றம் செய்யப்பட்டது பொருத்தமற்றது என்று குறிப்பிட்டதுடன், இவ்வாறு தளம்பல் நிலையில் செல்வது சரியல்ல என்றும் குறிப்பிட்டார்.

கேள்விகேட்டால் உரிய அமைச்சர் பதில் வழங்க வேண்டும். அதைவிடுத்து வேறு அமைச்சருக்கு மாற்றுவது பொருத்தமல்ல என்றும் தெரிவித்தார்.

அப்போது அவைத் தலைவர், கேள்வி விவசாய அமைச்சரை நோக்கியே இருக்கின்றது என்று நிகழ்ச்சிநிரலுடன் அனுப்பப்பட்ட கேள்வியை வாசித்துக் காட்டினார். அதைக் குறுக்கிட்ட உறுப்பினர் து.ரவிகரன், நான் கேள்வியை முதலமைச்சரிடம் கேட்டே அவைக்குச் சமர்ப்பித்திருந்தேன். நிகழ்ச்சி நிரலில்தான் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்.

அதற்கு அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் எந்தப் பதிலும் வழங்கவில்லை. (ற-5)

# வடக்கு மாகாண சபை அமர்வில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், மே 23

வடக்கு மாகாண சபையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட 11 பிரேரணைகளில், எதிர்கட்சித் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை அமர்வில் எடுத்துக் கொள்ளப்பட்டு நீக்கப்பட்டது. ஏனைய 10 பிரேரணைகளும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டன.

நேற்றைய அமர்வில் பல்வேறு பட்ட பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. வடக்கு மாகாண அவைத் தலைவரால், 2012 ஆம் ஆண்டுப்பட்டப்பினை நிறைவு செய்யாத பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கியதைப் போன்று 2013 ஆம் ஆண்டுப்பட்டப்பினை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கும் நியமனம்வழங்கப்படவேண்டும் என்றும், கடற்தொழில் டிப்ளோமா, ஊடகக் கற்கை நெறி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும்என்றும்முன்மொழியப்பட்ட பிரேரணையை ச.சுகிர் தன் வழிமொழிந்தார்.

கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு மாகாணப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்டவர்களும் பிறப்பினால் அங்கவீனப்பட்டவர்களுமாக 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். இவர்களின் நல்வாழ்விற்காக வடக்கு மாகாணசபை முழுமையான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்மொழியப்பட்ட பிரேரணையை அஸ்மின் வழிமொழிந்தார்.

கிளிநொச்சி தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் வெளியாரின் நிகழ்வுகள் தொர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. வெளியாரை பாடசாலை அதிபராலோ வலயக் கல்விப் பணிப்பாளராலோ தடை செய்ய முடியவில்லை. பரீட்சைகள் நடந்துகொண்டிருக்கின்ற பொழுதிலும் விளையாட்டு மைதானத்தில் நேர்முக வர்ணனைகள் நடந்து கொண்டிருக்கும். இதனால் பாடசாலை மாணவர்கள் படிக்க முடியாமலும், பரீட்சை எழுத முடியாமலும் பாதிப்படைந்து வருகின்றார்கள். அதனைத் தடுத்து நிறுத்த மத்திய கல்வி அமைச்சை கோருவதுடன், இந்த நிகழ்வுகளை குறித்த மைதானத்தில் நடத்தும் இராணுவத் தளபதியிடமும் கோருவதென்று முன்மொழியப்பட்ட பிரேரணையை ப.அரியரட்ணம் வழிமொழிந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதிகளில் அனுமதிகளுக்கு அப்பால் சட்ட விரோதமுறையில் நடைபெறும் கருங்கல் அகழ்வுகள் நிறுத்தப்பட வேண்டும். அதே சமயம் முறையற்ற அனுமதி வழங்குபவர்கள் மீதும், அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்ற போர்வையில் சட்டவிரோத அகழ்வு செய்பவர்கள் மீதும் மாகாண சுற்றுச் சூழல் அமைச்சு, சுற்றாடல் அதிகாரசபை மற்றும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்மொழியப்பட்ட பிரேரணையை அன்ரனி ஜெகநாதன் வழிமொழிந்தார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தனிநபர்களாலும், தனியார் துறையினராலும், வேறு நிறுவனங்களாலும், சட்டபூர்வ மற்ற கனியவள அமைச்சு அனுமதியுடனும் மேற்கொள்ளப் பட்டு வரும் மண் அகழ்வினை தடுத்து நிறுத்தி யாழ்.மாவட்டத்துக்கு தேவையான மண்ணினை மத்திய அரசின் அனுமதியுடன் வடக்கு மாகாண சுற்றுச் சூழல் அமைச்சின் மேற் பார்வையின் கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்களினூடாக அல்லது பிரதேச சபையினூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ச.சுகிர்தனால் முன்மொழியப்பட்ட பிரேரணையை கசிவியோகன் வழிமொழிந்தார்.

மன்னார் மாவட்ட உறுப்பினர் அ.அஸ்மின், மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை பொதுமக்களுக்கு மீண்டும் கையளித்து அவர்கள் இயல்பு வாழ்வை மேற்கொள்வதற்கு இந்த நாட்டின் அரசும், பாதுகாப்பு அமைச்சும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்ட பிரேரணையை பா.டெனீஸ்வரன் வழிமொழிந்தார்.

மன்னார் தீவுப் பகுதியில் இயற்கை அனர்த்தங்களையும், கடலரிப்பையும் ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் மண் அகழ்வினை தடுத்து நிறுத்தி யாழ்.மாவட்டத்துக்கு தேவையான மண்ணினை மத்திய அரசின் அனுமதியுடன் வடக்கு மாகாண சுற்றுச் சூழல் அமைச்சின் மேற் பார்வையின் கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்களினூடாக அல்லது பிரதேச சபையினூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ச.சுகிர்தனால் முன்மொழியப்பட்ட பிரேரணையை கசிவியோகன் வழிமொழிந்தார்.

மன்னார் மாவட்ட உறுப்பினர் அ.அஸ்மின், மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை பொதுமக்களுக்கு மீண்டும் கையளித்து அவர்கள் இயல்பு வாழ்வை மேற்கொள்வதற்கு இந்த நாட்டின் அரசும், பாதுகாப்பு அமைச்சும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்ட பிரேரணையை பா.டெனீஸ்வரன் வழிமொழிந்தார்.

மன்னார் தீவுப் பகுதியில் இயற்கை அனர்த்தங்களையும், கடலரிப்பையும் ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் மணல் அகழ்வு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவும், இனிவரும் காலங்களில் மன்னார் தீவுப் பகுதிகளில் இத்தகையை மணல் அகழ்வு நடவடிக்கைகளைத் தடுக்கவும், குறிப்பாக மன்னார் தீவுக்கு வெளியில் மன்னார் தீவுப் பகுதி மணல் கொண்டு செல்வதை தடுக்கவும் சுற்றுச் சூழல் அமைச்சு, சுற்றாடல் அதிகார சபை மற்றும் புவிசரித வியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்மொழியப்பட்ட பிரேரணையை பிறிமுஸ் சிராய்வா வழிமொழிந்தார்.

வடக்கு - கிழக்கில் நிலவும் வைத்திய, தொழில்நுட்ப ஆசிரியர், ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப இந்தியாவிலிருந்து தமிழ் ஆசிரியர்களை இந்திய அரசு வழங்க வேண்டும் என்று எம்.கே.சிவாஜிலிங்கத்தால் முன்மொழியப்பட்ட பிரேரணையை விந்தன் வழிமொழிந்தார்.

வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 9 பொதுமக்களுக்குச் சொந்தமான காணியை இராணுவம் சுவீகரிப்பதற்கு எதிரான அ.பரஞ்சோதியால் முன்மொழியப்பட்ட பிரேரணையை கே.சயந்தன் வழிமொழிந்தார்.

அமைச்சர் பா.டெனீஸ்வரன், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை கூட்டுமாறு முன்மொழியப்பட்டபிரேரணையை எதிர்க்கட்சி உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் வழிமொழிந்தார்.

மன்னார் முள்ளிக்குளம் மக்களை அவர்களது சொந்த இடத்தில் மீளக்குடியேற்றுமாறு முன்வைக்கப்பட்ட பிரேரணையை, பிறிமுஸ் சிராய்வா வழிமொழிந்தார்.

எதிர்கட்சித்தலைவரினால் ஊடக மொன்றுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியில் நீக்கப்பட்டது. (ற-5)

# பதவியேற்புக்கு 'ஜெ' வராவிட்டால் தமிழ்நாட்டு அரசை கலைப்பேன்

## சுப்பிரமணியசாமி கூறுகிறார்

நரேந்திர மோடி பதவியேற்பு விழாவிற்கான அழைப்பை ஜெயலலிதா அரசு ஏற்று அந்த விழாவில் அ.தி.மு.க. பங்கெடுக்க வில்லை என்றால், ஜெயலலிதா தலைமையிலான அரசை கலைத்து, ஜனாதிபதி ஆட்சியை பிரகடனப்படுத்தி, அடுத்த 4 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தும் யோசனைக்கு நான் ஆதரவு தெரிவிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார் சுப்பிரமணியசாமி.

தனது டுவிற்றர் பக்கத்தில் கருத்துப் பதிவிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நரேந்திர மோடியின் பிரதமர் பதவியேற்பு விழாவில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் பங்குகொள்ள மாட்டார் என தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் முதலமைச்சர் அலுவலகத்தில் இருந்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் விடுக்கப்படவில்லை.

பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட சார்க் வலய நாட்டு தலைவர்களுக்கு நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார். இந்நிலையில் இலங்கை ஜனாதிபதி இந்த பதவியேற்பு விழாவில் பங்குகொள்வதை தமிழக கட்சிகள் விரும்பவில்லை.

விசேடமாக நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியில் இடம் பிடித்த தமிழக கட்சிகளான ம.தி.மு.க, காந்திய மக்கள் கட்சி போன்றவை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. (ற)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக உதவிகள் பல புரிந்து உன்னத சேவையாற்றுகின்ற

**கருமத் திருநதி வைத்திய கலாநிதி லயன்**

**Dr. வை.தியாகராஜா MJF**

அவர்கள் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 B1 இற்கான உப ஆளுநராக அமோக வாக்குகளால் வெற்றியீட்டியமைக்காக எமது பாடசாலை சமூகம் சார்பாக மனப் பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் மேன்மேலும் பதவிகள், பட்டங்கள் பெற்று சேவைகள் பல புரிந்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
பா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை.



## அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ராண்லி வீதி, அல்வேலி, திருநெல்வேலி, சாவகச்சேரி, பருத்தித்துறை, கைதடி, கிளிநொச்சி வடக்கு, கிளி நொச்சி தெற்கு, முள்ளியவளை, வேலணை, முல்லைத்தீவு, சங்கானை, மொடிகாமம், நெல்லியடி, சுன்னாகம், மல்லாவி ஆகிய கிளைகளில் 30.04.2013 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 26.05.2014 தொடக்கம் 04.06.2014 (திங்கள் - புதன்) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச்செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சுபாஸ்கரன் (சிவா)

நாவலடி, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுபாஸ்கரன் நேற்று (22.05.2014) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் லலிதா (லலி) அவர்களின் அன்புக் கணவரும், சுஜீகரன், லக்ஸியா, கபின்சன், தஸ்வினா ஆகியோரது பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2014) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 11 மணியளவில் வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, உடுப்பிட்டி.
தொ.பே.: 0779006474

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி கந்தசாமி

காந்தியூர், புலோலி தென்மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி கந்தசாமி நேற்று (22.05.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மயிலாமணி அவர்களின் பாசமிகு மகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், ஜெயக்குமார் (கனடா), கமலஹாசன் (கனடா), தனுஷா (லண்டன்), தனஜன், காலஞ்சென்ற தயாளரூபன் ஆகியோரின் பாசமிகு தாயும், ராஜலோசினி (ஆசிரியர், யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. வித்தியாலயம்), சிவகௌரி (கனடா), ராஜசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்மதா, அனுஷன் (கனடா), ஆருஜன் (கனடா), அஸ்மிகா (கனடா), தக்சினி (லண்டன்), சஸ்வின் (லண்டன்), மகிழினி, மாலினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2014) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்தியூர், புலோலி.
தொ.பே: 021 226 4723

தகவல்:
குடும்பத்தினர்.

# ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் பெரும் ஆர்ப்பாட்டம்

## மே 17 இயக்கம் ஆயத்தம்

சென்னை, மே 23

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி சென்னையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

சென்னை வள்ளுவர் கோட்டத்திலே நடைபெறவுள்ள இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மே 17 இயக்கமே ஏற்பாடு செய்துள்ளதுடன் அனைவரையும் அதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.

நரேந்திர மோடி பதவி ஏற்பு விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட சார்க் நாடுகளின் தலை வர்கள் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

இதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்துள் ளது. தமிழக சட்டசபையில் ராஜபக்ஷவை போர்க்குற்றவாளி என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கின்ற நிலையில் அவரை பதவி ஏற்பு விழாவுக்கு அழைப்பது ஏன்? என்றும் தமிழர் அமைப்புகள் கேள்விகள் எழுப்பியுள்ளன.

'ராஜபக்ஷவை அழைக்காதே இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்காதே' எனும் முழக்கத் துடன் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மே 17 இயக்கம் அறிவித்துள்ளது. மேலும் இந்திய அரசுக்கு நம் எதிர்ப்பினை பதிவு செய்ய அழைக்கிறோம். அனைவரும் திரளுவோம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ற)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**அருளப்பு யோசேப்**
(தோல்கட்டி, வரணியைச்)

மலர்வு
10.07.1942

உதிர்வு
23.04.2014

அன்பாலும் பண்பாலும்
எம்மை அரவணைத்த அப்பாவே!
மாதம் ஒன்று ஓடி மறைந்தது - ஆனால்
மறையவில்லை உங்கள் மதிமுகம்
என்றும் உங்கள் நினைவுகளோடு
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.
(48336) (10)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம் கேள்வி அறிவித்தல் - 2014

1. தவிசாளர் விலகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெற தகுதியுடையராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (BLACK LIST) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட நிர் மாண வேலைக்கான இக்ராட் (Ictad) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணத்தில் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்ட தகமையை விண்ணப்பதாரர் கொண்டிருத்தல் வேண்டும். மேலதிக விவரங்கள் அட்டவணையில் (பிரிவு V) வழங்கப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலத்தில் (தொலைபேசி : 0212250144, பக்ஸ் : 0212250144) அலுவலக நாட்களில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிக்கு இடையில் 22.05.2014 ஆம் திகதியிலிருந்து 16.06.2014 வரை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் தலைமை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களையும் பார்வையிடலாம்.
6. எழுத்து மூலமான கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை அலுவலக நாட்களில் **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் 22.05.2014** ம் திகதியிலிருந்து **16.06.2014** வரை 9.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 4000/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும். கேள்விப் பத்திர பணத்துடன் மீளளிக்கப்படாத 12% பெறுமதி சேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதியையும் அதன் பிரதியையும் **"தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்"** என்ற முகவரிக்கு இடதுபக்க மேல் மூலையில் "சங்கானைபொது நூலக கேள்வி கோரல்" என குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ **17.06.2014ம் திகதி பி.ப. 2.00** மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக இடல்வேண்டும். மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு கேள்விகாரர் முன்னிலையில் கேள்விச்சபையால் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/17(2) /CF/02- 2014 | சங்கானை பொது நூலக கட்டடம் அமைத்தல் | 03 மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் (Buildings) | 85,000.00 | 13.10.2014 வரை |

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
22.05.2014

திருமதி. நாகரஞ்சினி ஜங்கரன்,
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

சீனா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஷாங்காய் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஈரானிய ஜனாதிபதி ஹசன் ருகானியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச)

## வாகனங்கள் இறக்குமதி 30 வீதத்தால் குறைப்பு

### ஆராய்கிறது அரசு

கொழும்பு.ஏப்.23
வாகன இறக்குமதியை 30 வீதத்தால் குறைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.
விரைவில் வாகன இறக்குமதியை குறைத்து, உள் நாட்டில் வாகனங்களை பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.
வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து அவற்றை இலங்கையில் பொருத்தி வாகனங்களை தயாரிக்கும் நிலையமொன்று ஏற்கனவே பொல்கஹாவெல பிரதேசத்தில் உருவாக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
வாகனங்களை உற்பத்தி செய்வது தொடர்பான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் பாகிஸ்தான் போன்ற நாடு களுடன் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.
வாகன உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் வரிக் கொள்கைகளில் மாற்றங்கள் செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## துப்பாக்கியைத் தொலைத்த இரு பொலிஸார் பணி நீக்கம்

கொழும்பு.மே 23
கடமை நேரத்தில் அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி காணா மல் போன சம்பவம் தொடர்பில் இரு பொலிஸ் உத்தியோகத் தர்கள் பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
ஹபராதுவ பொலிஸ் நிலை யத்தில் பணியாற்றிய இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உனவடுன வெல்ல தேவால யத்துக்கு அருகில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.
இதன்போது ஒரு உத்தியோ கத்தரிடமிருந்த துப்பாக்கி காணாமல் போயுள்ளது. சம் பவம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸ் தலைமை யகம் குறிப்பிட்ட இருவரையும் பணி நீக்கம் செய்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் காலி வலய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றார். (ச)

# அரசினுடைய பிழையை நியாயப்படுத்த மாட்டேன்

## அமைச்சுப் பதவியைத் துறப்பேன் என்கிறார் வாசுதேவ

கொழும்பு.மே 23
ஆளும் கட்சியில் அமைச் சராக கடமையாற்றி வரும் கார ணத்துக்காக அரசின் பிழை களை நான் நியாயப்படுத்தப் போவதில்லை.
இவ்வாறு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாண யக்கார தெரிவித்தார்.
சிங்களப் பத்திரிகையொன் றுக்கு அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசின் அனைத்துத் தீர் மானங் களையும் நான் நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எனினும், எந்தவொரு சூழ் நிலையிலும் எந்தவொரு கார ணத்துக்காகவும் அரசை வீழ்த்த நான் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை.
அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்கு இடையில் சிறந்த உடன் பாடில்லை. ஒவ்வொரு அமைச் சரும் தமது மனச்சாட்சியின் பிரகாரம் செயற்பட அனுமதி யளிக்கப்பட வேண்டும்.
அமைச்சர்கள் அரசை விமர் சனம் செய்வதைப் பிழை யாகக் கருதமுடியாது.
அரசின் நடவடிக்கைகள் தொடர் பில் திருப்தியடைய முடியாத நிலைமை ஏற்பட்டால் அமைச் சுப் பதவியைத் துறப்பேன்- என்றார். (ச)

வாசுதேவ நாணயக்கார

## ரயில் சாரதிகளின் விடுமுறை நீக்கம்

கொழும்பு.மே 23
ரயில் என்ஜின் சாரதிகளின் விடுமுறைகள் நீக்கம் செய்யப் பட்டுள்ளன என்று ரயில் கட் டுப்பாட்டு நிலையம் அறிவித் துள்ளது.
ரயில் என்ஜின் சாரதிகள் பணிக்கு சமுகமளிக்காத கார ணத்தால் நேற்றுமுன்தினம் மாலை 13 ரயில் பயணங்கள் கைவிடப்பட்டன.
அவற்றில் அதிகமானவை அலுவலக பணியாளர்கள் போக்குவரத்து செய்யும் ரயில் கள் என்பது குறிப்பிடத்தக்கது.
இதனைத் தொடர்ந்து சகல ரயில் என்ஜின் சாரதிகளின் விடுமுறைகளும் நீக்கம் செய் யப்பட்டுள்ளன.
ரயில் சாரதிகள் உடனடியாக பணிக்கு சமுகமளிக்கத் தவறி னால் வைத்தியரின் சான்றி தழை சமர்ப்பிக்க வேண்டும் என்று ரயில் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.
ரயில் என்ஜின் சாரதிகள் தொழிற் சங்கப் போராட்டங் களை முன்னெடுத்து வரு கின்ற காரணத்தால், பயணி கள் பெரும் அசௌகரியங் களை எதிர்நோக்கி வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சங்குகளைக் கடத்தியோர் கடற்படையிடம் சிக்கினர்

கொழும்பு.மே 23
சட்டவிரோதமாக கடத்திச் செல் லப்பட்ட 800 கிலோ கிராம் நிறையுடைய சங்குகளை நேற்று முன்தினம் இரவு கடற்படை யினர் கைப்பற்றியுள்ளனர்.
இது தொடர்பில் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர் என்று கடற்படைப் பேச்சாளர் கொமான்டர் கோச ல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.
கொள்ளுப்பிட்டியில் அமைந் துள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊட க மையத்தில் நேற்று வியாழக் கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
கடல் வளங்களைப் பாது காக்கும் நோக்கில் 70 மில்லி மீற்றர் நீளத்துக்கு குறைவான சங்குகளைப் பிடிப்பதும் அவற்றை எடுத்துச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. அவ் வாறு எடுத்துச் செல்லப்பட்ட 800 கிலோகிராம் நிறையுள்ள சங்குகளையே கடற்படையி னர் கைப்பற்றியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

## எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்

### ஜக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.23
எதிர்காலத்தில் நடைபெறும் எந்தத் தேர்தலையும் எதிர் கொள்ளத் தயார் என்று ஜக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
அடுத்து எந்தத் தேர்தல் நடை பெற்றாலும் அதில் ஜக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறும் என்று அவர் கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசு தற்போது இரட்டை நிலைப் பாட்டில் இருந்து வருகிறது. 2016 ஆம் ஆண்டுக்கு முன் னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு முன்னர் தீர்மானித் திருந்தது.
மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் அரசின் வாக்குகள் சரிந்ததால், அரசின் நோக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமாயின், அளிக் கப்படும் மொத்த வாக்குகளில் 50 வீதமான வாக்குகளை பெற வேண்டும். மாகாண சபைத் தேர்த லில் அரசின் வாக்குகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இதன் காரணமாகவே ஜனாதி பதித் தேர்தலுக்கு மாறாக பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அரச அமைச்சர்கள் கூறி வருகின்றனர்.
எந்த தேர்தல் நடத்தப்பட்டாலும் அதற்கு ஜக்கிய தேசியக் கட்சி தயாராகவே இருக்கின்றது. அடுத்து நடைபெறுவது ஜனாதி பதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தலாக இருந்தாலும் அர சின் தோல்வி நிச்சயமானது. பொதுத்தேர்தலில் அரசைத் தோற் கடிக்க முடியும்-என்றார். (ச)



தீஸ்ஸ அத்தநாயக்க

## கையடக்க தொலைபேசிகளை முடக்க ஆராய்கிறது அமைச்சு

கொழும்பு.மே 23
நாட்டின் முக்கியமான சிறைச் சாலைகளில் கையடக்கத் தொலை பேசிகளை முடக்குவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது.
சிறைச்சாலைகளுக்குள் கைய டக்கத் தொலைபேசி பயன் பாட்டை முடக்க சிறைச்சாலை கள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளது.
ஏற்கனவே இவ்வாறான யோச னைத் திட்டமொன்று முன் மொழியப்பட்ட போதிலும், அதிக செலவு ஏற்படும் என்ற காரணத் தால் அது நடைமுறைப்படுத் தப்படவில்லை என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
எனினும், சிறையின் ஊடாக இடம்பெற்றுவரும் பாதாள உல கக் கோஷ்டிகளின் செயற்பாடு களை கட்டுப்படுத்த கையடக் கத் தொலைபேசிகளை முடக்க வேண்டியுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
புதிய தொழில்நுட்பம் அரசுக்கு பொருள் செலவை ஏற்படுத் தும் என்று அமைச்சு சுட்டிக் காட்டி யுள்ளது. சிறைச்சாலைகளில் அண்மையில் மேற்கொள்ளப் பட்ட சுற்றி வளைப்புக்களின் போது பல கையடக்கத் தொலை பேசிகள் மீட்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ச)

## இணையத்தளங்கள் முடக்கப்பட்டதை எதிர்த்து முறைப்பாடு

கொழும்பு.மே 23
இலங்கையில் இணையத் தளங்கள் முடக்கப்பட்டமைக்கு எதிராக தொழில்சார் இணைய ஊடகவியலாளர்கள் சபை மற் றும் சில அரசியல் கட்சிகள் இணைந்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளன. சில இணை யத்தளங்கள் சட்ட விரோத மான முறையில் முடக் கப்பட்டுள் ளன என்று அந்த முறைப்பாட் டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இணையத்தளங்களை தடை செய்வதன் மூலம் அரசு அரச மைப்பை மீறியுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இதேவேளை இலங்கையில் இணையத் தளங்கள் முடக் கப்பட்டுள்ளன என்று ஜக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.
அரச தகவல் திணைக்களத் தில் பதிவு செய்யப்பட்ட சில இணையத் தளங்கள் கூட உத்தியோகப்பற்றற்ற ரீதியில் முடக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

# புதிய தலைமை கட்டமைப்பு அம்பாறையில் மிக விரைவில்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த நடவடிக்கை

அம்பாறை.மே 23

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களிடம் எதிர்கால நலன் கலைக் கருத்தில் கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டத்துக்கான தலைமைக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது தேவைகள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவும், அவற்றுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவுமென இந்தத்தலைமைக்கட்டமைப்பு செயற்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா இதற்கான துரித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்

மாவை சேனாதிராசா

களான மாவை சேனாதிராசா, சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலரை இணைத்து இத்தலைமைக் கட்டமைப்பு ஸ்தாபிக்கப்படவுள்ளது.

முழு அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நலன்கருதி இந்தக் கட்டமைப்பின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இதேவேளை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தொடர்பில் காத்திரமான ஆலோசனைகளைக் கட்சிக்கும், குறித்த மாவட்டத் தலைமைக் கட்டமைப்புக்கும் வழங்குவதற்கென ஐந்துபேர் கொண்ட புத்திஜீவிகள் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பீ.எச்.பியசேன, அரசு பக்கம் தாவியதைத் தொடர்ந்து, அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கென நாடாளுமன்றப் பிரதிநிதி ஒருவர் இல்லாத குறை இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(ச-30)

திருமலை உட்துறைமுக வீதியருகே காணப்படும் கரையோரப் பிரதேசங்களில் கடந்த சில நாள்களாக அதிகமான மீன்கள் பிடிபட்டு வருகின்றன. அதனால் மீனவர்கள் மீன்பிடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

# தென்கிழக்குப் பல்கலை பட்டமளிப்பு விழா நாளை

சம்மாந்துறை.மே 23

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது என்று பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எச். அப்துல் சத்தார் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் திறைசேரியின் செயலர் பி.பி.ஜயசுந்தர பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் கலை, கலாசாரபீடத்திலிருந்து 167 பட்டதாரிகளும், வர்த்தக முகாமைத்துவ பீடத்திலிருந்து 134 பட்டதாரிகளும், இஸ்லாமிய, அரபு மொழிப்பீடத்திலிருந்து 107 பட்டதாரிகளும், பிரயோக விஞ்ஞான பீடத்திலிருந்து 33 பட்டதாரிகளும் தமக்குரிய பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாதென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 9 ஆவது பட்டமளிப்பு விழா என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சமூர்த்தி உத்தியோகத்தர்கள் அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை.மே 23

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் மற்றும் சமூர்த்தி முகாமையாளர்களும் இணைந்து எதிர்வரும் 27 ஆம் திகதி அம்பாறை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கான அழைப்பை அம்பாறை மாவட்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் சமூர்த்தி முகாமையாளர் சங்கம் என்பன இணைந்து விடுத்துள்ளன.

வாழ்வெழுச்சித் திணைக்களத்தில் சமூர்த்தி அபிவிருத்தி

**உள்ளீர்ப்பு செய்யும் வேலைத் திட்டத்தில் காணப்படும் வெளிப்படைத் தன்மையற்ற நிலையைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது..**

உத்தியோகத்தர்கள் மற்றும் சமூர்த்தி முகாமையாளர்களை உள்ளீர்ப்பு செய்யும் வேலைத் திட்டத்தில் காணப்படும் வெளிப்படைத் தன்மையற்ற நிலையைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

வாழ்வெழுச்சித் திணைக்களத்தினுள் சமூர்த்தி அதிகாரிகளை உள்ளீர்ப்புச் செய்யும் பொருட்டு தெரிவு முறைக்கான விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டிருந்தன.

ஆனால் தினைக்களத்துக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் போது அந்த உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் குறியீட்டு முறைமை அறிவிக்கப்படாமை, பதவி உயர்வு முறை எதுவும் தெரிவிக்கப்படாமை உட்பட பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன என்று இந்தச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# கஞ்சா வைத்திருந்த இருவருக்கு அபராதம்

அம்பாறை.மே23

அம்பாறை, தமனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பக்குமிட்டியா, ஹிங்குராகொட ஆகிய பிரதேசங்களில் கஞ்சா வைத்திருந்த இருவருக்கு அம்பாறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் றோமந்த பெரோரா 20,000 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் அம்பாறை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னிலைப்படுத்தியபோதே தலா 10,000 ரூபா வீதம் அம்பாறை மாவட்ட நீதிவான் அபராதம் விதித்துள்ளார். (ச)

# இந்து ஆலயங்களில் உண்டியல் திருட்டு

திருக்கோவில், மே 23

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு இந்து ஆலயங்களில் இருந்து இனம் தெரியாத நபர்களால் இரவு வேளைகளில் உண்டியல்கள் திருடப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

திருக்கோவில் அம்மன் ஆலயம், வெட்டுக்குளத்து பிள்ளையார் ஆலயம்ஆகியஇருஆலயங்களிலேயே குறிப்பிட்டதிருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்று ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் கூறினர். (ச)


ஓராண்டு ஓடியதோ?
உயிரே உமை இழந்து!

அமரர்
வேலுப்பிள்ளை குணரத்தினம்
(மில் குணம்)

அரும்பாய் மண்ணில்
24.12.1936

விதையாய் விண்ணில்
03.06.2013

திதி: 23.05.2014

ஆருயிர் முற்றும் மேவி அருள்தனைச் சுரந்து நின்ற
அப்பா நீர் அகன்றுபோய் ஆண்டொன்று ஆயிற்றன்றோ?
பேரிடர் சுமந்தோம் உங்கள் பெருமைகள் மறப்போமோ?
மனைவி, பிள்ளைகள், மருகர், பேரர் சூழவே உருகி நின்றோம்.
நேரிய வழியில் நின்று நெறிபல சொன்னீர் ஐயா
நினைவுகளை மறப்போமோ நிலையெண்ணி அழுதிட்டோமே!
தேறிய இறைவன் தாளில் திருவுற அமர்வீர் - நாங்கள்
திருவுறு மலர்கள் தூவி வணங்கினோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சோலை அம்மன் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(C/7695)(7.6.3)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16.05.1931

மறைவு
02.06.2013

பேரம்பலம் சரவணமுத்து
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)
திதி: அபரபக்க நவமி

என் அருமை அப்பாவே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலாது

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

ச.ரவிந்திரன் (மகன்).

(48304)(12.3.6)

# அரச ஊழியர்கள் வீடுகளை அமையுங்கள்

## பணிகளை ஆரம்பிக்க அதிகாரிகளுக்கு உத்தரவு

வவுனியா, மே 23

வவுனியா, ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் இலவசமாக காணிகளைப் பெற்றுக்கொண்ட அரச ஊழியர்கள் வீடுகளை அமைக்க வேண்டும்.

வீடுகளை அமைக்காதுவிட்டால் அவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை இரத்துச் செய்து வேறு அரச ஊழியர்களுக்கு அந்தக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்தார்.

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட அபிவிருத்திக் குழுவினருக்கும், வவுனியா மாவட்ட அரச அதிபருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> மூன்று ஆண்டுகள் ஆகியும் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் காணிகளைப் பெற்றவர்களில் சிலர் வீடுகளை அமைக்கும் பணியை ஆரம்பிக்கவில்லை.

மூன்று ஆண்டுகள் ஆகியும் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் காணிகளைப் பெற்றவர்களில் சிலர் வீடுகளை அமைக்கும் பணியை ஆரம்பிக்கவில்லை.

அதனால் அங்குள்ள ஏனைய அரச ஊழியர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அங்கு வீடுகளை அமைத்து வாழும் அரச ஊழியர்களின் நலன் கருதி அந்தப் பகுதிக்குத் தினமும் பஸ் சேவை நடத்தப்பட வேண்டும் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய உடனடியாகக் கோப்சிற்றியும் அமைக்கப்பட வேண்டும்.

ஆன்மிகத் தேவையைப் பூர்த்தி செய்ய மத வழிபாட்டுத் தலங்களை அமைக்க வேண்டும். சிறார்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய முன்பள்ளி அமைக்கப்பட வேண்டும். எனவே இந்தத் திட்டங்களுக்கு பொறுப்பானவர்கள் பணிகளை உடன் ஆரம்பிக்க வேண்டும். காணிகள் உரிய வகையில் வீடமைப்பு அதிகார சபையின் மூலம் கையளிக்கப்பட்டு காணி உரிமையாளர்கள் அச்சமின்றி வீடுகட்ட காணி உறுதிப் பத்திரங்களை வழங்க ஏற்பாடுகளைச் செய்யவுள்ளேன். வீட்டுத்திட்டம் தொடர்பாக அரச ஊழியர்கள் அச்சப்படத் தேவையில்லை. அவர்கள் அங்கு வசதியாக குடியமர முடியும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட அபிவிருத்திக் குழுச் செயலர் க.பேனாட், அபிவிருத்திக்குழுத் தலைவர் வே.இந்திரன், வீடமைப்பு அதிகார சபை வவுனியா மாவட்ட முகாமையாளர் எம். குரூஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ச-402)

சேதமடைந்த வீதி

# புனரமைப்பு இன்றி புளியங்குளம் வீதி

## தினமும் வீதி விபத்துக்கள்

முள்ளியவளை, மே 23

முள்ளியவளை, ஆலடிச் சந்தியிலிருந்து காட்டாவிநாயகர் ஆலயத்துக்கு முன்னால் செல்லும் தண்ணீரூற்று -புளியங்குளம் பிரதான வீதி புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. அதனால் இந்த வீதியால் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

புனரமைப்பு இன்றிய இந்த வீதியில் தினமும் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.

எனவே இந்த வீதியை சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ச-102)

# எந்தச் செயலைச் செய்யவும் தகுதியும் திறனும் அவசியம்




எந்த ஒரு செய்லைச் செய்வதற்கும் தகுதியும் திறனும் அவசியம். அதனைப் பெற முயற்சிக்க வேண்டும். அல்லது அத்தகுதி உள்ளவர்களிடம் அக்கடமையை ஒப்படைக்க வேண்டும். அதே போல், தகுதியான காலத்தை அறிந்து ஏற்றவொரு இடத்தில் அச் செயலை முன்னெடுத்தால் இவ்வுலகையே ஆளநினைத்தாலும் அது கைகூடும். "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று மேலும் கூறுவார் வள்ளுவர். எந்தச் செயலையும் அதற்குரிய காலம் அறிந்து செய்தலே சிறப்பு. தவறான காலத்தில் தவறான செயல்களைச் செய்து தவறான பலனைப் பெறுவதைவிட எதுவும் செய்யாமலிருப்பது சாலச் சிறந்ததாகும்.

சாஸ்திரங்களும் நீதி நூல்களும் அவரவர்க்குரிய கடமைகளை வகுத்துத் தந்திருக்கின்றன. தத்தமக்குரிய தர்மங்களை ஒவ்வொருவரும் செய்தலே முறை. செய்யாமல் விடுவது பாவம். அதுமட்டுமல்லாமல் சாஸ்திரங்கள் இன்னொன்றையும் தெளிவாகக் கூறுகின்றன. தனக்குரிய கடமைகளைச் செய்யாமல் விடுவது எவ்வளவு பாவமோ அதைவிடப் பாவம் பிறர்க்குரிய கடமையைத் தான் செய்வது.

எனவே யார் எதைச் செய்ய வேண்டும் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அடுத்துக் காலமும் இடமும் முக்கியமானவை என்பதால் எங்கே, எப்போது அதனைச் செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

# நாடு கடத்தப்பட்ட பிரிட்டன் பெண் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல்

கொழும்பு, மே 23

புத்தரின் படத்தைப் வலது கையில் பச்சை குத்தியிருந்த குற்றத்துக்காக நாடு கடத்தப்பட்ட பிரிட்டன் பெண், குறித்த நடவடிக்கைக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நயோமி மிச்செல் கொல்மென் (வயது-37) என்ற பிரிட்டன் தாதியொருவர், தமது வலது கையில் புத்த பகவானின் படத்தைப் பச்சை குத்தியிருந்தார் என்ற குற்றத்துக்காக நாட்டுக்குள் நடமாட அனுமதிக்கப்படாமல், கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டார்.

இதற்கு எதிராகவே அவர் ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். தான் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர் என்றும், புத்த பகவான் மீது தமக்குள்ள பக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் தாமரை மலரில் புத்தர் அமர்ந்திருப்பது போன்ற சித்திரத்தைத் தாம் தமது வலது கையின் தோள்பட்டையில் பச்சை குத்தியிருக்கிறார் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

புத்தர் படத்தை பச்சை குத்திய பெண்

என்னை நாடு கடத்தியமை சட்டவிரோதமானது. அதனால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நட்ட ஈடாக ஒரு கோடி ரூபா பெற்றுத் தருமாறு நீதி மன்றத்தைக் கோரியுள்ளார்.

குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர், பொலிஸ்மா அதிபர், பொலிஸ் சார்ஜண்ட் உபசேனா, இன்ஸ்பெக்டர் சுரவீர, நீர்கொழும்பு சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(ச)

# சிங்கத்துக்கு தடுப்பூசி; விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மே 23

தெஹிவளை மிருகக்காட்சி சாலையிலுள்ள நோய்வாய்ப்பட்ட சிங்கமொன்றுக்குப் பதிலாக வேறு சிங்க மொன்றுக்கு நோய்த்தடுப்பூசி ஏற்றிய சம்பவம் தொடர்பில் தாவரவியல் பூங்கா பொதுப் பொழுதுபோக்கு அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுமார் 20 வயதைத் தாண்டிய சிங்கமொன்றுக்கு தடுப்பூசி ஏற்ற வேண்டிய நிலையில் அதே கூண்டிலிருந்த மற்றொரு சிங்கத்துக்கு மிருக வைத்தியர்கள் தடுப்பூசி ஏற்றியுள்ளனர் என்று அமைச்சின் செயலாளர் விலிகமகே தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தால் மிருக வைத்தியர்களுக்கும் ஊழியர்களுக்கு மிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு பதற்ற நிலை உருவாகியது அதன் பின்னர் நோய்வாய்ப்பட்டிருந்த சிங்கத்துக்கு தடுப்பூசி ஏற்ற மருத்துவர்கள் நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

(ச)

31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 10.08.1932

இறப்பு 24.04.2014

கடந்த 24.04.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் செல்லத்துரை கந்தசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.05.2014) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (24.05.2014) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

280 ஆவது கி.மீ.கட்டை, A-9 வீதி, வண்ணாங்கேணி, யாழ்.

(48308)(45,6,5)

மனைவி, பிள்ளைகள்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

பூமணி செல்வராசா

தோற்றம் 31★03★1934

மறைவு 23★04★2014

கடந்த 23.04.2014 சிவபதமடைந்த எமது தாயார் பூமணி செல்வராசா அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி மூலமாகவும், உள்ளூர், வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (23.05.2014) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியையிலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில்தெற்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

# உபய மெதவலவுக்கு புதிய பொறுப்பு

கொழும்பு.மே 23
வடமேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாண வல யத்துக்குப் பொறுப்பான கட்ட ளையிடும் படைத் தளபதி யாக மேஜர் ஜெனரல் உபய மெதவல நியமிக்கப்பட்டுள் ளார்.
இராணுவத் தளபதியின் பரிந் துரையின் பேரில் இந்த நிய மனம் வழங்கப்பட்டுள்ளது.
முன்னர் இந்தப் பதவியில் இருந்த மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா இராணுவ தலைமையக பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள் ளார்.
உபய மெதவல முன்னர் மத் திய பாதுகாப்பு படை கட்டளைத் தளபதியாக செயற்பட்டு வந் தார். உபய மெவல எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை புதிய பதவியைப் பொறுப்பேற்க வுள்ளார். (ச)

# பொதுபல சேனாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு.மே 23
பொதுபல சேனா நாட்டுக்கும் பௌத்த மதத்துக்கும் பிரச் சினைகளைக் கொண்டு வரு வதாகக் குற்றஞ்சாட்டியிருக் கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அதனால் பொதுபல சேனாவுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் என்று சட்டமா அதிபர் பாலித பெர்னான்டோவைக் கேட்டுக்கொண்டுள்ளது.
பொதுபல சேனாவின் விட யத்தில் உரிய நடவடிக்கை களை எடுப்பதற்கு சட்டத்தை நிலைநாட்டுவதற்குப் பொறுப் பான அதிகாரிகள் தவறிவிட் டார்கள் என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உப்புல் ஜெயசேகர தெரிவித்தார்.
இந்த விடயத்தில் காலம் தாழ்த்தாமல் சட்டமா அதிபர் தலையிட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (ச)

# போதைவஸ்து கடத்தல்காரர் கொழும்பில் கைது

கொழும்பு.மே 23
மாலைதீவின் பிரபல போதை வஸ்து கடத்தல்காரர் இப்ரா ஹிம் ஷாபா அப்துல் ரஸாக் என்பவர் கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்
அவர் மாலைதீவு மற்றும் இலங்கைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மாலைதீவில் கைது செய்யப் பட்ட ஷாபா மருத்துவ சிகிச் சைக்காக கடந்த மார்ச்சில் பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டார்.
இலங்கைக்கு மருத்துவ சிகிச்சை பெறவென வந்த அவர், குறித்த காலம் முழந்த பின்னரும் நாடு திரும்பவில்லை. இதேவேளை பிணைக் காலத்தை நீடித்துத் தருமாறும் கோரவில்லை.
அதனையடுத்தே அவர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று மாலைதீவின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
இவருக்கு 2013 ஆம் ஆண்டு மாலைதீவு நீதிமன்றம் ஒன் றில் போதைவஸ்து குற்றச் சாட்டுக்காக 18 வருட சிறைத் தண்டனை விதித்கப்பட்டது. எனினும் சர்ச்சைக்குரிய வகை யில் அவருக்குபிணைவழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.
(ச)

# சீன ஆய்வாளர்கள் இலங்கை வருகை

மன்னார்.மே 23
மன்னார் பழைய துறை முகத்தை அண்மித்த பகுதிக ளில் அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சீனா வின் தொல்பொருள் ஆய்வாளர் கள் சிலர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.
சீனாவின் தொல்பொருள்துறை பேராசியர் ஒருவரும் கலாநிதி ஒருவரும் இந்த குழுவில் உள்ளடங்குகின்றனர் என்று தொல்பொருள் திணைக்க ளத்தின் அகழ்வுப் பிரிவுக்கான பணிப்பாளர் நாமல் கொடித் துவக்கு தெரிவித்தார்.
இந்த குழுவினர் தொல் பொருள் திணைக்களத்துடன் இணைந்து, மன்னார் பழைய துறைமுகத் தில் பண்டைய காலத்தில் கப்பல் போக்கு வரத்து எவ்வாறு முன்னெடுக் கப்பட்டது என்று ஆய்வு செய்யவுள்ளனர்.
நாட்டின் பண்டைய துறை முகங்களில் மன்னார் துறை முகமும் ஒன்றாக கருதப்படு கின்றது என்று அவர் கூறினார்.
சுமார் 2600 வருடங்களுக்கு முன்னரான காலப்பகுதியில் இந்தத் துறைமுகத்தில் கப்பல் போக்குவரத்து இடம்பெற்ற மைக்கான சான்றுகள் கிடைத் துள்ளன. (ச)



சாய்ந்தமருது பிரதேச மீனவர்களின் வலையில் நேற்று வியாழக்கிழமை சிக்கிய 1200 கிலோ கிராம் நிறையுடைய இராட்சதத் திருக்கை.

# ஒலுவில் துறைமுகத்தில் ஈரான் முதலீட்டாளர்கள்

மட்டக்களப்பு.மே 23
கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமதின் ஆலோசனைக்கமைவாக நேற்று

ஒலுவிலில் முதலீட்டாளர்கள்

முன்தினம் புதன்கிழமை ஒலுவில் துறை முகத்துக்கு ஈரானில் இருந்து முதலீட்டா ளர்கள் வருகைதந்துள்ளனர்.
அட்டாளைச்சேனை பிரதேச சபையின் துணைத் தவி சாளர் ஏ.எல். அமனுள்ளா, பிரதேச சபையின் உறுப்பி னரும் அம்பாறை மாவட்டப் பொதுப்பணிகள் அமைப் பின் தலைவருமான எஸ். எல்.முனாஸ் உட்பட பலர் இந்த முதலீட்டாளர்களை வரவேற்று பேச்சு நடத்தியுள்ளனர்.
இந்தப் பேச்சில் கிழக்கு மாகாணத்தில் வேலை யற்ற இளை ஞர், யுவ திகளுக்கு தொழில் வாய்ப் புக்களை ஏற்ப டுத்தி கொடுக்கவேண்டும் என்று வலி யுறுத்தப்பட்டது. (ச)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்

தங்காலை நீதிமன்றுக்கு முன்பாக கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த சந்தேகநபர் தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் தங்காலை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்னர் மீள அழைத்து வரப்பட்டபோது இனந்தெரியாத மூவர் அவர் மீது துப்பாக் கிச்சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படு கிறது. (ச)


## கேள்விகோரல்

சாவகச்சேரி பிரதேசசபையின்
**குப்பை ஏற்றும் உழவு இயந்திரப்பெட்டிக்கு கூடாரம் அடிக்கும் பொருட்டு**
பொருத்தமானவர்களிடமிருந்து கேள்வி கோரப் படுகின்றது.
எனவே இவ்வேலைத்திட்டத்தினைசெய்ய விரும்புவோர் அலுவலக நேரத்தில் (காலை 8.30 - மாலை 3.30 மணிவரை)
மீளளிக்கமுடியாத **கேள்விப்பத்திர தொகையாக ரூபா 855.00** (VAT, NBT உட்பட)
**மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புத் தொகையாக ரூபா 1000.00** செலுத்தி விண்ணப்பத்தினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.
கேள்விப்பத்திரம் வழங்கப்படும் காலம்: 23.05.2014-05.06.2014 வரை.
கேள்விப்பத்திரம் ஏற்கும் காலம்: 06.06.2014 மதியம் 12.00 மணிவரை.
கேள்வி திறக்கப்படும் காலம்: 06.06.2014 பி.ப.2.00.
**சிற்றம்பலம் துரைராஜா**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
22.05.2014
(இ/7696) (364)



## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை திருமுத்துராசா

யாழ்.வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை திருமுத்துராசா 20.05.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப் பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், குகமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், மணிவண்ணன், மதிவண்ணன், மலர்விழி, ஜெயமணி, குகவண்ணன், திருமகள், சிவவண்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான தேவசிகாமணி, அமிர்தசிகாமணிப்பிள்ளை, புனிதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மலர்விழி, வசந்தராணி, ரூபன், குகனேஸ்வரன், குணாதிகா, தேவானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருஞானசௌந்தரி, நாகேஸ்வரி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரூபினி, ரூகனா, சஜிந்தன், சதுர்சன், ரூபிகா, ரக்சனா, ரம்சன், நிசானா, நிசானி, டினேஸ், சுயாஸ், மகீஸ், சிவமதூர், சுவேந்தர், யவாகர், திவிஸ், நிகேஸ், நிவேகா, பிரவீன், பிறினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2014) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
021 225 0864,
077 272 6136
(48200) (12.6.3)
தகவல்: குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா திருஞானசம்பந்தர்**
**(அம்பிகாவதி)**

தோற்றம் 17.07.1925 — மறைவு 02.06.2013

திதி: தசமி 23.05.2014

ஓர் ஆண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை
எங்கள் துயர் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பிளாவை,
கோப்பாய் வடக்கு,
கோண்டாவில்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர் - 077 654 4610
(48320)(45.3.6)

தமிழ் நாடு சென்னை இராஜா அண்ணாமலை மன்றத் தமிழ் இசைச் சங்கத்தில் அண்மையில் அரனருள் நடத்தும் 11 ஆவது ஆண்டு திருமுறை இசை விழாவில் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையாற்றிய நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் கொக்குவில் பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்த சர்மாவைப் பாராட்டி அரனருள் ஸ்தாபகர் சாமி. தண்டபாணி ஓதுவார் பொன்னாடை போர்த்தி கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# நெல்லியடியில் புதிய பஸ் நிலையம் அமைக்க 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு

## வடமாகாண போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

மாங்குளம், மே 23

நெல்லியடி பகுதியில் புதிய பஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு வட மாகாண போக்குவரத்து அமைச்சினால் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண போக்குவரத்துறை அமைச்சர் பொ.டெனீஸ்வரன் நேற்றுமுன்தினம் நெல்லியடி பஸ் நிலையத்தை நேரில் பார்வையிட்டார்.

போதிய நிதி வசதி இன்மையால் புதிய பஸ் நிலையம் ஒன்றை அமைக்க முடியாதுள்ளதாக வடமராட்சி தெற்கு - பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசு போக்குவரத்து அமைச்சரிடம் சுட்டிக் காட்டினார்.

உடனடியாக 2 மில்லியன் ரூபாவை புதிய பஸ் நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்வதாக அமைச்சர் உறுதியளித்தார். தேவைப்படும் மேலதிக நிதியை வட மாகாண சபை உறுப்பினர் களாக வி. சிவயோகன், ச. சுகிர்தன், விந்தன் கனகரட்ணம் ஆகியோரின் வரவு- செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்குவது எனவும் இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, நெல்லியடி சந்திப் பகுதியில் அமைந்திருந்த பஸ் நிலையம் வீதி அகலிப்புப் பணிகளுக்காக இடித்து அழிக்கப்பட்டு 2 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை அதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இதனால் பயணிகள் பெரும் சிரமங் களை எதிர் நோக்கி வருகின்ற னர் என்பதும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-400.422.173)

# வெளிநோயாளர் பிரிவு இயங்கும் நேரம் நீடிப்பு

## வரணி மருத்துவமனையில்

தென்மராட்சி, மே 23

வரணி பிரதேச மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு இனிவரும் காலத்தில் காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைக்குப் புதிய மருத்துவரொருவர் நியமிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் அவர் கடமைகளைப் பொறுப்பேற்றதை அடுத்து புதிய நடைமுறை செயற்படுத்தப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை ஒரு மருத்துவரும் பிற்பகல் 2 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை மற்றைய மருத்துவரும் வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# கொக்குவில் சந்தை தொகுதியில் விரைவில் உப தபாலகம், வங்கி

யாழ்ப்பாணம், மே 23

கொக்குவில் பகுதியில் நல்லூர் பிரதேச சபையால் புதிதாக அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத்தின் முதல் தளத்தில் உப தபாலகம், வங்கி என்பனவும் விரைவில் இயங்க ஆரம்பிக்கும் என்று நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப. வசந்த குமார் தெரிவித்தார். சபை நிதியில் இருந்து ரூபா 19.5 மில்லியன் செலவில் புதிய சந்தைக் கட்டடத்தின் கீழ்தளம் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில்கட்டத்தின்முதலாவதுமாடி வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு அதில்உபதபாலகம், வங்கிஎன்பன இயங்க உள்ளன. (உ-7)

# மின்வெட்டு

யாழ்ப்பாணம், மே 23

உயர் அழுத்த, தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை குடாநாட்டின் சில பகுதிகளில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

மல்லாகம், கட்டுவன் வீதி, ஏழாலை, மயிலங்காடு வீதி, விழிசிட்டி, உத்தமன்சிலையடி, கோண்டாவில்- இருபாலை வீதி உணவுக் களஞ்சியம் வரை, நவரட்ணராஜா வீதி, உணவுக்களஞ்சிய வீதி, நந்தாவில் அம்மன் கோயிலடி ஆகிய இடங்களில் மின்வெட்டு அமுலில் இருக்கும்

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வைமன் வீதி, பல்கலைக்கழக விஞ்ஞானபீட பிரதேசம், அரசடி வீதி, கோயில் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்டம் வீதி, ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, கச்சேரி, குருசோ வீதி, கொழும்புத்துறை, பாஷையூர், துண்டி, ஈச்சமோட்டை, மகேந்திரபுரம், எழிலூர், நெடுங்குளம், மணியந்தோட்டம், உதயபுரம், ஆனந்தன் வடலி வீதியின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும்.

இலங்கை மின்சார சபை யின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் இந்தத் தடையை அறிவித்துள்ளார். (க)

# அனுமதியின்றி சாராயம் விற்ற நபர்களுக்குத் தண்டம் விதிப்பு

தென்மராட்சி, மே 23

அனுமதியின்றி சாராயம் விற்ற இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் வீடுகளில் பழுதடைந்த கள் வைத்திருந்த 8 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகள் நேற்று முன்தினம் தனித்தனியாக விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. எதிரி கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (வ-9)

# கணவன் தாக்கி மனைவி காயம்

தென்மராட்சி, மே 23

கணவனால் மோசமாகத் தாக்கப்பட்ட பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

குடும்பத்தகராறு காரணமாகவே இந்தச் சம்பம் நடந்துள்ளது.

முல்லைத்தீவு, வற்றாப்பளையைச் சேர்ந்த 21 வயது குடும்பப் பெண்ணே பாதிக்கப்பட்டார்

கணவர் பறித்துச் சென்ற பத்துமாதமே நிறைந்த பெண் குழந்தையை மீட்கச் சென்ற சமயமே குறித்த பெண் கணவரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

மோசமாகப் பாதிக்கப்பட்ட மனைவி அரவது பெண் குழந்தையுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

# புதுப்பொலிவு பெறுகிறது அல்வாய் அம்பாள் வித்தி.

யாழ்ப்பாணம், மே 23

பல வருடங்களாகப் பெரும் வளப் பற்றாக்குறையுடன் இயங்கி வந்த அல்வாய் அம்பாள் வித்தியாலயம் தற்போது புதுப் பொலிவு பெற்று வருகின்றது என்று அதிபர் ஆ. சூசைநாதர் தெரிவிக்கிறார்.

கடந்த ஜனவரி மாதத்தில் பாடசாலைக்கு புதிய அதிபரும், ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கல்விச் செயற்பாடுகளும், இணைபாட விதானச் செயற்பாடுகளும் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவையான உதவிகளை வடமராட்சி கல்வி வலயம் வழங்கி வருகின்றது. கால்கோள் விழா, பொங்கல் விழா, விளையாட்டுப் போட்டி என்பன கடந்த மாதங்களில் சிறப்பாக இடம்பெற்றன.

பாடசாலை புத்துயிர் பெற்றிருப்பதை அடுத்து இந்த ஆண்டு பாடசாலையில் இணையும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கிறார் அதிபர். "கடந்த வருடங்களில் பாடசாலையில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வந்தமைக்கு முற்றிலும் மாறான நிலை இது" என்றும் அவர் கூறுகின்றார்.

வித்தியாலய சூழலில் சிரமதானப் பணி இடம்பெற்றவேளை...

பாடசாலை புதுமெருகு பெறத் தொடங்கியிருப்பதையடுத்து பெற்றோர் மற்றும் அயல் சமூகத்தவரின் ஒத்துழைப்பும் அதிகரித்துள்ளது. "கூட்டங்கள், சந்திப்புக்கள், சிரமதானம் என்பவற்றில் இப்போது பெற்றோரும்அயலவர்களும்தாமாக முன்வந்து பங்களிக்கிறார்கள்" என்றார் அதிபர். பாடசாலையின் மட்டை வேலி பொது மக்கள் பங்களிப்புடன் மதிலாக மாறியுள்ளது. பூந்தோட்டம், தோட்டமென பாடசாலை வளாகம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. கல்வி அடைவு மட்டத்தை அதிகரிக்கும்நோக்குடன்மாலை நேர வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்றும் அதிபர் கூறுகின்றார். "விரைவில் எமது மாணவர்கள் பல சாதனைகளைப் படைப்பார்கள்" என்கிறார் அதிபர் ஆ. சூசைநாதர். (உ)

# கப்பல் வாழைச் செய்கையை ஊக்குவிக்க ஹேலீஸ் உதவி

## வாழைக்குட்டிகளும், தொழில்நுட்ப உதவிகளும் இலவசம்

அச்சுவேலி, மே 23

ஹேலீஸ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட விவசாயப் பிரிவு கப்பல்வாழைப்பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க முன்வந்துள்ளது. இழைய முறையில் இன விருத்தி செய்யப்பட்ட கப்பல் வாழைக்குட்டிகளை இலவசமாக வழங்க முன்வந்துள்ள அந்த நிறுவனம் அவற்றைச் செய்கை பண்ணுவதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க உள்ளது.

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கப்பல் வாழைப் பழத்துக்கு (கோழிக்கோடு வாழை) அதிகூடிய விலையும் நல்ல சந்தை வாய்ப்பும் உள்ளது. தற்பொழுது கதலி, இதரை ரக வாழைப்பழங்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கிலோ வொன்று 10 ரூபா தொடக்கம் 20 ரூபா வரையிலேயே அவை விற் பனை செய்யப்படுகின்றன. ஆனால் கப்பல் வாழைப் பழம் கிலோ 100 ரூபா வரையில் விலை போகின்றது.

கப்பல் வாழைப் பயிர்ச் செய்கை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஹேலீஸ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட விவசாயப் பிரிவு, தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக இழைய வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்து வளர்க்கப்பட்ட கப்பல் வாழைக் குட்டிகளை வழங்க வுள்ளது. அதற்கான வளர்ப்பு மற்றும் விருத்தி தொடர்பான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி, பராமரிப்பு மேற்பார்வை என்பனவற்றையும் இலவசமாக வழங்க முன்வந்துள்ளது. இழைய வளர்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட வாழைக் குட்டி ஒன்று 150 ரூபா வரையில் யாழ்ப்பாணத்தில் இப்போது தனியாரினால் விற்பனை செய்யப்படுகின்றது.

கோண்டாவிலில் செயற்படும் ஹேலீஸ் நிறுவன முகாமையாளர் எஸ். எட்வின் தமது செயற்றிட்டம் தொடர்பாகத் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் செயற்படத் தொடங்கிய காலத்தில் இருந்து எமது விவசாயப் பிரிவு விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கிருமிநாசினி வகை, நல்லினவிதை, விதை நெல்

கோப்புப்படம்

போன்றன நியாய விலையில் விற்பனைசெய்யப்படுகின்றன.

கப்பல் வாழைப்பயிர்ச் செய்கை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக ஒவ்வொரு விவசாயிக்கும் இழைய வளர்ப்பு முறையில் விருத்தி செய்யப்பட்ட 10 வாழைக்குட்டி களும் அவற்றின் பராமரிப்பு தொடர்பான தொழில்நுட்ப உதவிகளும் இலவசமாக வழங்கப் படவுள்ளன. இது முதற்கட்டமே. தொடர்ந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

இழைய வளர்ப்பு முறையில் இன விருத்தி செய்யப்பட்ட நல்லின வாழைக்குட்டிகள் நோய்த் தாக்கம் இன்றி வளரக் கூடியவை. நல்ல விளைச் சலைத் தரக்கூடியவை. இந்தக் குடும்பத்தில்இருந்துபெறப்படும்வாழை மட்டங்களில் இருந்து இழைய வளர்ப்பு முறைக்கான மூலகம் பெறப்படும் - என்றார். (உ-11)

## வவுனியாவில் போலியான மிருக வைத்திய நிலையங்கள்

வவுனியா, மே 23

வவுனியா நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அதிகரித்துள்ள போலியான மிருக வைத்திய நிலையங்கள் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று பாதிக்கப் பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரை அண்டிய கிராமப்புறங்களில் இயங்கும் போலி மிருக வைத்திய நிலையங்களில் கடமையாற்றும் சில வைத்தியர்கள் தம்மை மிருக வைத்திய நிபுணர்கள் என்று அறிமுகப்படுத்தி வளர்ப்பு மிருகங்களுக்குச் சிகிச்சையளித்து அதிகளவு பணத்தைப் பொது மக்களிடமிருந்து அறவிட்டு வருகின்றனர்.

அண்மைக் காலமாக விசர் நாய்களால் கடியுண்ட பலர் வவுனியா பொது வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்காக வருகை தந்துள்ளனர்.

இவர்களைக் கடித்த நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசியாக போலியான ஊசி மருந்து ஏற்றப்பட்டுள்ளமை இனங்காணப் பட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கூறினர். (ச-402)

## பாடசாலை உடைக்கப்பட்டு திருட்டு

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி முரசுமோட்டை புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயம் பதினோராவது தடவையாகவும் நேற்று முன் தினம் இரவு உடைக்கப்பட்டு உணவுப் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

குறித்த வித்தியாலயத்தின் அலுவலக கதவு உடைக்கப்பட்டு மாணவர்களின் மதிய உணவு விநியோகத்துக்கென களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த உலக உணவுத் திட்ட உலருணவுப் பொருள்கள் அனைத்தும் களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-55)

குடியிருப்பு பகுதியில் உள்ள வவுனியா குளத்தின் உள்ளகப் பகுதியில் வெங்காயத்தாமரை என்று அழைக்கப்படும் ஒரு வகைச் செடி வளர்ந்து குளத்தின் அரைவாசிப் பகுதியை மூடியிருப்பதால், அந்தக் குளப்பகுதியில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ச-421)

## புதூர் நாகதம்பிரான் பொங்கல் விழா ஜூன் 23இல்

வவுனியா, மே 23

வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலய வரு டாந்த பொங்கல் விழா அடுத்த மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற வுள்ளது.

இந்த ஆலய நேர்த்திக்காகவோ அல்லது ஆலய வளர்ச்சிக்காகவோ பணம் செலுத்தும் அடியார்கள் இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு. புதூர் நாகதம்பிரான் ஆலயம் இல. 7183667 9 என்னும் கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆலயத்தில் நேரடியாகவும் பணத்தைச் செலுத்த முடியும் என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.கிருபா கரன் தெரிவித்துள்ளார். (ச-402)

# புதுமுறிப்பில் மீண்டும் இராணுவச் சோதனை

## மக்கள் மத்தியில் பதற்றம்

கிளிநொச்சி, மே 23

கடந்த 18 ஆம் திகதி முதல் கிளிநொச்சி புதுமுறிப்பில் மீண்டும் இராணுவச் சோதனைச் சாவடி, வீதி மறிப்புத்தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முழங்காவில் பிரதான வீதியில் புதுமுறிப்புப் பகுதியில் இயங்கி வந்த இராணுவச் சோதனைச் சாவடிகள், வீதி மறிப்புகள் அண்மையில் தான் அகற்றப்பட்டிருந்தன.

ஆனால் கடந்த 18 ஆம் திகதி முதல் புதுமுறிப்புப் பகுதியில் மீண்டும் இராணுவத்தினரால் வீதி மறிப்புச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு அந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வீதியால் பயணிக்கும் வாகனங்களை மறித்து அவர்கள் குறித்த விவரங்களைப் பதிவு செய்தும் வருகின்றனர்.

இதனால் இந்தப் பகுதியில் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள் மற்றும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியின் கிராம வீதிகள், நகர வீதிகள் எனப் பல பகுதிகளிலும் இராணுவத்தினர் சைக்கிள்களில் ரோந்து சென்று கண்காணிப்புப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளதுஎன்று கூறப்படுகின்றது. (ச-426)

கோப்புப்படம்

## தற்காலிக கொட்டகைகளில் இயங்கும் பாடசாலைகள்

### முல்லை கல்வி வலயத்தில் அவலம்

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள அதிகளவான பாடசாலைகள் தற்காலிக கொட்டகைகளில் இயங்குகின்றன. இவ்வாறு முல்லைத்தீவு வலய பதில் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் கவலை தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் ழீள் குடியேற்றம் நடைபெற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும், பல பாடசாலைக் கட்டடங்களில் புனரமைப்பு இடம்பெறவில்லை. தகரக் கொட்டகைகளிலும் மர நிழல்களிலும் மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று அவர் கூறினார். 19800 மாணவர்களைக் கொண்ட முல்லைத்தீவு வலயத்தில் அதிகளவான மாணவர்கள் மர நிழல்களில் கல்வி கற்று வருகின்றனர் என்று அவர் கூறினார்.

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், விசுவமடு விசுவநாதர் ஆரம்ப வித்தியாலயம், புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், வள்ளிபுனம் அ.த.க. உட்பட பல பாடசாலைகள் வளப் பற்றாக் குறைகளுடன் இயங்கி வருகின்றன ஏன்றும் அவர் தெரிவித்தார். எனவே முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைக் கட்டடங்கள் அனைத்தையும் விரைவில் அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-18)

## தௌபீக்கின் இடமாற்ற உத்தரவு திட்டமிட்ட பழிவாங்கல்

### வட மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் குற்றச்சாட்டு

மன்னார், மே 23

மீள்குடியேறுகின்ற வடக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பல அரச உத்தியோகத்தர்கள் வடக்கில் கடமையாற்ற வேண்டிய தேவை இருக்கின்ற இன்றைய நிலையில் மறிச்சுக்கட்டி, மரைக்கார் தீவு மக்களின் உரிமைகள் தொடர்பிலும், பிரச்சினைகள் தொடர்பிலும் குரல் கொடுத்துவரும் மௌலவி தௌபீக்கின் இடமாற்ற உத்தரவு முற்றுமுழுதாக ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும்.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் குற்றம் சாட்டியுள்ளார்.

புனர்வாழ்வு உதவியாளரான மௌலவி தௌபீக் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப் பட்டதைக் கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ், புனர்வாழ்வு உதவியாளராகக் கடமை புரியும் தௌபீக், மரைக்கார் தீவு பிரதேசத்தின் அபிவிருத்திச் சங்கத் தலைவர் என்ற வகையில் அந்தப் பகுதி மக்கள் கடந்த பல மாதங்களாக மேற்கொண்டு வரும் பல வேறு பட்ட வாழ்வாதார மேம்பாட்டுமுயற்சிகளுக்குதலைமை தாங்கி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்த நிலையில் மௌலவி தௌபீக்குக்கு புனர்வாழ்வு திணைக்களத்தின் பணிப்பாளரினால் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் வடக்கு மாகாணசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கையகப் படுத்தியவுடன், சிவில் நிர்வாகத்துறையில் எவ்வித மான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளும் இடம்பெற மாட்டாது என பகிரங்கமாக அறிவித்து, அதனை இது வரை நடைமுறைப்படுத்தியும் வந்திருக்கின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தங்களுடைய நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், அரச உத்தியோகத்தர்களைத் தங்களுடைய அடிமைகளாகப் பயன்படுத்துவதற்காகவும் அரசியல் பழிவாங்கல் என்கின்ற கோழைத்தன நடவடிக்கையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

அத்தகையதொரு நடவடிக்கையாகவே இந்த இடமாற்ற உத்தரவும் அமைய பெற்றிருக்கின்றது-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10-56)

## அக்கராயன் ம.வித்தியில் விஞ்ஞான ஆசிரியரில்லை

### மாணவர்கள், பெற்றோர் விசனம்

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லை என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

இதனால் இந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 100 மாணவர்கள் விஞ்ஞான பாடத்தைக் கற்பதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் 60 ஆசிரியர்கள் தங்கக்கூடிய இடவசதிகள், குடிதண்ணீர், மின்சார வசதிகள் உள்ளன என்று மாணவர்கள் கூறுகின்றனர். எனினும் இந்தப் பாடசாலையில் விஞ்ஞான பாடம் கற்பிக்க ஆசிரியரொருவரை நியமிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாணவர்கள் கூறினர்.

அப்பகுதியை அண்டிய பல கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

எனவே அதைக் கருத்தில் கொண்டு விஞ்ஞான பாடம் கற்பிக்க ஆசிரியர் ஒருவரை நியமிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி கல்வி வலயத்தின் முக்கிய பாடசாலையான இந்தப் பாடசாலை கல்வி அதிகாரிகளால் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்று பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ச-18)

# புகைப்பட அல்பத்தை சிறந்த முறையில் உருவாக்க கூகுள் தரும் வசதி

கூகுள் நிறுவனம் தனது கூகுள் பிளஸ் சமூக வலைத்தளத்தில் புதிய வசதி ஒன்றை அறி முகம் செய்துள்ளது.

Google Stories என்ற இந்த வசதியின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை அடிப்படையா கக் கொண்டு சிறந்த அல்பத்தை உருவாக்கி நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

புகைப்படங்கள் தவிர வீடியோக்களையும் அல்பங்களாக மாற்றியமைத்துக்கொள்ள முடிவதுடன், இந்த வசதியை அன்ரோ யிட், iOS சாதனங்களிலும் பயன்படுத்தக் கூடிய அப்பிளிக்கேஷனை விரைவில் அறி முகம் செய்யவுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தக் கடிகாரம் ஒளி ஊடுபுக விடவல்ல நுஸிசிம் திரையைக் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது.



# இனி டுவிட்டரில் இசைக்கும் இன்னிசை

இசையை பகிர்ந்து கொள்ளும் வசதியை அளிப்பதற் காக ஜேர்மனியின் சவுண்ட் கிளவுட் நிறுவனத்தை வாங்க டுவிட்டர் வலைத் தளம் திட்டமிட்டுள்ளது.

டுவிட்டர் வலைத்தளம் ரூ.750 கோடி நஷ்டத்தில் இயங்கிவருகிறது. இந்நிலை யில் இசைப் பகிர்வுத் தளமான ஜேர்மனி யின் சவுண்ட் கிளவுட் நிறுவனத்தை டுவிட்டர் வாங்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் டுவிட்டர் பயனாளி கள், கூகுளில் படங்கள், காணொளி களைத் தேடுவதைப்போல, இதில் இசையைத் தேடிக் கண்டுபிடிக்கலாம்.

கடந்தாண்டு இதுபோன்ற ஒரு வசதியை அளிக்க முயன்ற டுவிட்டர் அதில் தோல்வியைத் தழுவியது.

சவுண்ட் கிளவுட் நிறுவனத்தை வாங் குவதன் மூலம் தனது 250 மில்லி யன் பயனாளிகளின் எண்ணிக் கையை மேலும் அதிகரிக்க டுவிட் டர் திட்டமிட்டுள்ளது.

இருப்பினும் அந்த நிறுவனம் இத் தகவலை இன்னும் உறுதிபடுத்தா மலேயே வைத்துள்ளது

# விண்டோஸ் போன் ஸ்டோர் தளத்திலிருந்து அதிரடியாக வட்ஸ் அப் நீக்கம்

மொபைல் சாதனங்கள் மூலம் குறுஞ்செய்தி கள், புகைப்படங்களை செலவின்றி பகிர்ந்து கொள்வதற்கு வட்ஸ் அப் (WhatsApp) அப்பிளிக்கேஷன் பெரிதும் உதவுகின்றது.

அண்மையில் பேஸ்புக் நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இந்த அப்பிளிக் கேஷனின் விண்டோஸ் செல்பேசிகளுக்கான பதிப்பு விண்டோஸ் தொலைபேசி களஞ்சியத் தில் (Windows Phone Store) தளத்திலி ருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிமுகம் செய்த பிந்திய பதிப்பான விண்டோஸ் போன் 8.1 இயங்குதளத்தில், வட்ஸ் அப் அப்பிளிக் கேஷன் செயற்படும்போது சில குறைபாடுகள் காணப்படுவதே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அப்பிளிக்கேஷனை தற்போது தேடினால் குறித்த அப்பிளிக்கேஷன் கிடைக்கப்பெற வில்லை என்ற செய்தியே தென்படும். எனி னும் விரை வில் மீண்டும் வட்ஸ் அப் அப் பிளிக்கேஷன் மீண்டும் தளத்தில் இடம் பிடிக் கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இரு தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஸ்மார்ட் கடிகாரம்

Kairos என்ற நிறுவனம் பொறியியல் மற்றும் இலத்திர னியல் தொழில்நுட்பங்களை ஒருங்கே கொண்ட ஸ்மார்ட் கடி காரத்தை உருவாக்கியுள்ளது.

இக்கடிகாரம் ஒளி ஊடுபுகவிட வல்ல நுஸிசிம் திரையைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள் ளது.

மேலும் இதில் வயர்லெஸ் தொழில் நுட்பமான புளூடூத், ரேடியோ, போன்றவும் தொடர்சியாக 7 நாள்களுக்கு மின்னை வழங்கக் கூடியதும், சார்ஜ் செய்யக்கூடிய துமான 180mAh மின்கலமும் காணப்படுகின்றது. தற்போது இக்கடிகாரத்திற்கு முன் பதிவு செய்ய முடிவதுடன் எதிர் வரும் ஜூலைமுதலாம் திகதிவிற்பனைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்காக சம்சுங் அறிமுகம் செய்யும் ரேப்லெட்

பல புதிய தொழில்நுட்பங்களை உள்ள டக்கிய மொபைல் சாதனங்களை தொடர் ச்சியாக அறிமுகம் செய்துவரும் சம்சுங் நிறுவனம், தற்போது மாணவர்களுக்கு பயன்படக்கூடிய டேப்லெட்டினை அறிமுகம் செய்துள்ளது.

Samsung Galaxy Tab 4 Education என அழைக்கப்படும் இந்த டேப்லெட் 10.1 அங்குல அளவு, 1280 x 800 Pixel Resolution உடைய தொடு திரையைக் கொண்டுள்ளது.

இவற்றுடன் 1.2GHz வேகத்தில் செயற் படக்கூடிய Quad Core Processor, பிரதான நினைவகமாக 1.5GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற் றை யும் உள்ளடக்கியுள்ளது.

இதன் விலை 369.99 டொலர்கள் ஆகும்.

Samsung Galaxy Tab 4 Education என அழைக்கப் படும் இந்த டேப்லெட் 10.1 அங் குல அளவு, 1280 x 800 Pixel Resolution உடைய தொடு திரையைக் கொண்டுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தடைகள் இனி படையெடுக்கும்

ஒருபுறத்தில் இலங்கையில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குகிறது என்று கூறிக்கொண்டு இலங்கை அரசு வடக்கு - கிழக்கில் தனது பிடியை இறுக்க, இலங்கையின் போர்க் குற்றவாளிகளை நோக்கி சர்வதேச சமூகம் தனது பிடியை இறுக்குவதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துள்ளன.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் புரிந்தவர்கள் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தால் அடையாளம் காணப்படும் எவரும் அமெரிக்காவுக்கு வருகை தருவதைத் தடை செய்ய வேண்டும் என்று அந்த நாட்டின் பிரதிநிதிகள் சபையில் தீர்மான வரைவு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கொழும்பு அரசு நடைமுறைப்படுத்தாமல் விட்டதன் விளைவாகவே இந்தத் தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது. உடனடியாக இது தீர்மானமாக நிறைவேற்றப் படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றாலும், கொழும்பு அரசு தொடர்ந்தும் தனது பிடிவாதத்தை தளர்த்தாவிட்டால் அதற்கான சாத்தியங்களும் அதிகம் உள்ளன.

ஏற்கனவே இதுபோன்ற தடைகள் குறித்துப் பரிசீலிப்பதற்குத் தான் தயாராக உள்ளதாகக் கனடா அறிவித்திருந்தது. அமெரிக்காவில் இந்தத் தீர்மானம் நிறைவேறினால் ஐரோப்பிய ஒன்றியத்திலும் பிரிட்டனிலும் ஐ.நா. பிரேரணையை ஆதரித்த மற்றும் சில நாடுகளிலும் இவ்வாறான தீர்மானங்கள் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

அப்படிப்பட்ட ஒரு நிலை சர்வதேச சமூகத்தில் இலங்கைக்கு ஏற்பட்டால் அது அவமானம். நிலைமைகளை அது இன்னமும் மோசமாக்கும். உலக அரங்கில் ஒரு காலத்தில் தென்னாபிரிக்காவையும் அண்மைக் காலத்தில் சிம்பாப்வேயையும் கணிக்கும் ஒரு நிலைக்கு அது இலங்கையையும் இட்டுச் சென்றுவிடும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றினால் இந்தப் பிரச்சினையில் இருந்து அரசால் இலகுவாக விடுபட முடியும். ஆனால் அதை அரசு செய்யும் போலத் தெரியவில்லை.

போர்க்குற்ற விசாரணை தவிர ஐ.நாவின் மற்றைய எல்லாப் பரிந்துரைகளையும் நிறைவேற்றத் தான் தயார் என்று அண்மையில் ஜப்பானியப் பிரதமரிடம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

வழக்கம் போலவே ஜனாதிபதியின் வெற்று வாய்ப் பேச்சு இது என்பதை அடுத்து வந்த நாள்களில் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல வெளிப்படுத்தினார். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்திவிட முடியாது; அதுவே அரசின் நிலைப்பாடு என்றார் அவர்.

ஐ.நா. தீர்மானமோ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருகிறது. போர்க்குற்றம் தவிர்ந்த, ஐ.நாவின் ஏனைய பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதி உண்மையானால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் அது முடியாது என்றும் இந்த அரசே அதன் பின்னர் அறிக்கை விடுகிறது. ஆகமொத்தத்தில் உண்மையான அமைதி, நல்லிணக்கத்தில் அரசுக்கு அக்கறை இல்லை என்பது தெளிவு. அரசின் இந்தப் பிடிவாத நிலை இனிவரும் காலங்களில் அமெரிக்கா கொண்டு வர நினைக்கும் தடைகளைப் போன்ற மேலும் பல தடைகளை இலங்கைய நோக்கி அணி திரள வைக்குமே தவிர நிலைமையைச் சீராக்காது.

# பாரத தேசத்துக்கு 2 ஆவது சுதந்திரம்

விரேந்திர பாரெக்
கட்டுரையிலிருந்து-
ரம்யன்

**முழு இந்தியர்களுக்காகவுமே மோடி பேசி வந்திருக்கிறார். அவர்ஆட்சியில் முஸ்லிம்கள் அஞ்சத் தேவையில்லை.**

பாரத நாட்டில் நடந்து முடிந்த 16 ஆவது மக்கள் அவைத் தேர்தலானது 2014 ஆம் ஆண்டின் இந்திய வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்வாகப் பதியப்படப்போகின்றது. பாரத நாட்டின் குண்டலினி சக்தியின் வெளிப்பாட்டை அது குறிப்பதாக அமைந்துள்ளது. இந்தப் பழம்பெரும் நாடு தனது சோம்பலைத் தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் தன் பழைய பெருமையை நிலைநாட்ட விழிப்படைந்துள்ளது.

இருந்தாலும் அதன்முன் உள்ள பாதை அவ்வளவு எளிதானதாக இருக்கப்போவதில்லை. அதிகார மாற்றத்தை மட்டும் நாம் எதிர்பார்க்கப் போவதில்லை. முழுத் தேசமே மாற்றம் பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கப் போகின்றது.

சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து பொதுவாழ்வை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த நேரு குடும்ப அரசியல் ஒழுங்கமைப்பானது, படிப்படியாக மாற்றி அமைக்கப்படுவதாக இது இருக்கப் போகின்றது. இந்தப் புதிய மாற்றமானது உடனடியாக சமூகக் கட்டமைப்பில் நிகழும் என்று எதிர்பார்க்கலாம். சாதிகள், முன்னேறிய - பின்தங்கிய, பட்டியலிடப்பட்ட அனைவர் மத்தியிலும் புரிந்துணர்வுகளும் நல்லுறவுகளும் அதிகரிக்கும். மற்றும் இந்துக்கள், இந்துக்கள் அல்லாதவர்கள் மத்தியிலும் இந்த மாற்றங்கள் பொருளாதார மட்டத்திலும் காணப்படும். விரைவிலேயே மிகவும் ஒத்திசைவான ஒன்றுபட்ட சமூகம் ஒன்றை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

### மோடியின் விஸ்வரூபம்

இந்தத் தேர்தலின் மூலம் நரேந்திர மோடி விஸ்வரூபமாக வெளிப்பட்டிருக்கிறார். அரசியலில் அவர் பெற்றுள்ள இடத்தில் ஒவ்வொரு அங்குலத்தையும் பெரும் போராட்டத்தின் மூலமே வென்றுள்ளார். காரியத்தில் கண்ணாய் இருப்பவர் என்பதைப் புலப்படுத்தியுள்ள அவர், தீர்க்க சிந்தையும், சக்தியும், அரசியலைத் தடுமாற்றமின்றிப் புரிந்து கொள்ளும் ஆற்றலுடையவர் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். நீண்டகால மற்றும் கடுமையான இந்த அரசியல் போராட்டத்தில் நாட்டின் சகல மூலைகளுக்கும் பயணம் செய்து சகல மக்கள் சமூகங்களோடும் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்.

நரேந்திரமோடி ஒரு இந்து, தேசியவாதி. இதை ஏற்றுக்கொள்ள வெட்கப்படவுமில்லை, அச்சம் கொள்ளவுமில்லை அவர். அவரது எளிமையான குடும்பப் பின்னணி அவரிடம் மக்கள் அன்பு கொள்ளச் செய்கின்றது. அத்வானி மற்றும் வாஜ்பாய் போன்றவர்களைப் போன்று எதிரிகள் தம்மை மதிக்கவேண்டும் என்று எதிர்பார்த்து வளைந்து போகிறவர் அல்ல. எதிரியை நேரடியாக எதிர்கொள்ளாமல் அவரை தொடர்பற்றவராக செய்து விடுவது மோடியின் அணுகுமுறையாகும். ஊழலுக்கு உட்படாதவர், முட்டாள்தனத்துக்கு உள்ளாகி தவிப்பவருமல்ல, அர்த்தமில்லாத வைகளைச் சகிப்பவரும் அல்லர். மண் வெட்டியை மண்வெட்டிதான் என்று கூறிவிடத் தயங்காதவர்.

### டில்லி தர்பாரில் முழுக்கவும் புதியவர்

டில்லி தர்பாரில் இதுவரை இருந்தவர்களை விட இவர் தான் முழுக்கவும் வெளியாள். எவரையும் முகமன் செய்ய வேண்டிய அவசியமும் அவருக்கில்லை. மோடி, காலத்துக்கேற்ற தலைவராக உருவாகியுள்ளார்.

அடுத்தது மோதிலால் நேருவால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆளும் பரம்பரை இறுதிக் காலத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறது. இனி ஒருபோதும் திருத்தி அமைக்க முடியாத பாதிப்பை அது எதிர்கொள்ள விருக்கின்றது. சோனியா காந்தியைச் சுற்றிக் காணப்பட்ட ஒளிவட்டமும் மறைந்து மேகங்கள் சூழத் தொடங்கியுள்ளன. அவரது இரண்டு பிள்ளைகளுக்கும் அதே நிலைதான். நாட்டுக்கு அவர்களால் ஏதும் தரக்கூடிய தாய் இல்லை. குடும்பம் செய்த தியாகங்களைப் பற்றித்தான் புலம்பிக் கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

இந்தியக் கிராம வாசிகள் முன்போல் அறியாமையில் மூழ்கிக் கிடக்கவில்லை. பணியாற்ற முடியாதவர்களை இனி மேலும் சகித்துக் கொள்ளும் நிலையில் கிராமிய இளைஞர்கள் இன்று இல்லை. இன்னொரு விடயம் என்னவென்றால் அரசியல் உறுதிப்பாட்டை நோக்கிய தேர்தல் முடிவாக இது அமைந்துள்ளது. மாநிலக் கட்சிகளின் தயவை நாடிச் செயற்பட வேண்டிய நிலையில் மத்திய அரசு இருக்கமாட்டாது. மோடி தற்செயலாக பிரதமராகிவிடவில்லை. நேசக் கட்சிகளின் ஆதரவை நாடாமல் தனித்து நிற்கும் தகுதி கிடைத்துள்ளது.

இன்னும் இடது சாரி கட்சிகளின் படு தோல்வியும், விசேட கொண்டாட்டத்துக்குரியது என்றும் கூடக் கூறலாம்.

### முஸ்லிம் மக்கள் அஞ்சத் தேவையில்லை

இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் பாரதிய ஜனதாக் கட்சியை ஓரம் கட்டுவதற்காகவும் முஸ்லிம்களின் வாக்குகளை பெறுவதற்காகவும் மத சார்பற்ற மற்றும் இன சார்பற்ற அரசு என்று தோற்றுவிக்கப்பட்டிருந்த மாயையும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் வாக்குப் பலத்தையும் மோடி உடைத்தெறித்திருக்கிறார். முஸ்லிம்களின் ஆதரவில்லாமலே அதிகாரத்துக்கு வரமுடியும் என்பதை அவர் எடுத்துக்காட்டியுள்ளார். ஆனால் இது குறித்து இந்திய முஸ்லிம்கள் அஞ்ச வேண்டியதில்லை. பல வருடக் கணக்கான காலமாக மத சார்பற்ற கட்சிகள், பா.ஜ.கட்சி பதவிக்கு வந்தால் ஆபத்து விளையும் என்று முஸ்லிம்களை அச்சுறுத்தி வந்துள்ளன. அதன்மூலம் அவர்களின் வாக்குகளைப் பெற்று வந்துள்ளன. அவர்களும் மத சார்பற்றவர்கள் யார் சார்பானவர்கள் யார் என்பதற்குச் சான்று வழங்குவது போல் வாக்களித்து வந்துள்ளனர். அந்த நிலைமையும் இந்தமுறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அச்சுறுத்தி வாக்குச் சேகரிக்கும் இந்த தந்திரோபாயத்துக்கு மோடியின் பதில் என்னவாக இருந்ததென்றால் முற்றாக அலட்சியப்படுத்தியமை. அக்கறையே காட்டாமல் இருந்துவிட்டமை. அவர் ஆற்றிய சொற்பொழிவுகளில் சாதிகளை, சமூகங்களை, மதக் குழுக்களை முற்றாகக் குறிப்பிடாமல் விட்டமைதான். பதிலாக முஸ்லிம்கள் உட்பட இந்தியர்கள் 125 கோடி பேருக்குமான ஆதரவைத்தான் அவர் கோரி நின்றார். இந்தியர்கள் அனைவருக்குமான வளர்ச்சி அபிவிருத்தியென்றே அவர் பேசினார். சிறப்பு வாக்குறுதிகள் எதனையும் அவர் வழங்கவில்லை. எந்தச் சமூகத்துக்கும் அச்சுறுத்தலையும் அவர் விடுக்கவில்லை. இவ்வாறு மத சார்பான குழுக்களை மகிழ்ச்சியூட்ட மனதார மறுத்துச் செயற்பட்டமையானது வேறு நாடுகளில் என்றால் இதுதான் மத சார்பின்மை என்று போற்றப்படுவதாய் இருந்திருக்கும். இந்தியாவில் இது சாதி வாதத்துக்கான அறிகுறியென்று கூறப்படுகின்றது. எனவே மத சார்பின்மை என்பது இங்கே எப்படி இருக்கிறது என்பதை இந்தியர் அல்லாதவர்கள் புரிந்து கொள்வார்கள்.

மோடி வெற்றி பெற்றார். ஏனென்றால் உண்மையாகவே மத சார்பற்றவர்களான இந்துக்கள் அவரை நம்பி வாக்களித்தார்கள். அதேவிதமாக சாதி வாதத்தையும் அவர் கையாண்டுள்ளார். சாதிப் பாகுபாடுகளை ஊடறுத்து சகல மக்களுக்கும் உறுதிகளை வழங்கினார். காலப்போக்கில் சாதிவாதமும் சமூக வேறுபாடுகளும் ஒழிந்துபோய்விடும்.

மோடிமுக்கியமாக இரண்டுகொள்கைகளை முன்வைத்துப் போட்டியிட்டார். ஒன்று மாற்றம், மற்றது அபிவிருத்தி. ஊழல், உணர்வின்மை, தகுதியின்மை ஆகிய ஐக்கிய மக்கள் முன்னணி அரசினால் வெளிப்படுத்தப்பட்டவைகளில் இருந்து நாட்டை மாற்றி அமைப்போம் என்றார். அபிவிருத்தி, வேகமான வளர்ச்சி, தொழில் வாய்ப்புக்கள், பணவீக்கத்தைக் குறைப்பது இவை இன்று முக்கியமாக தேவைப்படுபவை.

சாதிச் சண்டைகள், மாணவர் குழப்பம், தீவிரவாதம், ஆம் ஆத்மி போன்ற இயக்கங்கள், ஜிகாதி பயங்கரவாதத் தாக்குதல், தேசிய எல்லைப் பகுதியில் பதற்றம் மற்றும் தேசிய செலவணியை கட்டுப்பாட்டில் கொண்டு வருதல் போன்ற அனைத்தையும் மோடியின் கவனத்தைத் திருப்பவும் கவிழ்ப்பதற்கும் எதிரிகள் பயன்படுத்தத் தவறமாட்டார்கள். இருந்தாலும் இவைகளில் இருந்து மீளும் வகைகளை இந்தப் பெரிய தேசம் மோடிக்கு வழங்காமல் இருக்காது. அதற்கான சக்தியையும், வளங்களையும் அது வழங்கவே செய்யும். நாட்டின் சரியாக சிந்திக்கும் மக்களின் ஆதரவு மோடிக்கு இருக்கவே செய்கின்றது. முதலீட்டுக்காரர்கள் எங்கே முதலீடு செய்யலாம் என்பதை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள் என்பதை பங்குச் சந்தைகளில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இளம் சமூகத்தினர் தங்கள் இருப்பை பதிவு செய்ய சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏராளமான தொழில்நுட்ப வியலாளர்கள் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுபிடித்து உதவக் காத்திருக்கிறார்கள். இப்பொழுது ஒரு விடிய லைத்தான் கண்டிருக்கிறோம். ஒவ்வொரு இரவு கழிந்ததும் விடிவு வரவே செய்யும். 2014 ஆம் ஆண்டு இந்தியாவின் இரண்டாவது சுதந்திர தினமாக நினைவு கூரப்படுவதாக இருக்கும்.

நன்றி. விஜயவாணி. கொம்.

சி.சிவகுமார்
வடமாகாண
விவசாயப் பணிப்பாளர்

# வறட்சி ஏற்படும்போது வெற்றிகரமான விவசாயம்

**இ.தூவல் நீர்பாசனத்தின்கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்**

- தூவல் நீர்ப்பாசனத் தொகுதியை வைத் திருக்கும் விவசாயிகள் தூவல் நீர்பாசனத்தின் கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும்.
- காலை, மாலை நேரங்களில் தூவல் நீர்ப் பாசனத் தொகுதியை இயக்கி நீரின் உச்சப் பயன்பாட்டைப் பெறமுடியும்.
- பாத்தி நீர்ப்பாசனம் செய்யும் போது பயிர்களின் வேர்த்தொகுதிக்கு மட்டும் நீர் கிடைக்கக்கூடிய வாறு நீர்ப்பாசனம் செய்யவும்.

**இலை மூலம் போசணைச் சத்துக்களை வழங்குதல்**

மண்ணில் போதியளவு ஈரப்பதன் இல்லாத நிலையில் திரவப் பசளை விசிறுவதே பயிருக்கு தேவையான போசணைகளை வழங்குவதற் குரிய ஒரேயொரு வழிமுறையாகும்.

- சேவ். பிளஸ் இலை மேற்பரப்பினூடான ஆவியீர்ப்பைக் குறைக்கும்.
- ஒனியன் பிளஸ் வெங்காயத்தின் தரமான விளைச்சலுக்கு
- கிறின் விராக்கில் ஆவியீர்ப்பை குறைத்து நீரிழப்பைத் தடுக்கும்.

பழப்பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாப்பதற்கான தொழில் நுட்பங்கள் வடமாகாணத்தில் 7057 ஹெக்ரெயர் விஸ் தீரணத்தில் பழப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் படுகின்றது. பிரதான பயிர்களான வாழை 2,160 ஹெக்ரெயர் விஸ்தீரணத்திலும், மா 1997 ஹெக்ரெயர் விஸ்தீரணத்திலும், தேசி 709 ஹெக்ரெயர் விஸ்தீரணத்திலும் பலா 617 ஹெக்ரெயர் விஸ்தீரணத்திலும், பப்பாசி 319.5ஹெக்ரெயர் விஸ்தீரணத்திலும், திராட்சை 129 ஹெக்ரெயர் விஸ்தீரணத்திலும் செய்கை பண்ணப்படுகின்றன. இவற்றை விட கொய்யா, தோடை, அன்னாசி, நெல்லி, கொடித்தோடை, மர முந்திரிகை என்பனவும் குறிப்பிடத்தக்க அளவு விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படுகின் றன. எதிர்வரும் சிறுபோகத்தில் எதிர்நோக்கப்படும் வறட்சியால் பழப்பயிர்களும் பாதிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகின்றது. பழப் பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாத்து உற்பத்தியைப் பெறுவதற்காக கீழ்க் குறிப்பிட்ட தொழில்நுட் பங்களை விவசாயிகள் பயன்படுத்த முடியும்.

- பழமரங்களின் அடிகளைச் சுற்றி கிளரிசீரியா மற்றும் கிடைக்கக் கூடிய இலைகுழைகளைக் கொண்டு மூடுபடை அமைக்கலாம்.

-பப்பாசி, வாழை, அன்னாசி ஆகிய பயிர்களுக்கு வைக்கோல், வாழைச்சருகு, காய்ந்த புற்களால் மூடுபடை இடுதல்.

- எரு/கூட்டெரு/ ஆட்டெரு போன்றவற்றை பழப்பயிர்களைச் சுற்றி இடுவதனால் மண் வளம் அதிகரிப்பதுடன் நீரிழப்புத் தவிர்க்கப்படும்.
- சொட்டு நீர்ப்பாசனம் செய்வதன் மூலம் வேர்த்தொகுதிக்கு மட்டும் நீரை வழங்குவதுடன் நீரையும் சேமிக்க முடியும்.

பொட்டாசியம் பசளைகளைப் பாவிக்கவும். வேர்களின் கலங்களில் பொட்டாசியத்தின் செறிவு அதிகரிப்பு நீரை மண்ணிலிருந்து கவர்ந்திழுக்க உதவுகிறது.

- விரைவான முதிர்வையும் தாவரத்தில் ஏற்படுத்துகின்றது.
- இலைவாய்களின் தொழிற்பாட்டை ஒழுங்கு படுத்தலால் ஆவியீர்ப்பின் ஊடான நீரிழப்பை குறைக்கலாம்.
- பொசிவு நீர்ப்பாசனம்
- சூளையில் வைக்காத ½ பங்குக்கு ஓயில் பெயின்ற் பூசிய மண் பானையின் வாய் மட்டும் வெளியில் தெரியுமாறு மரத்தினடியில் மண்ணில் புதைக்க வேண்டும்.
- பருமன் கூடிய மரங்களுக்கு 2 பானைகள் பயன்படுத்தலாம்.
- பானையினுள் நீரை விட்டு மூடிவிட வேண்டும்.
- பானையிலுள்ள நுண் துளைகளினூடாக பொசியும் நீரைத் தாவரம் பயன்படுத்தும்.
- போத்தல் நீர்ப்பாசனம்
- குளிர்பானங்களின் பிளாஸ்ரிக் போத்தல்களைப் பயன்படுத்தலாம்.
- போத்தலை நீரால் நிறைத்து சரிவாக வாய்ப் பக்கம் வேர்ப் பிரதேசத்தில் இருக்கக் கூடியவாறு புதைத்து விடவும்.
- போத்தலில் உள்ள நீர் சிறிது சிறிதாக மண்ணின் வேர் வலயத்தில் பரவும்.
- இந்த நீரைத் தாவரம் பயன்படுத்தும்.

விவசாயிகளால் கைக்கொள்ளப்படும் மரபுரீதி யான நீரிழப்பைத் தடை செய்யும் முறைகள் உள்ளன. இவற்றில் வாழையின் முதிர்ச்சிய டைந்த இலைகளை போலித்தண்டுடன் சேர்த்து கட்டி விடுவதன் மூலம் போலித் தண்டிலிருந்து நீர் இழக்கப்படுவதை தவிர்க்கலாம்.

இலைமூலம்போசணைச் சத்துக்களைவழங்குதல் மண்ணில் போதியளவு ஈரப்பதன் இல்லாத நிலையில் திரவப் பசளை விசிறுவதே பயிருக்குத் தேவையான போசணைகளை வழங்குவதற் குரிய ஒரே வழிமுறையாகும்.

- வுக்சால், பூம்பிளவர் போன்ற இலை மூலம் போசணை வழங்கக் கூடிய திரவப் பசளை களைப் பயிருக்கு விசிறுவதன் மூலம் பசளைப் பாவனைக்கெனப் பயன்படுத்தப்படும் நீரினள வைக் குறைத்துக் கொள்ள முடியும்.
- கே பிளஸ் பூத்தலுக்கு உதவும். பழப் பயிர்களின் பூத்தலைத் தூண்டும். பழத்தின் பருமனையும் நிறத்தையும் அதிகரிக்கும்.
- சேவ் பிளஸ்இலை மேற்பரப்பினூடான ஆவியீர்ப்பைக் குறைக்கும்.
- கிறீன் கெயார் பயிர்களின் வீரியமான வளர்ச் சிக்கு உதவும்.

நோய்க்கு சகிப்புத் தன்மையை ஏற்படுத்தும். மரக்கறிப் பயிர்களைக் கிடைக்கும் நீரைச் சிக்க னமாகவும் வினைத் திறனாகவும் பயன்படுத்தி விளைவைப் பெறக்கூடிய தொழில்நுட்பங்கள்

**1.சேதனப் பசளையிடல்**

கூட்டெரு, மாட்டெரு, பசுந்தாட் பசளை, மண்புழு உரம், உயிர்க்கரி இட்டு பயிர்ச் செய்வதன் மூலம் மண்ணில் சேதனப் பொருள்களின் அளவு அதிகரித்து ஈரப்பதனை பற்றிப்பிடித்து வைத் திருக்கும் திறன் அதிகரிக்கும். இதனால் நீர்ப் பாசன நீரின் அளவைக் குறைக்கவும் நீர்பாசன இடைவெளியின் அளவைக் கூட்டவும் முடியும்.

**2.உயிர்க் கரிப்பாவனை**

உயிர்க் கரியினை கீழ்வரும் முறை மூலம் தயாரிக்கலாம்.

- சிறிய பரல் ஒன்றை எடுத்து அதனுள் துண்டுகளாக்கப்பட்ட கிளிசீரியா மற்றும் கிடைக்கக் கூடிய மரத் துண்டுகளை ஒழுங்காக அடுக்கி தகரத் தட்டினால் மூடவும்.
- சிறிய பரலில் தட்டினால் மூடிய பகுதி கீழ்ப் பக்கமாக இருக்குமாறு தலை கீழாக வைக்கவும்.
- இரு பக்கமும் திறந்த நிலையிலுள்ள பெரிய பரல் ஒன்றை எடுக்கவும்.
- சிறிய பரல் உள்ளே இருக்கும் வகையில் பெரிய பரலை நிலைப்படுத்தவும்.
- பெரிய பரலுக்கும் சிறிய பரலுக்கும் இடையில் விறகுகளை இடவும்.
- பெரிய பரலின் கீழ்ப் புறமாகவுள்ள துவாரங் களின் ஊடாக நெருப்பு மூட்டவும்.
- 1.15 மணித்தியாலயம் வரை எரிக்கவும்.
- பெரிய பரலை அகற்றி சிறிய பரலை எடுத்து எரிந்த கரித்துண்டுகளை வெளியில் கொட்டி நீர் தெளித்து ஆறியபின் சிறு துண்டுகளாக்கி மண்ணுடன் இட்டுக் கலந்துவிடவும்.

உயிர்க்கரியில் உள்ள சிறுதுளைகள் நீரைப் பற்றி வைப்பதுடன் வளியையும் உயர்ந்த அளவில் பற்றி வைத்திருக்கும். எனவே நீர்ப்பாசன இடைவெளியைக் கூட்டி நீரை மீதப்படுத்த முடியும்.

போசணைகளையும் பிடித்து வைத்துப் பயிருக்கு மெதுவாக வழங்கிக் கொண்டிருக்கும். மண் வளத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

கட்மியம், ஆசனிக் போன்ற நச்சுத் தன்மையான உலோகங்களை அகத்துறிஞ்சுவதனால் மண்ணில் உள்ள நச்சுத் தன்மை குறையும்.

**3.விதைகளை ஊறவைத்து நடல்**

பாகல், புடோல் போன்ற தடித்த வித்துறை கொண்ட விதைகளை 12 மணித்தியாலயம் ஊற வைட்டு நடுவதன் மூலம் விதை முளைப்பதற்கு பாவிக்கப்படும் நீரினளவை மீதப்படுத்த முடியும்.

**4.கொட்டுக்களில் நாற்றுக்களை உற்பத்தி செய்தல்**

மரக்கறி நாற்றுகளை கொட்டுக்களில் (சிறிய பொதி களில்) உற்பத்தி செய்து நடுகை செய்யும் பொழுது வீரியமான பயிர்களை உருவாக்குவதுடன் நீரும் வினைத் திறனாகப் பயன்படுத்தப்படுகிறது.

**5.பத்திரக் கலவை இடுதல் அல்லது மூடுபடை இடுதல்**

நடுகை இடைவெளி கூடிய பயிர்களான பாகல், கத்தரி, வெண்டி போன்ற பயிர்களிடையே கிளி சீரியா, வேப்பமிலை, பூவரசு, நாவல், பனையோலை, வாழைச்சருகு, வைக்கோல், காய்ந்த புற்கள் மற்றும் பயிர் மீதிகளைக் கொண்டு பயிர்களி டையே பொருத்தமான முறையில் மூடுபடை களை இடுவதன் மூலம் நிலத்திலிருந்து ஆவியாகி இழக்கப்படும் நீரினளவைக் குறைக்க முடியும். நீர்ப்பாசன இடைவெளியை கூட்டி பாசனம் செய்ய முடியும். மூடுபடைகள் உக்கி மண்ணிற்கு சேதனப் பொருள்கள் சேர்வதனால் மண் வளத்தை அதிகரிக்க முடியும்.

**6.கொள்கலன்களில் பயிர் செய்தல்**

கொள்கலன்களில் பயிர்ச்செய்கை முறையானது வீட்டுத்தோட்டங்களில் மரக்கறிப் பயிர்களை செய்கை பண்ணுவதற்கு உகந்த முறையாகும். தினமும் எம்மால் பாவிக்கப்படும் அரிசிப் பைகளை இதற்குப் பாவிக்க முடியும். மாட்டெரு அல்லது கூட்டெரு, மேல் மண் என்பவற்றை 1:1 என்ற வீதத்தில் கலந்து இந்தக் கலவையால் கொள்கலன்களை நிரப்பவும். இந்தக் கொள் கலன்களில் மரக்கறிப் பயிர்களின் நாற்றுக்களை நட்டு பராமரிப்பதன் மூலம் பயிருக்கு மட்டும் நீர் வழங்கப்படும். இதனால் நீர்பாசனத்தால் இழக்கப்படும் நீரை மீதப்படுத்தலாம்.

**7.தென்னம் பொச்சுக்களை இட்டு பயிர்செய்தல்**

மணற் பாங்கான இடங்களில் கத்தரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களை நட முன் 1'x1' ஆழ நடுகைக் குழிகளைத் தயாரிக்கவும். அடியில் இரு தென்னம் பொச்சுக்களை பொச்சு மேற்புறமாக இருக்குமாறு ஒழுங்குபடுத்தவும். அதன் மேல் குழி எரு இட்டு மேல் மண்ணால் மூடி நாற்றுக் களை நடலாம். தென்னம் பொச்சுக்கள் ஊடுவடி தலால் இழக்கப்படும் நீரைப் பிடித்து வைத்திருந்து பயிருக்கு வழங்கும்.

**8.சொட்டு நீர்ப்பாசனத்தின் கீழ் பயிர்செய்தல்**

சொட்டு நீர்பாசனத் தொகுதி வைத்திருக்கும் விவசாயிகள் அவற்றை பாவித்து நீர்ப்பாசனம் செய்யலாம். பயிரின் வேர்த்தொகுதிக்கு மட்டும் நீர் வழங்கப்படும். அத்துடன் பசளைப் பிர யோகத்தையும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதி ஊடாகவே செய்ய முடியும். பயிருக்கு தேவை யான நீர் மட்டும் வழங்கப்படுவதால் மேலதிக நீரிழப்பைத் தவிர்க்க முடியும்.
சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் நீரைப் பயன்படுத்த முடியும்.

**9. காலை/மாலை வேளைகளில் நீர்ப்பாசனம் செய்தல்**

வெப்பம் குறைவான நேரத்தில் நீர்ப்பாசனம் செய் வது பயிர் நீரை வினைத்திறனாகப் பயன்படுத்த வும் நீர் வெப்பத்தால் இழக்கப்படுவதை குறைக்க வும் உதவும். அதிகாலை 4 மணிக்கும் 8 மணிக் கும் இடையில் மாலையில் 6 மணிக்கும் 8 மணிக் கும் இடையில் நீர்பாசனத் தொகுதி களை இயங் குவது உச்ச அளவு நீரை மண்ணில் பிடித்து வைப் பதற்கு உதவும். வெப்பம் கூடிய நேரங்களில் நீர்ப் பாசனத் தொகுதிகளை இயக்குவது காற்று, வெப்பம் என்பவற்றால் நீர் இழக்கப்படுவதைத் தூண்டும்.

**10.வயற்கொள்ளளவை அறிந்து நீர்ப்பாசனம் செய்தல்**

தோட்டங்களில் மண்வெட்டியால் ஒரு பொழி கொத்தி அம்மண்ணை சற்று உயரத்தில் இருந்து நிலத்தில் போடும் போது அது சிதையுமாக இருந்தால் அம்மண் வயற்கொள்ளவில் உள்ளது என்பதை ஊகித்து அறியலாம். அல்லது ஒரு பிடி மண்ணை எடுத்து கைகளால் அமத்தும் போது ஒட்டாமல் உதிருமாயின் அம்மண் வயற் கொள்ளளவுக்கு வந்துவிட்டதாக ஊகித்து அறிந்து நீர்ப்பாசனம் செய்யலாம்.

**11. பொலித்தீன் குழாய்களைப் பாவித்தல்**

வாய்க்கால்களில் நீர்பாசனம் செய்யும் போது பல வழிகளிலும் நீரிழப்பு ஏற்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு பொலித்தீன் குழாய்களை விநியோகக் குழாய்களாகப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்யும் இடத்துக்கு நீரைக்கொண்டு செல்வதன் மூலம் நீரிழப்பைத் தவிர்க்க முடியும். இந்தத் தொழில்நுட்பத்தை சில விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

**12.புடோல் பந்தலின் கீழ் பயிர் செய்தல்**

புடோல் பந்தலின் கீழ் கறிமிளகாய், கோவா போன்ற நிழல் நாட்டமுடைய மரக்கறிப் பயிர்களைப் பயிர் செய்யலாம்.

**13.வேர்ப் பிரதேசத்தை மட்டும் நனைத்தல்**

சிறியளவில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போது பயிர்களினுடைய வேர்ப் பயிரதேசத்தை மட்டும் நனையக்கூடியவாறு சிறிய குழாய்கள் மூலம் நீர்ப்பாசனம் செய்வதால் வெள்ளப் படுத்துவதால் இழக்கப்படும் நீரின் அளவைக் குறைத்து நீரைச் சேமிக்க முடியும்.

**வீட்டுத்தோட்டத்துக்கான நீர்ப்பாசனம்**

சமையலறைக் கழிவுநீர், குழியலறை நீர் ஆகியவற்றை விரயம் செய்யாமல் வீட்டுத்தோட் டங்களிலுள்ள மரக்கறிப் பயிர்களுக்கு பாய்ச்சு வதனால் நீரை மீதப்படுத்தலாம்.
இலை மூலம் போசனைச் சத்துக்களை வழங் குதல்

- கிறீன் கெயார் - பயிர்களின் வீரியமான வளர்ச் சிக்கு உதவும். நோய்க்கு சகிப்புத் தன்மையை ஏற்படுத்தும்.

பிறின்யோல் பிளஸ் - எல்லா சொலனேசியே குடும்ப மரக்கறிப்பயிர்கட்கும்.

- ரீ. பிளஸ்- இலை மரக்கறிப் பயிர்களுக்கு

எனவே வறட்சியான காலப் பகுதியில் பொருத்த மான தொழில்நுட்பங்களைப் புகுத்தி கிடைக்கக் கூடிய நீரை வினைத்திறனாகவும் விளைப் பயன் மிக்கதாகவும் பயன்படுத்தி பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள் வதன் மூலம் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# மோடி பதவியேற்பில் வேண்டாம் மஹிந்த

## தமிழகக் கட்சிகள் போர்க்கொடி

சென்னை.மே 23

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டமைக்கு தமிழகக் கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

ராஜபக்ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமைக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ முதலில் தனது எதிர்ப்பை வெளியிட்டார்.

இதனை அடுத்து தி.மு.கவும் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பதவியேற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டுள்ள விவகாரத்தில், மோடி தமிழர்

ஹமதாபாத் நகரில் இந்தியப் பிரதமர் மோடிக்கு அவரது ஆதரவாளர்கள் நேற்று பெரு வரவேற்பளித்தனர்.

கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என தி.மு.க. செய்தித் தொடர்பாளர் டி.கே. எஸ்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை அழைக்காமல் பா.ஜ.க. தவிர்த்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழக மக்கள் உணர்வுகளை பா.ஜ.க. புரிந்து கொள்ள வேண்டும். ஈழத்தில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறையால் தமிழக மக்கள் இலங்கை மீது கோபத்தில் இருக்கின்றனர். பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடி தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை, நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்கும் விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதில் தவறு ஏதும் இல்லை என தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த பொன். ராதாகிருஷ்ணன், இலங்கைத் தமிழர் நலன் கருதியே ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது-என்றார். (கு)

## தேசத்தின் எதிர்பார்ப்பை உடன் நிறைவேற்றுங்கள்

### மோடிக்கு கருணாநிதி கடிதம்

கருணாநிதி

சென்னை,மே 23

நாட்டின் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், பா.ஜ.க. நாடாளுமன்றக் குழுத் தலைவராக நீங்கள் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குஜராத்தில் வாழ்க்கையை எளிமையாக தொடங்கி இந்தியப் பிரதமர் என்ற உயர் பதவியை நீங்கள் அடைந்துள்ளீர்கள். இதற்குக் காரணம் உங்கள் புத்திசாலித்தனமும், கடின உழைப்புமேயாகும். உங்கள் வளர்ச்சியை மெச்சுகிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நாடாளுமன்ற மைய மண்டபத்தில் ஏற்புரை வழங்கிய நீங்கள், ஏழைகள் நலன் பற்றி சிந்தித்து, செயற்படும் அரசாக உங்கள் அரசு இருக்கும் என கூறியிருந்தீர்கள். கிராமங்கள், இளைஞர்கள், பெண்கள் நலன் பேணப்படும் என உறுதியளித்திருந்தீர்கள். இந்த உயரிய குறிக்கோள்களை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என இந்திய தேசமே பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது.

பாரத தேசத்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி பிரதமர் பதவியில் நீங்கள் சிறப்பாக செயற்பட தி.மு.க. சார்பில் வாழ்த்துகிறேன்- என்று கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (த)

## ராஜீவ் காந்திக்கு அஞ்சலி செலுத்திய நரேந்திர மோடி

புதுடில்லி,மே 23

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு டுவிட்டர் வாயிலாக நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இந்தியாவின் 6 ஆவது பிரதமராக 1984ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் 1989ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி வரை பதவி வகித்த ராஜீவ் காந்தி கடந்த 1991ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்துக்காகத் தமிழகம் சென்றிருந்தபோது, ஸ்ரீபெரும்புதூரில் நடந்த குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

அவரது 23ஆவது நினைவு நாள் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிலையில், நடந்து முடிந்த 16ஆவது மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று எதிர்வரும் 26ஆம் திகதி பிரதமராகப் பதவியேற்க இருக்கும் நரேந்திர மோடி, ராஜீவ் காந்திக்கு தனது அஞ்சலியை டுவிட்டர் வாயிலாகச் செலுத்தியுள்ளார். (த)

## ஆளில்லா விமானம் மூலம் மும்பையில் பீஸா விற்பனை

மும்பை.மே 23

மும்பையைச் சேர்ந்த ஹோட் டல் ஒன்று ஆளில்லா சிறிய விமானம் மூலம் பீஸாவை வாடிக்கையாளரிடம் சேர்த்துச் சாதனை படைத்துள்ளது.

வாகனப் போக்கு வரத்து அதிகம் உள்ள இந்தியாவின் முக்கிய வர்த்தக நகரமான மும்பையில், குறிப்பிட்ட நேரத்துக்குள் உணவை வாடிக்கையாளரிடம் சேர்ப்பதற்கான மாற்று வழியைச் சிந்தித்த பிரான்சிஸ்கோஸ் பிட்சாரியா தான் இந்தச் சாதனையை எட்டியுள்ளது.

இது பற்றி தெரிவித்த உணவகத்தின் தலைமை நிர்வாகி மைக்கேல் ரஜனி, ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தும் அமேசான் திட்டங்களை நாங்கள் படித்திருக்கிறோம்.

பிஸாவுடன் ஆளில்லா சிறிய விமானம்

அதன்படி, சோதனை முறையில், மும்பையில் உள்ள எங்கள் உணவகத்தில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஒரு வாடிக்கையாளருக்கு பீஸாவை வெற்றிகரமாக அனுப்பியுள்ளோம் என்று கூறியுள்ளார்.

மேலும், ஒவ்வொரு ஆளில்லா விமானமும் 2000 டொலர் விலை கொண்டது என்றும், சில ஆண்டுகளில் இந்த ஆளில்லா விமானங்கள் வழக்கமான பயன்பாட்டுக்கு வந்து விடும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (த)

## மன்னிப்பு கேட்டார் மோடி

புதுடில்லி,மே 23

குஜராத் முதல்வர் பதவியில் இருந்து விலகியபோது நரேந்திர மோடி அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

குஜராத் மாநிலத்தில் 12 ஆண்டுகளுக்கு மேலாக நரேந்திர மோடி முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.

இந்த நிலையில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், நரேந்திர மோடி இந்தியப் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் பதவியேற்பதற்கு முன்பு, பிரியாவிடை கொடுப்பதற்காக குஜராத் சட்டசபையின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

முதல்வர் பதவியை துறப்பதற்கு முன்பு இந்தக் கூட்டத்தில் பேசிய நரேந்திர மோடி, கடந்த காலத்தில் தாம் ஏதாவது

நரேந்திர மோடி

தவறு செய்திருந்தால், அதற்காகத் தம்மை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் தான் முதல்வராக இல்லை என்றாலும், குஜராத் மாநிலம் தொடர்ந்து வளர்ச்சி பெறும் என்றும் கூறியுள்ளார். (த)

## சென்னையில் நில நடுக்கம்

சென்னை,மே 23

இந்திய நேரப்படி நேற்று முன்தினம் இரவு 9.51 மணியளவில் வங்கக் கடலில் ஏற்பட்ட நில அதிர்வு இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் உணரப்பட்டது.

ரிச்டர் அளவுகோலில் 5.8ஆகப் பதிவான இந்த நில நடுக்கத்தின் தாக்கம், டில்லி, ஒரிசா, மேற்கு வங்கம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் உணரப்பட்டது. சென்னையின் சில பகுதிகளிலும் நில அதிர்வு ஏற்பட்டது.

ஒரிசாவின் பாரதீப்புக்குத் தென்கிழக்கில் வங்கக் கடலில் 275 கிலோ மீற்றரில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது.

சென்னையின் சில பகுதிகளில் இந்த அதிர்வு உணரப்பட்டது. அடையாறு, கோடம்பாக்கம், திருவல்லிக்கேணி, தி.நகர், நுங்கம்பாக்கம் ஆகிய பகுதி

**கடல் மட்டத்திலிருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது.**

களில் ஏற்பட்ட அதிர்வின் காரணமாக அச்சமடைந்த மக்கள் வீடுகளை விட்டு தெருக்களுக்கு வந்தனர்.

மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத், ஹால்டியா, மிதினாபூர், திகா ஆகிய இடங்களிலும் அதிர்வு வலுவாக உணரப்பட்டது.

வழக்கமாக அந்தமான் நிகோபார் தீவுகளை ஒட்டிய கடல் பகுதிகளிலேயே மையம் கொண்டு நில நடுக்கம் ஏற்படுவது வழக்கம். ஆனால், இந்த நிலநடுக்கம் வங்கக் கடலில் மையம் கொண்டிருந்தது.

ஆயினும் சென்னையில் யாருக்கும் இந்த நில அதிர்வால் காயங்கள் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. (த)

## முதல்வர் பதவியிலிருந்து விலகியது எனது தவறுதான்

### மக்களிடம் மன்னிப்பு கேட்டார் கெஜ்ரிவால்

புதுடில்லி,மே 23

டில்லி முதல்வர் பதவியிலிருந்து தான் விலகியது தவறுதான், அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்தார்.

டில்லியில் மீண்டும் ஆட்சி அமைக்க ஆம் ஆத்மி கட்சி ஆயத்தமாகிவருகிறது. இதனை அடுத்து நேற்று முன்தினம் கெஜ்ரிவால் வீட்டில் ஆம் ஆத்மி கட்சியின் கூட்டம் நடைபெற்றது. அப்போது டில்லியில் மீண்டும் ஆட்சி அமைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அரவிந்த் கெஜ்ரிவால் கூறியதாவது,

அரவிந்த் கெஜ்ரிவால்

ஆம் ஆத்மி கட்சி டில்லியில் புதிய தேர்தலைச் சந்திக்க விரும்புகிறது. மீண்டும் ஆட்சி அமைப்பது குறித்துப் பொது மக்களிடம் வாக்கெடுப்பு கிடையாது. நாங்கள் ஆட்சியில் இருந்து விலகியதால் டில்லி மக்கள் மிகவும் வருத்தம் அடைந்திருப்பார்கள். எங்களுடையை தவறுக்காக அவர்

**நாங்கள் ஆட்சியில் இருந்து விலகியதால் டில்லி மக்கள் மிகவும் வருத்தம் அடைந்திருப் பார்கள்.**

களிடம் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் அடுத்த தேர்தலைச் சந்திக்கத் தயாராகி வருகிறோம். டில்லி மக்கள் நாங்கள் ஆட்சி அமைப்பதை விரும்புகின்றனர் என்று கூறினார். (த)

## சென்னையில் வாகன விபத்து; நாசரின் மகன் படுகாயம்

சென்னை,மே 23

சென்னை கிழக்குகடற்கரைச் சாலையில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் நடிகர் நாசரின் மகன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாபலிபுரம் மணவை கிராமம் அருகே சென்றுகொண்டிருந்தபோது லொறி ஒன்றுடன் நாசரின் மகன் உள்ளிட்ட சிலர் பயணித்த கார் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காரில் இருந்த வர்களில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். நடிகர் நாசர் மகன் பைசில் நாசர் படுகாயமடைந்தார்.

சிகிச்சைக்காக அவர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

# இந்திய-பாகிஸ்தான் நல்லிணக்கத்துக்கு மோடியின் பதவியேற்பில் நவாஸ் ஷெரீப்

இஸ்லாமாபாத்,மே 23

இந்தியாவின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நரேந்திர மோடி எதிர்வரும் 26ஆம் திகதி பிரதமராகப் பதவி ஏற்க உள்ளார். இந்த விழாவில் பங்கேற்க பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் 15ஆவது பிரதமராக, பா.ஜ.கவின் நரேந்திர மோடி, வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை பதவியேற்க உள்ள நிகழ்ச்சியில் பங்கேற்க வருமாறு, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் தெற்கு ஆசியத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தியாவுக்கும் இந்த நாடுகளுக்கும் இடையே சமீப காலமாக இடம்பெற்றவந்தவெளியுறவுக் கொள்கை வேறுபாடு உள்ளிட்ட சில பிரச்சினைகளால், இந்தத் தலைவர்கள் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதில் பல்வேறு விதமான அணுகுமுறைகளும் முரணான காரணங்களும் இருந்து வருகின்றன. இந்நிலையில் நேற்று பாகிஸ் தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், எதிர்வரும் 26 ஆம் திகதி மோடியின் பதிவியேற்பு விழாவில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்ததாகவும், ஆனால் அதுகுறித்த ஆலோசனை நீடித்து வருவதாகவும், அவர் கலந்து கொள்ளும் வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும் அதிகாரப் பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய நிலைகள் மீது பாகிஸ் தான் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதும், அதனை எதிர்த்து இந்திய இராணுவம் பதிலடி தருவதுமாக, எல்லையில் அவ் வப்போது பதற்றம் நிலவுகிறது. இது குறித்து பாகிஸ்தான் செய்தித் தொடர்பாளர் பஸூக் அந்நாட்டு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்: புதிதாக பதவியேற்க உள்ள இந்திய அரசின் இந்த நல்லிக்கணத்துக்கு பாகிஸ்தான் கைமாறு செய்யும் என கூறியுள்ளார்.

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா சார்பில் அந்நாட்டுச் சபாநாயகர் ஷிரின் ஷர்மின் ஆகியோர் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# போகோ ஹராம் கைவரிசை நைஜீரியாவில் 48 பேர் சாவு

## மூன்று கிராமங்களில் நேற்று அதிகாலை தாக்குதல்

அபுஜா,மே 23

நைஜீரியாவில் 3 கிராமங்களில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்னாபிரிக்கநாடான நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் தனி நாடு கோரி தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் அங்கு பாட சாலை மாணவிகள் சுமார் 200 பேர் போகோ ஹராம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டனர்.

மாணவியைமீட்கும்பணியை

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள்

அண்டை நாடுகளின் உதவியோடு நைஜீரியா மேற்கொண்டு வருகிறது. பாட சாலை மாணவிகளைக் கடத்திய போகோ ஹராம் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க நைஜீரியா உட்பட நான்கு ஆபிரிக்க நாடுகள் முடிவு செய்திருப்பதாகச் செய்திகள் வெளியாகின.

ஏற்கெனவே மாணவிகள் கடத்தப்பட்ட சிபோக் நகருக்கு இடையேயுள்ள 3 கிராமங்களில் நேற்று அதிகாலை போகோ ஹராம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் சுமார் 48 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## ஹிட்லரைப் போன்றவர் புடின்

### இளவரசர் சார்ள்ஸ் விமர்சனம்

மொன்றியல்,மே 23

முன்பு ஹிட்லர் செய்ததை இப் போது புடினும் செய்து வருகிறார் என்று பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் கருத்து வெளியிட்டுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இளவரசர் சார்ள்ஸ் தனது மனைவி கமிலா பார்க்கருடன் கனடாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சியின்போது பாதிக்கப்பட்டு நாட்டை விட்டு ஓடி வந்த பெண் ஒருவருடன் சார்ள்ஸ் பேசினார். அப்போது, முன்பு ஜேர்மனியில் ஹிட்லர் செய்த கொடுமைகளைப் போன்று இப்போது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் செய்கிறார் என்று அப்பெண்ணிடம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்த முக்கிய நபர் ஒருவர்

சார்ள்ஸ்

ரஷ்ய அதிபர் குறித்து இப்படி பகிரங்கமாகக் குற்றம்சாட்டி கருத்து தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. பிரான்ஸில் ஜூன் 6 ஆம் திகதி நடைபெறும் நிகழ்ச்சியில் புடினை சார்ள்ஸ் சந்திக்க உள்ளார். இந்நிலையில் சார்ள்ஸின் இந்தப் பேச்சு கூடுதல் முக்கியத் துவம் பெற்றுள்ளது. இது குறித்து சார்ள்ஸ் தரப்பில் இருந்து எந்தப் பதிலோ, விளக்கமோ அறிக்கையோ இதுவரை வெளியிடப்படவில்லை. (த)

# சவூதியில் நாய் இறைச்சி விற்பனை

## ஊடகங்களின் செய்தியால் பெரும் பரபரப்பு

றியாத்,மே 23

சவூதி அரேபியாவில் உணவு விடுதிகளுக்கு நாய் இறைச்சி விற்பனை செய்த குழு வொன்றை அதிகாரிகள் கைது செய்துள்ளதாக சவூதி அரேபிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆசியாவைச் சேர்ந்த மேற்படி நபர்கள், பல வருடங்களாகக் கட்டாக்காலி நாய்களை வேட்டையாடும் குழுவினரால் வழங்கப்பட்ட நாய்களை இரகசிய இடத்தில் வைத்து அறுத்து ஜெட்டா நகரிலுள்ள சில உணவு விடுதிகளுக்கு விற்பனை செய்ததாக மேற்படி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மிருகங்களின் எலும்புகள் பல

கைதாகிய குற்றவாளிகள்

வற்றைக் கொண்ட இடமொன்றில் அச்சத்துடன் சில இளைஞர்கள் காணப்படும் வீடியோ வொன்றையும் சவூதி அரேபிய ஊடகமொன்று வெளியிட்டுள்ளது.

எனினும், அந்தச் செய்தி தவறானது என சவூதி அரேபிய அதிகாரிகள் மறுத்துள்ளனர். சூப் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட ஆடு மற்றும் மாட்டின் எலும்புகளையே தாம் கைப்பற்றியதாகவும், சவூதி அரேபியாவின் சுகாதார மற்றும் தொழிலாளர் சட்டங்களை மீறிய குற்றத்துக்காகவே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (த)



தாய்லாந்தின் பிரதமர் பதவி விலகியதை அடுத்து அங்கு இராணுவ ஆட்சியை அறிவித்துள்ளார் அந்நாட்டின் இராணுவத் தளபதி. இதனையடுத்து நாட்டின் பிரதமர் மாளிகை பூரணமாக இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கு இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (த)

# சீனாவில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு

## 31 பேர் சாவு; 90 பேர் படுகாயம்

பீஜிங்,மே 23

சீனாவில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள சந்தையில் அடுத்தடுத்து 2 குண்டுகள் வெடித்தன. இந்தப் பயங்கரக் குண்டு வெடிப்பில் 31 பேர் உயிரிழந்தனர். மேலும் 90 பேர் படுகாயம் அடைந்தனர்.

சீனாவின் ஜிங்ஜியாங் பகுதியில் உள்ள ஒரு சந்தையில் 2 வாகனங்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகளே அடுத்தடுத்து வெடித்தன.

சம்பவம் நடந்த பகுதி அதிக கூட்டம் நிறைந்த பகுதி என்பதால் இந்தப் பயங்கரக் குண்டு வெடிப்பில் அங்கிருந்த 31 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 90 பேர் படு

பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பொலிஸார்

காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 7.50 மணிக்கு இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. குண்டு வெடிப்பின்போது பலத்த சத்தம் எழுந்ததாகவும், அதனைத்தொடர்ந்து மக்கள் அச்சத்துடன் வெளியேற முற்பட்டபோது அங்கு மற்றொரு குண்டு வெடித்ததாகவும் சீன செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு அல்-கெய்தா அமைப்பின் கிளையான கிழக்கு துருக்கிய இஸ்லாமிய அமைப்பு காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கடந்த மாதம் இதே ஜிங்ஜியாங் பகுதியில் உள்ள ரயில் நிலையத்தில் இடம்பெற்ற பயங்கரக் குண்டு வெடிப்பில் 3 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 79 பேர் படுகாயமடைந்தனர். (த)

## பணக்கார நடிகர்கள் பட்டியலில் ஷாருக்கானுக்கு இரண்டாமிடம்

புதுடில்லி,மே 23

உலகப் பணக்கார நடிகர்கள் பட்டியலில் ஷாருக்கான் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஹொலிவுட், பொலிவுட் உள்ளிட்ட சினிமா நடிகர்களின் உலகப் பணக்காரர் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் நடிகர் ஷாருக்கான் 3 ஆயிரத்து 600 கோடி இந்திய ரூபா பெறுமதியான சொத்துக்களுடன் 2ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்தப் பட்டியலில் 4 ஆயித்து 800 கோடி இந்திய ரூபா பெறுமதியான சொத்துக்களுடன் அமெரிக்க நகைச் சுவை நடிகர் ஜெரி செயின்பில்ட் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

பிரபல ஹொலிவுட் நடிகர் டோம் குருஸ் 3 ஆயிரம் கோடி இந்திய ரூபா பெறுமதியான சொத்துக்களுடன் காணப்படுகிறார்.

எனினும் அவரைவிட ஷாருக்கான் அதிகமான சொத்துக்களைக் கொண்டுள்ளார்.

ஷாருக்கான் இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் அணி ஒன்றின் உரிமையாளராக இருப்பதுடன் பல்வேறு தொழில்களையும் செய்து வருகிறார். அத்துடன், விளம்பரப் படங்களிலும் நடித்து வருகிறார். இவரது பெயரில் வெளிநாடுகளிலும் சொத்துக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: உங்கள் எண்ணத்திலும், செயலிலும் உறுதித்தன்மை இருக்கும். கடந்த காலத்தில் நிகழ்ந்த தவறு மீண்டும் வராமல் கவனத்துடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி கிடைக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**இடபம்**: உங்கள் வாழ்வில் உருவாகிற தடையை, தகர்த்தெறிய தகுந்த பணிபுரிவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உதவிகரமாக செயற் படுவர். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய பரிமாணம் ஏற்படும். பண வரவும், நன்மையும் அதிகரிக்கும். விருந்து விழாவில் கலந்துகொள்வீர்கள்.

**மிதுனம்**: சில பணிகளை நிறைவேற்றுகிற கட்டாய சூழ்நிலை ஏற்படலாம். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரம் உற்பத்தி, விற்பனையில் மந்தகதி இருக்கும். பணவரவு குறைந்த அளவில் கிடைக்கும்.

**கடகம்**: உங்களின் சிறிய வேலைக்கும் அதிக முயற்சி தேவைப் படும். இனிய அணுகுமுறையால், சில நன்மைகள் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தகதியைச் சரிசெய்வது நல்லது. உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாட்டைப் பின்பற்றவும்.

**சிங்கம்**:உங்கள் மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். தொடங்கும் செயல்கள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். வெகுநாள் காணாமற்தேடிய பொருள் கிடைக்கும்.

**கன்னி**: உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழிக்க, அனுகூல காரணி பலம் பெறும். கூடுதல் சொத்துச் சேர்க்கை பெறுவீர்கள்.

**துலாம்**: உங்கள் மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். நம்பகத்தன்மை இல்லாதவர்களிடம் சிரமங்களைச் சொல்வதால், ஒரு மாற்றமும் வராது. தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பு அவசியம்.

**விருச்சிகம்**: நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். பிறர் ஏற்படுத்துகிற காலவிரயமான பேச்சுக்களைத் தவிர்ப்பது அவசியம். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய தொழில் நுட்பம், யுக்தி பயன்படுத்துவது நல்லது.

**தனுசு**: முன் யோசனையுடன் செயற்படுவீர்கள். எதிரி செய்த கெடுதல் முயற்சி பலமிழந்து போகும். தொழில், வியாபாரம் செழிக்க, அதிக அளவில் பணிபுரிவீர்கள். பணவரவு கிடைக்கும். உறவினர்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்**: உங்களின் கவனக்குறைவால், குறிப்பிட்ட செயல் நிறைவேறுவதில், தாமதம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நல்வழிகாட்டும். தொழில், வியாபாரத்தில் உள்ள குளறுபடியைச் சரிசெய்வீர்கள்.

**கும்பம்**: எதிர்கால வாழ்வில் நன்மை பெற, புதிய வழிமுறைகளைத் திட்டமிடுவீர்கள். இஷ்ட தெய்வ அருட்பலம் துணை நின்று உதவும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அபரிமிதமான வளர்ச்சி பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்**: அடுத்தவர் மீதான நம்பிக்கையில், அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளைப் பாதுகாப்பது நல்லது. உறவினர் வகையில் சீர்முறை செய்ய, அதிக பணம் தேவைப் படும். பாதுகாப்பு நடைமுறையைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**நாளை**

**வைகாசி-10 சனிக்கிழமை |24.05.2014**

திதி: ஏகாதசி பி.இ.02.39 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மா.06.13 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
இராகுகாலம்: 08.52-10.22 வரை
ஏகாதசி விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## உரிமை

இயற்கையிலேயே இரண்டு சக்திகள் செயற்படுவது போலத்தோன்றுகிறது. இவற்றுள் ஒரு சக்தி, எப்போதும் பிரித்துக் கொண்டே இருக்கிறது; மற்றொன்று, எப்போதும் சேர்த்துக் கொண்டே இருக்கிறது. ஒன்று, மனிதர்களைப் பிரிக்க முயல்கிறது; மற்றொன்றோ, மக்களையெல்லாம் ஒன்றாக்கிய வேற்றுமைகளுக்கு இடையேஉள்ளஒற்றுமையை வெளிப்படுத்த முயல்கிறது. இந்த இரண்டு சக்திகளின் இயக்கமும் இயற்கையின் எல்லாப் பகுதியிலும், மனித வாழ்விலும் செயற்படுவதாகத் தெரிகிறது. பௌதீக நிலையில் இந்த இரண்டு சக்திகளின் வேலையும் நன்கு தெரிகிறது. ஒன்று, பொருள்களைத் தனித்தனியாகப் பிரித்து ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக்குகிறது; மற்றொன்று இப்படிப் பட்ட தனிப் பொருள்களை ஒன்றாக்கி, இனங்களையும் வகுப்புகளையும் உருவாக்கி, தனிப் பொருள்களுக்கு இடையேயுள்ள குண ஒற்றுமைகளையும் உருவ ஒற்றுமைகளையும் வெளிப்படுத்துகிறது. மனிதனின் சமுதாய வாழ்க்கைக்கும் இது பொருந்தும். சமுதாய வாழ்வு தொடங்கிய காலத்திலிருந்தே இந்த இரண்டு சக்திகளும் பிரித்தல், சேர்த்தல் ஆகிய வேலைகளைச் செய்து வருகின்றன. இவற்றின் இயக்கம் பல உருவில் வெளிப்படுகிறது. இந்த இயக்கம் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில்வெவ்வேறுபெயரைப் பெறுகிறது. ஆனால், இவற்றின் மூலதத்துவமான பிரித்தல் – சேர்த்தல் இரண்டுமே இவற்றுள் இருப்பது தெரிகிறது. ஒன்று, சாதியை ஆக்க முயல்கிறது; மற்றொன்று, அதைப் போக்க முயல்கிறது; ஒன்று, வகுப்புகளையும் சலுகைகளையும் ஆக்குகிறது. மற்றொன்று, இவற்றை உடைக்கிறது. இந்தப் பிரபஞ்சமே இந்த இரண்டு சக்திகளின் போர்க்களமாகத் தோன்றுகிறது.

# பறக்கும் மோட்டார் சைக்கிள்

பறக்கும் மோட்டார் சைக்கிளை அமெரிக்க நிறுவனமொன்று தயாரித்துள்ளது. கலிபோர் னியாவிலுள்ள ஒரு நிறுவனம் விமானம் போன்று பறக்கும் மோட்டார் சைக்கிளைத் தயாரித்துள்ளது. இதற்கு ஏரோ எக்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் சக்கரங்கள் விமானங்க ளில் இருப்பது போன்று ஏறி இறங்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதற்கு ஓடுதளம் தேவையில்லை. ஹெலிகொப்டரைப் போல இருந்த இடத்திலிருந்தே தரையில் இருந்து எழும்பிப் பறக்க முடியும். இது தரையிலிருந்து 10 அடி உயரத்தில் 72 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது. அதில், ஓட்டுனரைத் தவிர 2 பேர் பயணம் செய்யலாம். 140 கிலோ எடையுள்ள பொருள்களை இந்த மோட்டார் சைக்கிள் சுமந்து செல்லும் திறன் கொண்டது. ஒரு முறை எரி பொருள் நிரப்பினால் 75 நிமிடங்கள் இதில் பறந்து செல்ல முடியும். இந்தப் பறக்கும் மோட்டார் சைக்கி ளின் விலை 50 லட்சம் ரூபா என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதை 3 லட்சம் ரூபா கொடுத்து முன்பதிவு செய்யலாம் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த மோட்டார் சைக்கிள் 2017ஆம்ஆண்டுவிற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

140 கிலோ எடையுள்ள பொருள்களை இந்த மோட்டார் சைக்கிள் சுமந்து செல்லும் திறன் கொண்டது. ஒரு முறை எரி பொருள் நிரப்பினால் 75 நிமிடங்கள் இதில் பறந்து செல்ல முடியும்

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | 4 | 5 | | 2 | |
| | 9 | 2 | | 1 | | | | 6 |
| | | 8 | 7 | | | | | |
| | | | 6 | | 2 | | 1 | 3 |
| | | 3 | | 7 | | 6 | | |
| 5 | 1 | | 4 | | 9 | | | |
| | | | | | 7 | 9 | | |
| 6 | | | | 9 | | 3 | 7 | |
| | 3 | | 5 | 8 | 1 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 6 | 8 | 3 | 1 | 9 | 2 | 4 |
| 4 | 8 | 3 | 9 | 2 | 7 | 6 | 1 | 5 |
| 9 | 1 | 2 | 6 | 5 | 4 | 3 | 7 | 8 |
| 7 | 2 | 4 | 5 | 1 | 6 | 8 | 9 | 3 |
| 8 | 3 | 9 | 7 | 4 | 2 | 1 | 5 | 6 |
| 1 | 6 | 5 | 3 | 9 | 8 | 7 | 4 | 2 |
| 3 | 5 | 1 | 2 | 6 | 9 | 4 | 8 | 7 |
| 2 | 4 | 8 | 1 | 7 | 3 | 5 | 6 | 9 |
| 6 | 9 | 7 | 4 | 8 | 5 | 2 | 3 | 1 |

## மின்சாரம் வழங்காமை குறித்து முறைப்பாடு

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனிக்கங்குளம் கிராமத்துக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்படாமை குறித்து முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களை அதிகளவு கொண்டுள்ள பனிக்கங்குளம் கிராமத்தில் வடக்கின் வசந்தத்தின் ஊடாக மின்சாரம் பெறுவதற்கு இங்குள்ள மக்கள் பல மாதங்களாகக் கடும் முயற்சி எடுத்து வந்தனர் எனினும் இதுவரை அக்கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. மேலும் இந்தப் பகுதி உள்ள பாடசாலையொன்றுக்கும் மின்சாரம் வழங்கப்படாமை தொடர்பாக கடந்த 19 ஆம் திகதி வவுனியாவுக்கு பஸ்களில் சென்ற இந்தக் கிராம மக்கள் வடக்கின் வசந்தம் திட்ட அலுவலரிடம் மனுவொன்றையும் கையளித்துள்ளனர். (க-402)

## ஜக்கிய நாணய சங்கக் கூட்டம்

வட்டுக்கோட்டை, மே 23

வட்டுக்கோட்டை மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்கத்தின் ஆண்டு நிறைவு மகாசபைக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் போது அடுத்த நிதியாண்டுக்கான புதிய நெறியாளர்கைக் குழுத் தெரிவும் இடம் பெறும். யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் உட்பட சங்கானைப் பிராந்திய கூட்டுறவு சபை பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொள்ள வுள்ளனர். (உ)

# இயற்கை உரம், கிருமி நாசினிகளை பயன்படுத்துவது உடலுக்கு ஆரோக்கியம்

### முல்லைத்தீவு அரச அதிபர் அறிவுரை

முல்லைத்தீவு, மே 23

நாம் தினமும் நஞ்சூட்டப்பட்ட காய்கறி வகைகளை உண்கிறோம். இதனால் நோய்கள் ஏற்படுகின்றன. இயற்கை உரம் மற்றும் இயற்கைக் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதால் உடல் ஆரோக்கியத்தைப் பேண முடிவதுடன் மண்வளத்தையும் பாதுகாத்து எமது வருங்காலச் சந்ததியை ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு உதவவும் முடியும். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் ஒட்டுசுட்டானில் நடைபெற்ற வறட்சிகால பயிர்ச் செய்கை தொடர்பான செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

எமது முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்னமும் நிறைய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. வழமைக்கு மாறான கால நிலை மாற்றத்தினால் கடந்த ஆண்டு நெற்செய்கையில் பெரும் பாலான விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளனர். அதேபோன்று சிறுபோகச் செய்கையைக்கூடச் செய்யமுடியாது தவிக்கின்றனர். கடந்த ஆண்டு சிறுபோகத்தில் 14 ஆயிரம் ஏக்கரில் நெற் பயிர்ச் செய்கையை மேற் கொண்டுதிருப்தியான விளைச் சலை விவசாயிகள் பெற்றனர். இந்த வருடம் 500 ஏக்கருக்கும் குறைவாகவேநெற்செய்கையை மேற்கொள்கின்றனர். நான் பிறந்து வளர்ந்ததிலிருந்து இந்த வருடம்தான் இவ்வாறானகடும் வறட்சியைக் காண்கின்றேன். இனியும் இவ்வாறான இயற்கையின் தாக்கத்தை எதிர்கொள்ள வுள்ள தால் அதற்கேற்றவாறு எமதுபயிர்ச்செய்கைமுறைகளையும் தயார் செய்ய வேண்டும். இனிவரும் காலங்களில் குடி தண்ணீருக்கும் பெரும் தட்டுப் பாடு ஏற்படும் நிலை உருவாகி விடும். நாம் ஏற்கெனவே குடி தண்ணீர்த் திட்டங்களை இம் மாவட்டத்தில் ஆரம்பித்துள் ளோம். இங்கு 80 வீதமான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். ஆகவே இருக் கின்ற நீரை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்திப் பயிர்களைப் பயிரிடும் முகமாக இச்செய லமர்வு இடம்பெறுகின்றது. இதற்கான அனைத்து உதவி களையும் வழங்கிய விவசாயப் பணிப்பாளருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் எமது மாவட்டத்தில் பயிர் ஆராய்ச்சி அலுவலகம் ஒன்று அமைக்கப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் அதுவும் அமையும்என நம்புகின்றேன். எனவே கிடைக்கின்ற நீரை மிகவும் சிக்கனமாகப் பயன் படுத்திக் குறைந்த மாத இனப் பயிர் செய்கையை மேற் கொண்டு சிறந்த பயனை அடையவேண்டும்.

இதற்காக விவசாயத் திணைக் களம் அனைத்து உதவிகளை யும்வழங்கத்தயாராகஉள்ளது. நாம் தினமும் செயற்கை உரம், கிருமிநாசினி வகைகளைப் பயன்படுத்தி நஞ்சூட்டப்பட்ட காய்கறிகளை உண்டு வருகின் றோம். இதனால் நோய்களை எதிர்கொள்வதுடன் மண்ணை யும் பாழாக்குகின்றோம்.

வடமாகாண விவசாயப் பணிப் பாளர் எஸ். சிவகுமார் தலை மையில் நடைபெற்ற இச் செயல மர்வில் வறட்சியான சூழ்நிலை யில் நெற்செய்கையில் கைக் கொள்ள வேண்டிய விவசாய முறைகள் குறுகிய காலத்தில் விளைச்சல் தரும் வர்க்கங்க ளின் அறிமுகம், தரமான உயர் தர விதைகளைப் பெற்றுப் பயிரிடுதல், வறட்சியிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கும் தொழில்நுட்பங்கள், தூவல் நீர் பாசனத்தின் கீழ் பயிர்ச் செய் கையை மேற்கொள்ளல், வீட் டுத் தோட்ட சொட்டு நீர்ப்பாசன நடைமுறை எனப் பல்வேறு பயிற்சிகள் காட்சிகள் மூலமாக வும் விளக்க உரைகள் மூலமாக வும் விவசாயிகளுக்கு வழங் கப்பட்டன. (க-500)

## மலேரிய விழிப்புணர்வு நடைபவனி

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு மலேரியா விழிப் புணர்வு நடைபவனி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் ஆரம்பித்து பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி வரை இடம்பெறவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச் சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் இந்த நடை பவனியை ஆரம் பித்து வைப்பார். (க)

## இடையில் தரித்து நிறுத்தப்படாமையால் பஸ் பயணிகள் சிரமம்

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப் பாணம் வரையான தனியார் நெடுந்தூர பஸ் சேவைகளில் ஈடுபடும் பஸ்கள் இடையில் தரித்து நிறுத்தப்படாமையால் பிரயாணிகள் பல அசௌகரி யங்களை எதிர் கொண்டு வரு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தண்ணீர் அல்லது தேநீர் அருந்துவதற்குக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்காததோடு இயற்கைக் கடன்களைக் கழிப்பதிலும் பயணிகள் சிரமங் களைஎதிர்நோக்கின்றனர்.

இது தொடர்பாக பஸ் உரிமையா ளர்களிடம் கேட்டபோது, பயணத் தின் போது இடையில் பஸ்களை நிறுத்தி வைக்கக் கூடாது எனத் தமக்கு அறிவுறுத்தப்பட்டிருப்ப தாகத் தெரிவித்தனர். (க-500)

# வவுனியாவில் பெண்களை அவமதிக்கும் செயற்பாடுகள்

வவுனியா, மே 23

வவுனியாவில் பெண்களை அவமதித்துத் துன் புறுத்தும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வ தாகப் பலரும் கவலை தெரிவிக்கின்றனர். தோணிக்கல், தேக்கவத்தை, மதகு வைத்த குளம் ஆகிய கிராமங்களில் இருந்து அதிகமான பெண்கள் தமது குடும்ப வறுமையைப் போக்குவதற்கென நகர்ப்புற வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில்வேலை செய்து வருகின்றனர்.

இவர்கள் தினமும் காலை வேலைக்குச் சென்று மாலை வேளையில் வீட்டுக்குத் திரும்புவதை வழக்கமாகக் கொண்டுள்ள னர். இவர்கள்மாலைவேளையில்தமதுவீட் டுக்குத் திரும்பிச் செல்லும் போது பல சவால் களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

கடந்த வாரம் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் இரண்டு பிள் ளைகளின் தாயொருவர் அலுவலகக் கடமை முடித்து மதவுவைத்தகுளம் வீதியில் தனிமையில் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இளைஞர்கள் அவரின் உடலில் தட்டிய துடன் தகாத வார்த்தைகள் பேசி கேலி செய்து விட்டுச் சென்றதாகப் பாதிக்கப்பட்ட அந்தப் பெண் வருத்தத்துடன் தெரிவித்தார். இதே போன்று பல சம்ப வங்கள் மேற்குறிப் பிட்ட பகுதிகளில் இடம் பெறுகின்றன. தமக்கு வீதியிலும் வேலை பார்க்கும் இடங்களிலும் ஏற்படும் இத்தகைய கசப்பான அனுபவங்களை வீட்டில் சொன்னால் வீட்டுக்குள் முடக் கப்பட்டு விடுவோம் என்ற பயத்தில் பெண் கள் அவற்றைத் தமக்குள்ளேயே மூடி மறைத்துக் கொள்கின்ற னர். ( க-421)


**தேவை**
சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.
(48269) (7.6.3)
மாவிட்டபுரம் தொ.பே: 077 772 2215

**19.5L Coral**
19.5L போத்தலில் அடைத்த சுத்தமான குடிதண்ணீர் உங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து வழங்கப்படும்.
விலை 230/= மட்டுமே
நிறுவனங்களுக்கு விசேட கழிவு உண்டு.
தொ.பே: 077 254 3253
விநியோகப்பிரிவு.
(48311) (7.6.3)

**தேவை**
விற்பனை உதவியாளர் தேவை
தொ.பே: 076 654 2956
(48216) (7.6.3)

**கடை வாடகைக்கு**
யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் நியூ மாக்கற்றிற்கு முன்னால் கடை வாடகைக்குண்டு. எல்லாவிதமான வியாபாரத்திற்கும் ஏற்றது.
(48083) (12.5.6)
தொ.பே: 077 467 0284

**NEW MASTER INSTITUTE**
(மனோகரா சந்தியிலிருந்து நாவலர் வீதியில்)
2015 Batch (English/Tamil)
Chemistry - Organic
By : Singam (Royal) 077 196 6558
திங்கள் (4.00p.m-6.00p.m)
Biology - Systems
By : Vidya (தினக்குரல்) 071 773 0838
செவ்வாய் (4.00p.m-6.00p.m)
(48301) (7.6.3)

**விரு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் பழைய Milk White Company அருகில் 1½ பரப்புக் காணியுடன் இரண்டடுக்கு, ஆறு அறைகள், குசினிகள், குளியலறைகள் ஆகியவற்றுடனான வீடும், அத்துடன் வெறும் 1½ பரப்புக் காணியும் உடனடியாக விற்பனைக்கு உள்ளன. இவை இரண்டு காணிகளுக்கும் ஒரு பக்க எல்லை K.K.S.நோட் ஆகும். K.K.S. வீதி முன் கடை கட்டுவதற்கும், வியாபாரத்திற்கும் காணி உண்டு.
தொ.பே: 077 332 8642
(48299) (7.6.3)

**வைத்தியம்**
நாள்பட்ட விடாத தலைவலி, கழுத்து வலி, தோள் வலி, முள்ளந்தண்டு வலி, நாரி வலி, இடுப்பு வலி, முழங்கால் வலி, குதி வலி, பாத வலி அனைத்திற்கும் துரித நிவாரணம். அலர்ஜி, Asthma, கடி, Rheumatic, Arthritis, குழந்தை, கரு உற்பத்தி, முட்டை வளர்ச்சி சம்பந்தமான அனைத்து நோய்களுக்கும் விசேட சிகிச்சை. சனி (24), ஞாயிறு (25), திங்கள் (26) ஆகிய தினங்களில் நல்லூரில் சந்திக்கலாம்.
சித்த வைத்தியர்
Dr.R.Sivagurunathan
077 730 1669
சந்திப்பு இலவசம்.
(48435) (12.5.6)

**பிரத்தியேக வகுப்புக்கள்**
★ A/L பௌதிகவியல் மற்றும்
★ O/L கணிதம்
கிளிநொச்சியில்!
தனியாகவோ அல்லது குழுவாகவோ தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
தொடர்பு: - ஆசிரியர்கள் -
S.கபிரியல் B.Sc - 077 071 1031
V.ரமேஸ் B.Sc - 077 853 5097
(41272) (12.3.6)


## மரண அறிவித்தல்

**கந்தையா செந்தூரச்செல்வன்** (வெள்ளையர்)

மயிலிட்டியைப் பிறப்பிட மாகவும், சுளானை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசித்துவந்தவரு மாகிய கந்தையா செந்தூரச் செல்வன் 20.05.2014 செவ்வாய்க் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கந்தையா இராசு தம்பதி யரின் மகனும், காலஞ்சென்ற வர்களான தம்பிநாயகம் - பேபிசறோஜா தம்பதியரின் மரு மகனும், நந்தினியின் (நந்தா) பாசமிகு கணவரும், பிரித்திகாவின் (சியானு) அன்புத் தந்தையும், கமலிதேவி, குட்டி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 300 2463
(48309) (12.6.3)

## மரண அறிவித்தல்

**கனகரத்தினம் இராஜகோபால்**
(ஓய்வுபெற்ற நகராட்சி துணை மதிப்பிட்டாளர் - கொழும்பு மாநகரசபை)

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இராஜகோபால் 18.05.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் (கும்பளாவளை) - மீனாட்சி தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தவமணி (யாழ்/2ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, நீராவியடி) தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகுமாரியின் (ஓய்வுபெற்ற சித்திர ஆசிரியை, யாழ்/உரும்பிராய் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், கர்ஜினியின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, இராஜேந்திரம், இராஜராட்சுமி, இராஜலட்சுமி, இராமச் சந்திரன், இரட்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திரன், சிவசுப்பிரமணியம், சத்தியதேவி, வாசுகி, சுதர்சன், மடோனா, திருமதி.அப்பாத்துரை, சந்திரகாந்தன், தெய்வேந்திரகுமாரன், காலஞ்சென்ற மகேந்திரகுமாரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கிரியைகள் நடைபெற்று மு.ப.11.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரேரா ஒழுங்கை,
தெகிறும்பு 06.
(48348) (12.6.3)
தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சாமுவேல் பீற்றர்

[முன்னாள் இரசாயனவியலாளர்–காங்கேசன்துறை சிமெந்து ஆலை]



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் வத்தளையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் பீற்றர் 20.05.2014 செவ்வாய்க்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சாமுவேல்-எலிசபெத் தம்பதியரின் அன்பு மகனும், சிசிலியாவின் (தவமணி-ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ் சென்ற டனீசியஸ் மற்றும் தேவநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தி, வசந்தி, ஜஸ்ரின், எட்வின், ஜெயந்தி, சுகந்தி, ஆனந்தி, வானதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனிக்கிளேற், குணரத்தினம், தர்சினி, ரதி, சோதிநாதன், ஞானரஞ்சன், ஜெகதீஸ்வரன், லோஷன் ஆகியோரின் அன்பு மாமனும், பிறிஜிற்ரா, ஜெனா, ஜெரோன், டயானா, டிலானி, கெவின், பென்ரோன், கொலின், யூடித், விக்ரோரியா, ஜோதினி, திலீப், திவித்தா, சுரேன், சுஜானா, மெஷோன், யுகாஞ்சலி, டேவின், மிஸ்ரிகா ஆகியோரின் பேரனும், இசபெல்லா, கபிரியேல் ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.05.2014) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உடுவில் செபமாலை அன்னை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியின் பின்னர் பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

அம்பலவாணர் வீதி, உடுவில்.

(48317) (7.6.3)

## வாய்க்கால்களைப் புனரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு. மே 23

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள வெடுக்கு நாறிக் குளத்தின் துருசு மற்றும் வாய்க்கால்களைப் புனரமைத்து வழங்குமாறு இந்தப் பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இடப் பெயர்வுக்கு முன்னர் இவை புனரமைக்கப்பட்ட போதிலும் தற்போது உடைந்தும் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலையிலும் வாய்க்கால்கள் காணப்படுகின்றன.

அண்மைக்கால வறட்சி நிலை காரணமாகக் குளங்களின் நீர் மட்டம் குறைந்து வரும் நிலையில் வாய்க்கால்களில் வருகின்ற நீர் வாய்க் கால்களின் சீரின்மை காரணமாக வெளியேறி வருவதால் பயிர்களுக்கு உரிய வகையில் நீரைப் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

(க-500)

## கடலட்டை தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 23

கடலட்டை ஆய்வு முடிவுகள் தொடர்பான பயனாளிகளுக்கான செயலமர்வு யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் இன்று முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

தலைமையுரையை பேராசிரியர் திருமதி சி.குகநாதன் வழங்குவார். இதில் கடலட்டை தொடர்பான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

(க)

## சமாதான நீதிவான்

காளி கோயிலடி, உரும்பிராய் வடக்கில் வசிக்கும் திருமதி பத்மலோஜினி சந்திரபாலன் கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க் கிழமை யாழ். மாவட்ட நீதிபதி அ.அ.ஆனந்தராசா முன்னிலையில் யாழ்ப் பாணம் நீதிமன்ற வலயத்துக்கான சமாதான நீதிவானாகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

(க)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி தனேஸ்வரி சோமசுந்தரம்

மலர்வு 26.02.1924 — உதிர்வு 23.04.2014

எம்மை வையகத்துள் வாழ்வாங்கு வாழவைத்து வானுறையும் தெய்வமான அன்னையே!
உனை நினைந்து உருகுகின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவி ஒத்தாசைகள் புரிந்து துயரத்தில் பங்குகொண்ட மற்றும் அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட, மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (23.05.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும் (TCT Multi Trade Center) 527, நாவலர் வீதி, சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுடன்....
குடும்பத்தினர்.

236, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



நீங்கா நினைவுகளுடன்...

ஓராண்டு

மலர்வு : 28.10.1952
உதிர்வு : 14.06.2012

சந்தனநங்கை (சந்திரா)
கிருஷ்ணன்

அன்போடு அரவணைத்து
ஆசையோடு வளர்த்து
பண்புதனை விதைத்து
பாசத்தால் பிணைத்து
ஒன்று கூடி உறவுநாடி
ஒற்றுமையாய் உவகையோடு
நேசத்தைப் பகிர்ந்து
நேயமுடன் இணைந்து
வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழிகாட்டிச்சென்றவளே!
ஆண்டிரண்டு அகன்றாலும்
ஆறாது எம்துயரம்
நீங்கா நினைவலைகள்– எம்
நெஞ்சில் நிறைந்திருக்கும்.

திதி:
23.05.2014

குடும்பத்தினர்.

5/4,றக்கா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(48321)(3.6.4)

# உள்ளூராட்சி மன்றங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

*நாளை மறுதினம் வலி.தெற்கு பிரதேச சபை மண்டபத்தில்*

யாழ்ப்பாணம், மே 23

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் வலி.தெற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளும், அடுத்த ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டமும், வாக்காளர் களைப் பதிவு செய்தல், பாதிக்கப்பட்டவர்கள், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் தொடர்பான விவரங்களை ஆவணப்படுத்தல், தமிழ் பிரதேசங்களில் உள் ளூராட்சி மன்றங்களின் ஒன்றியம் ஆகிய பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

**பாதிக்கப்பட்டவர்கள், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் தொடர்பான விவரங்களை ஆவணப்படுத்தல், தமிழ் பிரதேசங்களில் உள் ளூராட்சி மன்றங்களின் ஒன்றியம் ஆகிய பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளன.**

அத்துடன் ஒவ்வொரு உள் ளூராட்சி மன்றத்தாலும் கடந்த ஒவ்வொரு ஆண்டிலும் நிறை வேற்றப்பட்டகோரிக்கைத்திட்டங்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அவை முழுமையாக நிறை வேற்றப்பட்டனவா, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் தடைகள் அல்லது நிறைவேற்ற இயலாமைக்குரிய காரணங்கள்பற்றியவிவரங்களைபொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு நிகழ்ச்சி அமைப் பாளர் மாவை சேனதிராசா உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார்.

இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்நாடாளுமன்ற உறுப் பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் வள வாளர்களும் கலந்து கொள்ள வுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ற)

# சீர்ப்படுத்தப்படாத மரங்களால் மின்தடை

**வவுனியாவில் மக்கள் விசனம்**

வவுனியா, மே 23

வீதியோரங்களில் ஓங்கி வளர்ந்துள்ள மரங்களால் அடிக்கடி வவுனியாவின் பல பிரதேசங்களில் மின்தடை ஏற்பட்டு வருகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கோப்புப் படம்

வீதியோரங்கள் மற்றும் வீதி களை அண்மித்த வீடுகளின் வளவுகளில் வளர்ந்துள்ள மரங்கள் ஓங்கி வளர்ந்து அந்தப் பகுதியூடாகச் செல்லும் மின் வயர்களுடன் உராய்வதால் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது.

குறிப்பாக வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள வீதி களில் இவ்வாறு மின் தடை ஏற்படுகின்றது.

அந்தப் பகுதியிலுள்ள சில மக்கள் தாமதமாக முன்வந்து தமது வீட்டு வளவுகளில்உள்ளமரங் களின் கிளைகளை வெட்டி மின்தடை ஏற்படாமல் பாதுகாத்து வந்தாலும் மற்றும் சிலர் தமது பகுதிகளில் உள்ள மரங்களின் கிளைகளை வெட்ட முன் வரவில்லை என வும் அதனால் அடிக்கடி மின் தடை ஏற்படுகின் றது என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக் கின்றார்கள்.

இது தொடர்பான விழிப் புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி மின்தடை ஏற்படு வதைத் தடுக்கும் நட வடிக்கை களை முன்னெடுக் குமாறு இலங்கை மின்சார சபையின் வவுனியா கிளை அதிகாரிகளி டம்அந்தப்பகுதிமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-421)

## பரிசுத் தினம் நாளை

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் முத லாவது பரிசில் நாள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும்,சிறப்புவிருந் தினராக கொமர்ஷல் வங்கியின் கொடிகாமம் கிளை முகாமை யாளர் குருபரராஜா வும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-9)

## ஆலய திருவிழா

வவுனியா, மே 23

வவுனியா பம்பைமடு ஸ்ரீமுரு கன் ஆலய வருடாந்த அலங் காரத் திருவிழா இடம்பெற்று வருகிறது. எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், 29 ஆம் திகதி வியாழக்கிழமை வைரவர் மடையும் இடம்பெறவுள்ளன.

பிரதம குருவாக சிவஸ்ரீதி ருஞான பஞ்சாட்சரக்குருக் களும், ஆலய குருவாக பிரம் மஸ்ரீ கமலேஸ்வர சர்மாவும் பூசை ஆராதனைகளை மேற் கொண்டு வருகின்றனர். (க-402)

# கிராமத்துக்குள் புகுந்து யானை அட்டகாசம்

**பயன்தரு மரங்கள் அழிந்தன**

துணுக்காய், மே 23

துணுக்காய் புத்துவெட்டுவான் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு நுழைந்த யானை யொன்று பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. இரவு 11 மணியளவில் கிராமத் துக்குள் புகுந்த யானை அங்குள்ள குடி யிருப்புக்காணிகளுக்குள்சென்று பல பயன்தரு மரங்களை அழித்துள்ளது.

அதன் பின்னர் திரண்ட ஊர் மக்கள் ஒருவாறு யானையை விரட்டியுள்ளனர். அண்மை யில்யானைஒன்று மாங்குளம் பகுதியில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்திருந்தது. அதன் பின்னர் யானைகள் கிரா மங்களுக்குள் உட்புகும் சம் பவங்கள் குறைந்திருந்தன. ஆயினும் தற்போது அவ் வாறான சம்பவங்கள் மீண் டும்தலைதூக்கியுள்ளன. (ற-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மங்கையர்க்கரசி (மல்லிகா) சண்முகரெத்தினம்

வேலணை மேற்கு-6, (பழைய பஸ் கொம்பனியடி) ஐப் பிறப்பிட மாகவும், திருநெல்வேலி, நியூசி லாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி சண்முக ரெத்தினம் 21.05.2014 புதன் கிழமை இந்தியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் சண்முகரெத்தினம் (சுவிஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான சோமசுந்தரம்-காந்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையா- இலட் சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நிராசன் (கனடா), சியாமளன் (நியூசிலாந்து), சர்மளன் (ஆஸ்திரேலியா), கஜநிவாஜி (நியூசிலாந்து), துவாரகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வினோதா (கனடா), விசித்திரா (நியூசிலாந்து), திசானா (உரும்பிராய்), விஜயகுமார் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், கனிமொழி, கரிகாலன், தேன்மொழி, துதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராஜஇரா சேஸ்வரி (கனடா), சந்திரசேகரம்பிள்ளை (சுதுமலை, ஈஞ்சடி), சுந்தர லிங்கம் (இலங்கை வங்கி), சற்குணநாதன் (யா/சென் சார்ஸ் ம.வி), இந்திராணி (கனடா), இரஞ்சிதா (ஜேர்மனி), நாகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகாம்பிகை, திருஞானேஸ்வரி, ப்ரதிதேவி, பரமலிங்கம் (கனடா), இராசேந்திரம் (ஜேர்மனி), சசிகலா (சுவிஸ்), கோணேஸ்வரி, மனோன்மணி (இந்தியா), தவமணி (கனடா), சரவணநாதன் (தபால் அதிபர், கொழும்பு), சண்முகானந்தன் (ரவி-சுவிஸ்), கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 6, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி வடக்கு.
(தபால்பெட்டி இந்நாடு)
T.P No: 021 221 9189 (48324)(7.6.3)

தகவல் :
க. சண்முகரெத்தினம்
(கணவர்)

### திருமதி தனலட்சுமி நடராசா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மூளாய், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி நடராசா 20.05.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சுப்பிரமணியம் நடராசாவின் அன்பு மனைவியும், திரு. திருமதி சுப்பிரமணியத்தின் மருமகளும், திரு.திருமதி நாகலிங்கம் தம்பதியரின் மூத்த மகளும், அருணாசலம், சோமசுந்தரம், பரிபூரணம், பழனிப்பிள்ளை, சரஸ்வதி, இராசசிங்கம் ஆகியோரின் சகோதரியும், இரவீந்திரன் (ரவி), இரவிச்சந்திரன், இரவிகாந்தன் ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், விஜயலட்சுமி, சந்திரலீலா, சதாரூபவதி ஆகியோரின் மாமியாரும், மஞ்சுபாசினி, ரவிவர்மா, சுதாரவிவர்மா, கஜேந்திரன், மயூரன், நிஷாந்தினி, லக்ஷ்மன், புருஷோத்மன் ஆகியோரின் பாட்டியும், ஆனந்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் நாளை (24.05.2014) சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் மறுநாள் 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி 9.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : பிள்ளைகள்.

## தவறிவிட்டது

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட இலங்கை போ.வ.சபை பஸ்வண்டியில் மு.ப. 11.00 மணியளவில் கிளிநொச்சியில் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. அதனுள் அடையாளஅட்டை இரண்டு, மக்கள்வங்கி கணக்குப்புத்தகம், ஒய்வூதிய அட்டை என்பன உள்ளன. தவறியது தொடர்பில் அறிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

பாக்கியராசா இராசமணி,
146, செல்வாநகர், கிளிநொச்சி.
தொ.பே: 077 441 9546 (41278)(3.6.4)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றஉறுப்பினரும் சேமிப்புக்கணக்கின் உறுப்பினருமான இ.அருட்செல்வம் (ஓப்பாண்சொப்-சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தந்தை

**பொன்னையா இரத்தினம்**

அவர்கள் 21.05.2014 காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம். (க/சவா) (3.6.4)

## பெயர் மாற்றம்

மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுரு மனிக்கவல்லி ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் சிவகுரு மாலதி எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(48323) (10.6.3)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கு வயது 50-60 இற்கு உட்பட்ட பணிப் பெண் தேவை

(48322)(10.6.3) தொடர்பு: 077 201 9884

## வடிகால்களில் நீர் தேங்கி துர்நாற்றம்

கொழும்புத்துறை, மே 23

யாழ். காங்கேசன்துறை வீதியில் சத்திரச் சந்திக்கும் தபாற்கந்தோர் சுற்று வட்டத்துக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள கழிவு நீர் வடிகால் களில் நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதாக அந்தப் பகுதி வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின் றனர்.

அந்தப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கழிவு நீர் வடிகால்களில் விழுந்துள்ள கல், மண் குவி யல் என்பன மாநகர சபை ஊழியர்களால் அகற் றப்படுவதில்லை. இதனால் வடிகால்கள் அடை பட்டுள்ளன. இவற்றுள் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் டெங்கு நுளம்பு உற்பத் திக்கும் உறுதுணையாக இருக்கின்றது.

குறித்த பகுதிகளில் உள்ள உணவகங்களில் இருந்து வடிகாலுக்குள் வந்து சேரும் கழிவுநீரும் சேர்ந்து ஏற்படுத்தும் துர்நாற்றம் அந்தப்பகுதி யையே மனிதர்கள் வாழ முடியாத பிரதேசமாக ஆக்கிவருவதாகத்தெரி விக்கப்படுகிறது. (உ-135)

## ஆலயப் பொதுக் கூட்டம்

பளை, மே 23

பளை வேம்பொடு கேணி நவுணவெளி அம்பாள் ஆலய பொதுக் கூட்டம் இன்று பி.ப. ஒரு மணிக்கு ஆலய முன்றலில் இடம் பெற வுள்ளது என்று ஆலய பரிபாலன சபை அறி வித்துள்ளது.

குறித்த கூட்டம் இன்று மு.ப 10மணிக்குநடை பெறும் என்று ஏற்க னவே அறிவிக்கப்பட் டிருந்தது. ஆயினும் தவிர்க்க முடியாத கார ணங்களால் அது பிற் பகல் ஒருமணிக்கு மாற் றப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. (ற-9)


கட்டாரில் TAXI DRIVER டெக்சி டிரைவர்
உடனடி வேலை வாய்ப்பு
100 பேர் தேவை
சம்பளம் QR 1200+QR150
டிப்ஸ் மாதம் 100,000/= (1QR=36/-) வரை சம்பாதிக்கலாம்.

விபரங்களுக்கு
* 8 மணி நேர வேலை
* ஒரு வேலை வாய்ப்பு (நிதியுதவி)
* இலவசமாக தங்குமிடம், சோகவுனாத்து வழங்கப்படும்
* ஒரு முழுமதி நாளும் திரும்பி டிக்கட் முகவரி
முகவரியை கட்டார் தொழில் சட்டத்திற்கு அமைவானது

நேர்முகப்பரீட்சை
26ஆம் திகதி மே,2014

இப்றாஹீம் என்ரபிரைசஸ் பி..லிமிட்.
IBRAHIM ENTERPRISES (PVT) LTD
No.52,1st Floor Hospital Street,Colombo-01
Tel: 0112 392 011 / 0112 392 012 Email: info@ibrahimgroup.lk
Hotline: 0777 851 049 | 0779 077 050 | 0772 293 055

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் தம்பிராசா சந்திரமோகன்

தோற்றம் 22.09.1953

மறைவு 23.04.2014

கடந்த 23.04.2014 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் தம்பிராசா சந்திரமோகன் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் இன்று (23.05.2014) காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்திய கிரியைகள் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் அத்துடன் மதிய போசனம் 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை 11.00 மணியளவில் இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்ட பத்திலும் (இணுவில் கிழக்கு) நடை பெறவிருப்பதால் அத் தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்..

இந்த தகவலை வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ் கிடைக்க தவறிய அனைவரையும் அன்புடன் ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

சோதிராசா
குடும்பத்தினர்.

(48329) (10)

## பம்பலப்பிட்டி இந்து ஆசிரியர் சாவு தற்கொலை என உறுதி

கொழும்பு, மே, 23

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் சடலமாக மீட்கப்பட்டமையானது தற்கொலை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் 9 வருடங்களாகக் கடமையாற்றி வந்த மன்னாரைச் சேர்ந்த பிரான்சிஸ் கமிலஸ்(வயது-37) என்பவர் கல்லூரி விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் இவரின் சாவில் சந்தேகம் நிலவுவதாகச் சடலமாக மீட்கப்பட்ட ஆசிரியரின் மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைக் கருத்தில்கொண்டு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பிரேத பரிசோதனையின்போது குறித்த ஆசிரியர் தற்கொலை செய்துள்ளார் என்று தெரியவந்துள்ளதாகக் கூறினர்.

குறித்த ஆசிரியரின் சாவு தற்கொலை என உறுதி செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-10)

## கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், மே 23

இலங்கை பொறியியலாளர் சங்கமும், யாழ். முகாமையாளர் சங்கமும் இணைந்து நடத்தும் "இணையத் தளத்தைப் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை எவ்வாறு தவிர்த்தல்" என்பது தொடர்பான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் யூரோவில் மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் மொறட்டுவப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சாந்த பெர்ணான்டோ, பொறியியலாளர் அசங்க பாலசூரிய மற்றும் பொறியியலாளர் கசுன் சத்துரலிக ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ற-400)

## தொண்டமானாறு தனு வெளியீட்டகம்
### தரம் 05 புலமைப்பரிசில் பொதுப் பயிற்சிப் பரீட்சை - 2014

எமது நிறுவனத்தினால் 11.05.2014 இல் நடத்தப்பட்ட முதலாவது பரீட்டையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர் விவரங்கள் வருமாறு.

| மாணவர் பெயர் | பெற்ற புள்ளி | நிலை | பரீட்சை நிலையம் | கல்வி கற்கும் பாடசாலை |
|---|---|---|---|---|
| ஜெ. தவேதன் | 182 | 1 | பிற்ஸ்மன், மானிப்பாய் | யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி |
| த. தரங்கினி | 179 | 2 | உதயதாரகை, கொற்றாவத்தை | யா/நெல்லியடி, மெ.மி.த.க. பாடசாலை |
| வி.விதுசன் | 176 | 3 | தனு வெளியீட்டகம், தொண்டமானாறு | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி |
| இ.பிரவீனா | 176 | 3 | சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை | யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை |
| ஜெ.சஜிந்தன் | 175 | 5 | சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை | யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை |
| ம.விஷ்ணுகன் | 173 | 6 | நியூ எக்சலன்ட், நெல்லியடி | யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் |
| சு.வினுஜா | 172 | 7 | தனு வெளியீட்டகம், தொண்டமானாறு | யா/தொண்டமானாறு வீ.ம.வித்தியாலயம் |
| ம.சகானா | 170 | 8 | கலைவாணி, கோப்பாய் | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் |
| இ.விஷ்ணுகா | 169 | 9 | உதயதாரகை, கொற்றாவத்தை | யா/வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை |
| பா.லகீசன் | 166 | 10 | நியூ எக்சலன்ட், நெல்லியடி | யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை |
| ஜெ.அபிஷிகா | 166 | 10 | சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை | யா/தும்பளை சிவப்பிரகாச ம. வித்தியாலயம் |
| க. லகீசன் | 166 | 10 | கலைவாணி, கோப்பாய் | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் |
| ஆ.அம்சிகா | 159 | 13 | நியூ எக்சலன்ட், நெல்லியடி | யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் |
| யோ.பூமிகா | 159 | 13 | கலைவாணி, கோப்பாய் | யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் |
| ம. விஷாகன் | 158 | 15 | A.T.C. இணுவில் | யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| இ.கபிஷன் | 158 | 15 | A.T.C. இணுவில் | யா/இந்து ஆரம்ப பாடசாலை |
| சி.நிதுஷா | 157 | 17 | நியூ எக்சலன்ட், நெல்லியடி | யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் |
| உ.ஹரிப்பிரியன் | 156 | 18 | தனு வெளியீட்டகம், தொண்டமானாறு | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி |
| ந.கஜேந்தினி | 154 | 19 | வள்ளுவர் அக்கடமி, உரும்பிராய் | யா/இணுவில் மத்திய கல்லூரி |
| சு. நரேந்திரன் | 153 | 20 | நியூ ஒக்ஸ்போட், திருநெல்வேலி | யா/இந்து ஆரம்ப பாடசாலை |
| அ.திவேதிகன் | 152 | 21 | கலைவாணி, கோப்பாய் | யா/மத்திய கல்லூரி |
| அ. உமாகேசன் | 151 | 22 | தனு வெளியீட்டகம், தொண்டமானாறு | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி |
| லி.திலக்சன் | 151 | 22 | ஸ்ரான்போட் கல்லூரி, உடுப்பிட்டி | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி |

இம்மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனு வெளியீட்டகத்தினர்.

(48331)(10)

## மலசலகூடத்தில் நேற்று சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு, மே, 22

தெமட்டகொட பிரதேச பொது மலசலகூடத்தில் இருந்து சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தெமட்டகொட பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்தே இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெமட்டகொட பொலிஸார் கூறுகையில், பிறந்து இரண்டு நாள்களேயான சிசுவின் சடலமே மீட்கப்பட்டுள்ளது. சடலம்தற்போதுகொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சிசுவின் தாய்யார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்-என்று கூறினர். (த)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## பாராட்டி வாழ்த்துகின்றேன்

உயர்திரு.
நடராஜா தங்கத்துரை
(கிராம அலுவலர் J/382, கப்புது)




இன்புறும் வதனத்தோடும் இப்பதவியில் 37 வருடங்கள் முன்னின்று பணியாற்றி அனைவரையும் அன்பால் வழிநடத்திய தங்க மா மன்னரே எங்கள்தங்கத்துரை ஐயாவே பல்லாண்டு காலம் சேவையாற்றி இளைப்பாறும் உங்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்து நீங்கள் நற்சுகத்துடன் சிறப்புற வாழ இறைவனைப் பிரார்திக்கின்றேன்.

பா.நிறோஜன்
0766 453 356
கரவெட்டி.

(45554)(5.6)

## மரண அறிவித்தல்

திருமதி மணிமேகலை வரதராசா

வேலணை முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மணிமேகலை வரதராசா 21.05.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-சரஸ்வதி தம்பதிய ரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-அன்ன்லட்சுமி தம்பதியரின் மருமகளும், வரதராசாவின் அன்பு மனைவியும், வசிகரன், வசிகஜன்,கஜிபன் (கஜமுகன் மல்ரி சொப் வங்களாவடி),காணுசன் (வேலணை மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கஜராஜியினி (மாநகரசபை யாழ்ப்பாணம்),ஜெயந்தி (யாழ்.பல்கலைக்கழகம், இறுதியாண்டு) ஆகியோரின் மாமியும், ரஷ்மினா,ரஷ்சகன் ஆகியோரின் பேர்த்தியும், தவமணி, காலஞ்சென்றவர்களான சுலோசனாதேவி,மதிவதனி மற்றும் காந்தரூபன், மதியழகி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், றாதா, றங்கன் மற்றும் விமலநாதன்,அகிலநாதன், சசிகலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2014)வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி செம்படவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் வட்டாரம், செல்வநாயகம் வீதி,
வேலணை கிழக்கு,வேலணை

தகவல்:
குடும்பத்தினர்.

(48328)(5.6.3)

## பதவி வெற்றிடம்

வவுனியா நகர எல்லைக்குள் தோணிக்கல் கிராமத்தில் இயங்கும் ஆடை தயாரிப்பு கம்பனி (பெண்களால் இயக்கப்படும்) ஒன்றுக்கு தையல் தெரிந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. அடிப்படை சம்பளமாக 9000.00 ரூபாவும் மேலும் ஒவ்வொரு மணித்தியாலமும் தங்களுக்கென ஒதுக்கப்படும் வேலைகளை நிறைவு செய்து தருபவர்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ் பிரதியுடன் சரியான முகவரியிட்டு விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:
024 222 4382, 077 377 9242, 077 667 7740

விண்ணப்ப இறுதித்திகதி: 01.06.2014

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
மின்னஞ்சல்: kobigarm@gmail.com
தபால் முகவரி: முகாமை இயக்குநர்
கோபிதன் காமென்ஸ் (Pvt)Ltd,
இல.14,8 ஏக்கர், வியாசர் வீதி,
தோணிக்கல், வவுனியா.

(43317) (10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய் கோமகன் கருமத்திருதி
லயன்.Dr.வை.தியாகராஜா MJF, JP
சர்வதேச லயன்ஸ்கழகத்தின் 100 ஆவது ஆண்டு தலைவராக கடந்த 10 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் 2 ஆம் உப ஆளுநராக அமோக வாக்குகளால் வெற்றிக் கொடி நாட்டிய உத்தமசீலனும் உன்னத சேவையாளனும் கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் பிதா மகனும் ஆகிய லயன் Dr.V.தியாகராஜா அவர்கள் குடும்பத்தினரையும் வாழ்த்துவதில் எமது கழகம் பெருமையடைகின்றது.

லயன்ஸ் கழகம்- தென்மராட்சி கிழக்கு

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### புலம்பெயர்

கிழமை பகல் இராணுவ சிவில் காரியாலயத்துக்கு அழைக்கப் பட்டிருந்த அவரிடம், நினை வேந்தல் நிகழ்வை நிறுத்து மாறு பிரிகேடியர் அபயநாயக்க கேட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில் விசா ரணைக்கு அழைக்கப்பட்ட போராசிரியர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் வைத்து சுமார் 8 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். புலம்பெயர் தமிழர்களுடன் உள்ள தொடர்பு கள் குறித்தே அவரிடம் விசா ரணை நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

புலம்பெயர் தமிழர்கள் தமது செயற்பாடுகளை பேராசிரியர் இராசகுமாரன் மூலமாகக் கொண்டு நடத்தத் திட்டமிட்டுள்ள னர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாலேயே அது குறித்து தாம் விசாரணை நடத்து கின்றனர் என்று பொலிஸார் அவரிடம் தெரிவித்துள்ளனர்.

(உ-4)

### வடமாகாண

ஆளுங்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்து, கொழும்பு அரசின் நடவடிக்கைக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும்கூட கறுப்புப் பட்டி அணிந்து கொண்டனர். எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு கறுப்புப்பட்டி வழங்கப்பட்ட போதும் அவர்கள் அதை அணியவில்லை.

இதன் பின்னர் அவையிலி ருந்து ஆளுங்கட்சி உறுப்பினர் கள் கையில் மெழுகுதிரியை ஏந்தியபடி சபா மண்டபத்தின் நடுவில் நின்று, முள்ளிவாய்க் காலில் மூர்ச்சையாகிப் போன உறவுகளுக்காக அஞ்சலிசெலுத் தினர். இந்த நிகழ்வில் எதிர்கட்சி யான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ரமீஸும் பங்கு கொண்டார்.

அவை ஆரம்பிப்பதற்காக அழைப்பு மணி அடிக்கப்பட்ட பின்னரே ஈகைச்சுடரேற்றல் இடம்பெற்ற போதும், அவைத் தலைவர் அவையை ஆரம்பிப்பதற்கு வரவில்லை. அஞ்சலி நிகழ்வு முடிந்த பின்னரே அவைக்குள் பிரவேசித்தார். இத்தகைய ஒரு நிகழ்வுசபையில்நடைபெற்றால் அதில் தாங்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று நேற்றுமுன் தினம் நடந்த கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர் களுக்கான கூட்டத்தில் முதல மைச்சரும் அவைத் தலை வரும் ஏற்கனவே தெரிவித் திருந்தனர்.

(உ-5)

### பயங்கரவாத

செய்யப்பட்டுள்ளது என்றும், அந்தக்காணி மீளிணைய முயற்சிக்கும் விடுதலைப் புலி கள் அமைப்பின் எதிர்காலப் பயன்பாட்டுக்கு வாங்கப்பட் டுள்ளதுடன், அதற்குரிய நிதியை விடுதலைப் புலிகள் அமைப்பே வழங்கியுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

(ற)

### மீன்பிடிப்

இலங்கைக் கடல் எல்லைக் குள் வந்து அவர்கள் மீன்பிடிப் பதில்லை. எனினும் ஜூன் மாதம் முதலாம் திகதியின் பின்னர் அவர்கள் மீண்டும் மீன்பிடிக்க ஆரம்பித்துவிடுவர். அப்போது தாம் கடுமையாகப் பாதிக்கப் பட வேண்டியிருக்கும் என்று இலங்கை மீனவர்கள் கவலை யடைந்துள்ளனர்.

இதற்கிடையே எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் என்ற குற்றச்சாட்டில் இரு நாட்டு கடற்படையினரும் மீனவர் களைத் தொடர்ச்சியாகக் கைது செய்து வருகின்றனர். இதை யடுத்தே புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மோடியைச் சந்தித்து இது பற்றிப் பேசுவது என்று இந்திய மீனவர் சங்கங்களின் பிரதிநிதி கள் முடிவு எடுத்துள்ளனர்.

இந்த சந்திப்பில் இலங்கையில் இருந்து மீன்பிடித்துறை ஆலோ சகர் எஸ்.பி.அந்தோனிமுத்து வையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மோடியுடனான சந்திப்புக்கான ஏற்பாடுகளை இலங்கை - இந்திய மீன்படி ஆலோசகர் என். தேவதாஸ் மேற்கொண்டுள் ளார்.

ஏதிர்வரும் ஜீன் மாதம் நடுப் பகுதியில் புதுடில்லியில் இந்தப் பேச்சு நடக்கும் என்று தெரி விக்கப்படுகிறது.

(உ-14)

### அரசும்

இதில் நினைவேந்தல் உரையை ஆரம்பித்து வைத்து உரை யாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி எமது மக்கள் எத்தனையோ பேர், எப்படி, எங்கு வைத்துக் கொல்லப் பாட்டார்கள் என்பதை சர்வ தேச சமூகம் ஆராய்ந்து விரை வில் எங்களுக்கு விடையளிக் கும். நாங்கள் உயிரிழந்த எங் கள் உறவுகளை நினைவு கூரு தல் என்பது எங்கள் மனநிலை யின் வெளிப்பாடு.

இதனைச் செய்யவிடாமல் இந்த அரசு தடுக்கின்றது. இறந்தவர் கள் திரும்பி வந்து விடுவார்கள் என்ற பயத்தினால்தான் நாம் நினைவுகூருவதை இந்த அரசு தடுக்கின்றது. அதனால்தான் இலங்கை அரசும் - இராணு வமும் இந்த விடயத்தில் தேவை யற்ற தலையீடுகளைச் செய் கின்றனர்.

நாங்கள் ஆலயங்களில் செய்ய வேண்டியவற்றை அரசியல் அரங்குக்கு கொண்டு வர வேண்டியதில்லை. அந்தப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாங்கள் உதவிகளைச் செய்து அதனை நிறைவேற்றலாம். அரசியலாக்க வேண்டிய தில்லை என்பதற்காக நாங் கள் எங்கள் மனநிலையை வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதில்லை - என்றார்.

(உ-5)

### யாழ்.பல்கலை

ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"யாழ்.பல்கலைக் கழக கல்வி நடவடிக்கைகள் பாதிப்பின்றி நல்ல முறையில் மேற்கொள் ளப்பட வேண்டும் என்பதே இராணுவத்தினரின் நோக் கம்.

யாழ்.பல்கலைக் கழகத்துக் குள் துண்டுப் பிரசுரங்கள் வீசப் பட்டமைக்கு எந்த ஆதாராங் களும் இல்லை. இது தொடர் பில் ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்துள்ளன. அதுகுறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பல்கலைக் கழக வளாகத்துக் குள் இராணுவம் இல்லை. கடந்த புதன்கிழமை அங்கு, இறுதிப் போரில் உயிரிழந்த பொதுமக்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட் டது. அதனால்தான் அதனை நாம் தடுக்கவில்லை.

அதேவேளை, பல்கலைக்கழ கத்துக்குள் விடுதலைப் புலிக ளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டி ருந்தால் அதனைக் கட்டாயம் தடுத்து நிறுத்தியிருப்போம். பொதுமக்களின் இறப்பை அர சியலாக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது"- என்று தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசியரிர் சங் கத் தலைவர் இராசகுமாரன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின ரால் விசாரணைக்குட்படுத்தப் பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த இராணுவத்தளபதி, "அவர் விசாரணை செய்யப் பட்டமைக்கும், பல்கலைக்கழ கத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

ஆசிரியர் சங்கத் தலைவர் புலம்பெயர்ந்துள்ள விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்று புல னாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்ப டையிலேயே அவர் விசார ணைக்குட்படுத்தப்பட்டார்."- என்று தெரிவித்தார்.

(ற)

### பங்களாதேஷ்

"சார்க் அமைப்பை சேர்ந்த நாட்டின் தலைவர் என்ற வகையில் இலங்கை ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்கு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. இலங்கை தமிழர் நலனை விட்டுக் கொடுக்கும் வகையில் பா.ஜ. க. நடந்து கொள்ளாது. இலங் கைத் தமிழர்கள் சமஉரிமை யுடன் வாழ்வதற்கான தொடக் கமே. இந்த முடிவு.

மஹிந்த ராஜபக்ஷவை காங் கிரஸ் அழைத்ததிலும், பா.ஜ. க. அழைப்பதிலும் வித்தியா சம் உண்டு . ஈழம் அமைத்து கொடுப்பதும், கொடுக்காமல் இருப்பதும் மஹிந்த ராஜபக்ஷ கையில் இருக்கிறது. அழிவை ஏற்படுத்திய மஹிந்த ராஜபக்ஷ வுக்கு துணையாக நின்றது காங்கிரஸ் அரசு.

தமிழக மீனவர்கள் சுதந்திர மாக மீன்பிடிக்கும் சூழ்நி லையை உருவாக்க வேண் டும். தமிழர் வளர்ச்சிக்கு மோடியின் அரசு செயற்பட துணையாக இருப்போம்"- என்று தெரிவித்துள்ளார்.

(ற-5)

### கிளிநொச்சியில்

விஜயகுமார் கேதீஸ்வரன் எனும் இளைஞர், தனது தாயின் பிறந்தநாளுக்காக வீட்டுக்கு வந்திருந்தபோதே கைது செய் யப்பட்டுள்ளார்.

இவர் நைற்றா என்னும் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் கல்வி பயின்று தற்போது அசோக் லேலண்ட் நிறுவனத்தில் படித் துக் கொண்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

எனினும் இதுகுறித்து உறுதிப் படுத்திக் கொள்ள முயற் சித்த போதும் அது கைகூட வில்லை. (ற)

### சுகாதார

அதில் கோரிக்கை விடுத்தார்.

அதன்போது வடக்கு மாகா ணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், "மலேரியா ஒழிப்பு நடவடிக்கையில் பங் கெடுக்க வேண்டிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கடந்த 2 மாத காலமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு முடிவு எட்டப்பட்ட வில்லை. இந்தப் பிரச்சினையை எங்களால் தீர்க்க முடியாமல் உள்ளது. இது வெட்கக் கேடான செயல். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாவிட்டால் வடக்கு மாகாண சுகாதார அமைச் சுக்கு முன்பாக போராட்டம் நடத்த வேண்டி வரும்" என்று குறிப்பிட்டார். இந்தப் பிரச்சினை தொடர்பில் முதலமைச்சர் அலு வலகத்தில் நடந்த கலந்துரை யாடல் தொடர்பான அறிக்கை யில் சில பகுதிகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டே அனுப்பி வைக் கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரி வித்த அவைத் தலைவர், இந்த விடயத்தில் தானும் பங்கு கொண்டு பிரச்சினையைத் தீர்க்க முயன்றதாகவும் குறிப் பிட்டார். இதனைத் தொடர்ந்து ஏனைய உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்தனர். சுகா தார அமைச்சின் பலவீனத்தி னாலேயே இந்தப் பிரச்சினை தீர்க்க முடியாமல் போனது என்றும் அவர்கள் குறிப்பிட்ட னர்.

இதன் பின்னர் இந்தக் கேள்வி களுக்கான நீண்ட பதிலை வழங்கினார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம்.

"சுகாதார அமைச்சு இந்த விட யத்தில் யாழ்ப்பாண மக்களை பழிவாங்குகின்றது என்று இங்கு சில உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். நாங்கள் அவ் வாறு யாரையும் பழிவாங்க வில்லை. பொதுச் சுகாதார ப்ரிசோதகர்களின் போராட்டமா னது வடக்கு மாகாணம் முழு வதுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதிலும் சில பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கெடுக் காமல் விடுவதற்கு முயற்சித் தாலும் அவர்களையும் கட்டா யப்படுத்தி பங்கெடுக்க வைக் கின்றனர்.

பொதுச்சுகாதார பரிசோதகர் ஆளணி மாநாகரசபை மற் றும் நகர சபைகளுக்கே உள் ளது. கிராம சபைகளாக இருந்து பிரதேச சபைகளான 4 பிரதேச சபைகளுக்கு மாத்திரமே பொதுச் சுகாதார ஆளணி உள்ளது. 2012 ஆம் ஆண்டு முகா மைத்துவ சேவை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆளணி மீளாய்வின் போது தேசியக் கொள்கைக்கு அமைவாக குறித்த 4 பிரதேச சபைகளுக்கும் இணைக்கப்பட்டிருந்த பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆளணி ரத்துச் செய்யப்பட் டது.

அதில் உள்ளூராட்சி மன்றம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட அதி காரத்தை திரும்பப் பெறுவது சரியென்றுநான்சொல்லவில்லை. அதனால் 2013 ஆம் ஆண் டிலிருந்து இது தொடர்பான பிரச்சினை ஆரம்பித்தது. இது தொடர்பில் சுகாதார அமைச் சும், உள்ளூராட்சி அமைச்சும் பேச்சு நடத்தியது. 4 பிரதேச சபைகளுக்கும் வழங்கப்பட்ட ஆளணிக்குரிய சம்பளத்தை உள்ளூராட்சி அமைச்சே வழங் கிவந்தது.

இந்தநிலையில் நான் சுகாதார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர், கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகா தார வைத்திய அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றத் தவிசா ளர்கள் ஆகியோரைக் கூட்டி கலந்துரையாடல்நடத்தினோம். இதன் போது தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றங்களி லேயே பொதுச் சுகாதாரப் பரி சோதகர்களை கடமையாற்று வது என்றும் அவர்களுக்கு 6 மாத கால அவகாசமும் வழங் கப்பட்டது.

இதன் பின்னர் சிறிது நாள்க ளில், தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக் கும், பொதுச் சுகாதார பரிசோ தகருக்கும் இடையில் முரண் பாடு ஏற்பட்டது. இதன் போது பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகா தார அமைச்சுக்கு 3 நாள்க ளுக்குள் இணைக்க வேண் டும் என்று கோரின. இல்லா விட்டால் போராட்டம் நடத்தப் போவதாகத் தெரிவித்திருந் தார்கள்.

இதன் பின்னர் நான் மீண்டும் பேச்சு நடத்தினேன். அத்துடன் குறித்த பிரதேச சபைகளுக் குரிய 3 பொதுச் சுகாதார பரி சோதகர்களை சுகாதார அமைச் சுக்கு இணைத்திருந்தனர்.

இதன்பின்னர் அவர்கள் இரண்டு விடயங்களை முன்னி றுத்தி வேலை நிறுத்தப் போராட் டத்தை தொடங்கினர். அவர் களை மீளவும் பிரதேச சபை களுக்கு இணைக்க வேண்டும் என்றும் பொலிஸாரை அனுப்பி இந்த விடயத்தை செயற்படுத் தியமைக்காக மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் தெரிவித் தனர். இதில் பொலிஸாரை நாங்கள் யாரும் சொல்லி அனுப்ப வில்லை.

வடக்கு முதலமைச்சரும், சுகா தார அமைச்சரும் கோரிய தற்கிணங்கவே ஆளுநர் பொலி ஸாரை அனுப்பினார் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் நானோ, முதலமைச்சரோ ஆளுநரிடம் இது தொடர்பில் எதுவும் கேட்கவில்லை.

இதன் பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல மைச்சர் அலுவலகத்தில் கலந் துரையாடல் நடந்தது. அதில் தவிசாளர்கள் கலந்து கொண் டிருந்தனர். அப்போது பொதுச் சுகாதார பரிசோதகர்களை மீள வும் பிரதேச சபைகளுக்கு இணைக்க இணக்கம் காணப் பட்டிருந்தது. இதன் பின்னர் மறுநாள் சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கத்தை சந் தித்து இதைத் தெரிவித்தபோது அவர்களும் ஏற்றுக் கொண் டிருந்தார்கள். ஆனால் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங் கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

பொதுச் சுகாதார பரிசோதகர் கள் சங்கம், தம்மிடம் எதை யும் கேட்க வேண்டாம் கொழும் பிலுள்ள தாய்ச் சங்கத்திடம் கேட்குமாறு கூறுகின்றனர். இது தான் எங்களுக்கு பிரச்சினை யாகவுள்ளது.

இதன் பின்னர் கடந்த 31 ஆம் திகதி ஏப்ரல் மாதம் கிளிநொச்சி யில் வைத்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத் திய அதிகாரிகள் ஆகியோரை வைத்து கலந்துரையாடல் நடத்தினோம். இதன்போது இந்த வருட இறுதி வரையில், பொதுச் சுகாதார பரிசோதகர் கள் உள்ளூராட்சி மன்றங் களின் கீழ் பணியாற்றுவது என்றும் அவர்களுக்கான சம் பளக் கொடுப்னவு சுகாதாரத் திணைக்கள வடபிராந்திய பணிப்பாளர் அலுவலகத்தி னூடாக வழங்கப்படுவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், பொதுச் சுகாதார பரிசோதகர் கள் தம்மை சுகாதார வைத் திய அதிகாரிகள் மேற்பார்வை செய்யக் கூடாதென்று தெரிவித் தனர். இது நடைமுறைக்கு பிழையான செயல் என்று தெரிவித்திருந்தோம்.

தற்போது தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதுடன் இந்தப் பிரச்சினைகளைப் பார்க்கும் போது இது வடக்கு மாகாண சபையை முடக்க மேற்கொள்ளும் அரசியல் பின்னணிபோல் இருக்கின் றது. கடைசியில் தவிசாளர் கள், சுகாதார வைத்திய அதி காரிகள் சங்கத்தினர் இறங்கி வந்த போதும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விட்டுக் கொடுப் பின்றி இருக்கின்றனர். மூன்று நாள் இங்கே, மூன்று நாள் அங்கே பொருத்தமில்லாத ஒன்று" என்று அவர் தெரிவித் தார்.

இதன் போது எதிர்கட்சி உறுப் பினர், சுகாதார அமைச்சரும் சுகாதார வைத்திய அதிகாரி யாக இருந்து வந்ததால் பக்க சார்பாகச் செயற்படுகின்றாரோ என்று பொதுச் சுகாதார பரி சோதகர்கள் சந்தேகிக்கின்றார் கள் என்று குறிப்பிட்டார்.

அதையடுத்து முதலமைச் சரின் அனுமதியோடு இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்காகக் குழு அமைக்கப்பட்டது. அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம், போக்குவரத்து அமைச் சர் பா.டெனீஸ்வரன், எதிர்கட் சித் தலைவர் சி.தவராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், க.சிவ மோகன், ஞா.குணசீலன், கே.சயந்தன், பிறிமுஸ் சிராய் வா, திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் நியமிக்கப்பட்ட னர். (ற-5)



யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கராத்தே சுற்றுப்போட்டி நேற்று வியாழக்கிழமை திருநெல்வேலி இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. போட்டியில் இரு வீரர்கள் மோதிக்கொள்ளும் ஒரு காட்சி. (த-23)

## எறிபந்து இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மே 23
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண், இருபாலாருக்குமான எறிபந்து போட்டியின் இறுதி யாட்டமும் மூன்றாமிடத்திற் கான ஆட்ட மும் இன்று வெள் ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு புதுக் குடியிருப்பு நோ.க.த.க. பாடசாலை மைதா னத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் ஆண் களுக்கான இறுதி யாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா பனிக்கன் மகிழங் குழம் கனிஸ்ட உயர்தரப் பாட சாலை அணி மோதவுள்ளது.
மூன்றாமிடத் திற்கான ஆட்டத் தில் யூனியன்கல்லூரிஅணியை எதிர்த்து மானிப்பாய் மெமோரி யல் ஆங் கிலப் பாடசாலை மோதவுள்ளது.
பெண்களுக்கான இறுதியாட் டத்தில் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி மோதவுள் ளது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோத வுள்ளது. (த-23-422-433)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 23
சங்கானை பிரதேச இளை ஞர் கழக சம்மேளனத்துக் குட்டபட்ட தெரிவு செய்யப் பட்ட இளைஞர் கழகங் களுக்கு இடையில் அராலி ஏ.ஏல் இளைஞர் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற் றும் விலகல் முறையினான உத்தைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங் கள் அராலி ஏ.ஏல் விளை யாட்டுக்கழக மைதானத் தில் இன்றுவெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.
பி.ப 3.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஞான வைரவர் இளைஞர் கழக அணியை எதிர்த்து காளி அம்பாள் இளைஞர் கழக அணி மோதவுள் ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மே 23
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.ஏல் விளையாட் டுக்கழகம், அராலி ஏ.ஏல் இளைஞர் கழகம் ஆகி யவை இணைந்து நடத் தும் உதைபந்தாட்டச் சுற் றுப்போட்டித் தொடரின் ஆட் டங்கள் அராலி ஏ.எல் விளையாட்டுக்கழக மைதா னத்தில் இடம்பெற்று வரு கின்றன.
இன்று மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட் டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## தேசிய சைக்கிள், மரதன் போட்டிகள் திருமலையில்

### நாளையும், மறுதினமும் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 23
40ஆவது தேசிய மட்ட விளை யாட்டு விழாவின் ஓர் அங்க மான ஆண்,பெண் இருபாலா ருக்குமான சைக்கிள்,மரதன் ஓட்டப்போட்டிகள் திருகோண மலையில் இடம் பெறவுள் ளன.
வட மாகாணத்தில் இருந்து சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு நான்கு ஆண் போட்டியாளர் களும், மரதன்ஓட்டப்போட்டிக்கு ஆண்கள் பிரிவில் 10 போட்டி யாளர்களும், பெண்கள் பிரி வில் 6 போட்டியாளர்களும் பங்கு பற்றுகின்றனர்.
மேற்படிபோட்டியில்பங்குபற்று வதற்காக வட மாகாண அணி யினர் இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை புறப்படுகின் றனர். (த-23)

## தீவக லீக்கின் ஆட்டங்கள் நாரந்தனையில்

யாழ்ப்பாணம், மே 23
தீவக உதைபந்தாட்ட லீக் அங் கத்துவக் கழகங்களுக்கு இடை யில் நடத்தும் உதைபந்தாட் டச் சுற்றுப்போட்டித் தொடரின் பெண்களுக்கான இறுதியாட் டம், ஆண்களுக்கான ஆட்டங் கள் இன்று வெள்ளிக்கிழமை நாரந்தனை அண்ணா விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
பெண்களுக்கான இறுதியாட் டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ் ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
ஆண்களுக் கான முதலாவது ஆட்டத்தில் ஊர்காவற்துறை ஜேம்ஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடு தீவு நண்பர்கள் விளை யாட் டுக் கழக அணி மோதவுள் ளது.
2ஆவது ஆட் டத்தில் மெலிஞ்சி முனை இரு தயராஜா விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட் டுக்கழக அணி மோதவுள் ளது. (த-23)

## அராலி ஏ.எல் நடத்தும் ஆட்டங்களின் முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 23
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.ஏல் விளையாட்டுக் கழகம், அராலி ஏ.ஏல் இளைஞர் கழ கம் ஆகியவை இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற் றுப் போட்டித் தொடரின் ஆட் டங்கள் அராலி ஏ.எல் விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற வருகின்றன.
இதில் கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
செவ்வாய்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில்அராலிபாரதிவிளை யாட்டுக்கழகஅணியைஎதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணகில் வெற்றி பெற்றது.
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈவினை கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
அதில் இளவாலை யங்ஹென் றிஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
புதன் கிழமை இடம் பெற்ற ஆட் டத்தில் அராலி ஜேம்ஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து காக்கைதீவு ஆதவன் விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் அராலி ஜேம்ஸ் விளை யாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது. (த-23)

## முரசொலி - வள்ளுவர் அணிகள் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி

யாழ்ப்பாணம்.மே 23
பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழகம், வளர் மதி விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து கோபி சுபகார்த்த வெற்றி கிண்ணத் துக்காக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப்பரிமாற் றங்களைக் கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட் டித் தொடரின்அரை யிறுதி யாட் டங்கள் கடந்த தினங் கட் கிழமை பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுகழக மைதானத்தில் இடம் பெற் றது.
1ஆவது அரையிறுதியாட்டத் தில் பரந்தன் இனைஞர் வட்ட அணியை எதிர்த்து முரசு மோட்டை முரசொலி விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக அணி யினர் 10 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் 7 இலக்கு களை இழந்து 84 ஓட்டங் களைப் பெற்றனர்.
இதில் கீதன்20 ஓட்டங்களை யும், நிருஜன், செந்தூரன் ஆகி யோர் தலா 14 ஓட்டங்களை யும் பெற்றன.
பந்து வீச்சில் முரசொலி விளை யாட்டுக்கழக அணி சார்பில் சோபன்,லக்சன்,யாது,ஆகியோர் தலா 2இலக்குகளை வீழ்த்தி னர்.
85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முரசொலி விளையாட்டுக்கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறை வில் 5இலக்குகளை இழந்து 87ஓட்டங்களைப் பெற்றது.
இதில் சுதன் 33 ஓட்டங்களை யும், நிவேதன்12 ஓட்டங்களை யும்,சோபன்10 ஓட்டங்களை யும் பெற்றனர்.
பந்து வீச்சில் பரந்தன் இளை ஞர் வட்ட விளையாட்டுக்கழக அணி சார்பில் தவநேசன் 2இலக்குகளையும், றூபன் செந்தூரன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.
2ஆவது அரையிறுதியாட்டத் தில் ஜெயந்திநகர் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து வள்ளுவன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண் டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணி 10 பந்துப்பரிமாற் றங்கள் நிறைவில் 7 இலக் குகளை இழந்து 69 ஓட்டங் களைப் பெற்றது.
நிரோஷன் 34 ஓட்டங்களை யும், யூட் 6 ஓட்டங்களையும், சஞ்சயன், 8 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் வள்ளுவன் விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜம்போ 2 இலக்கினை யும், பவி ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்
70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப்பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய வள்ளுவன் விளையாட்டுக்கழக அணி 7 பந்துப்பரிமாற்றங்கள் நிறை வில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந் தது.
இதில் கடல் 26 ஓட்டங்களை யும், ராகுலன்14 ஓட்டங்களை யும், சசி 7ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயந் திநகாவிளையாட்டுக்கழகஅணி சார்பில்ஜெஸ்ரின், ரெஸ்போ, யூட் ஆகியோர் தலா 2 இலக்கு களையும் வீழ்த்தினர். (த-23)

## கரப்பந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 22
யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இருபால ருக்குமான ஏ,பி, பிரிவு அணி களுக்கு இடை யிலான கரப்பந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொட ரின் ஆட்டத்தில் 'பி' பிரிவு ஆண் களுக்கான போட்டிகள் எதிர் வரும் 31ஆம் முதலாம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல் லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
இதே வேளை 'ஏ' பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான போட்டி ஜூன் மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.
முதல் சுற்று ஆட்டங்கள் லீக் முறையிலும், 2ஆம் சுற்று ஆட் டங்கள் விலகல் முறையிலும் இடம் பெறவுள்ளன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர். (த-23)



# ஓட்ட மழை பொழிந்தார் உத்தப்பா 'பிளே ஓவ்' சுற்றுக்குள் கொல்கத்தா

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் ரொபின் உத்தப்பாவின் அசத்தலான அதிரடி ஆட்டத்தின் மூலம் 30 ஓட்டங்களால் வெற்றி பெற்று ' பிளே ஓவ்' சுற்றுக்குள் நுழைந்தது கொல்கத்தா அணி.

இந்தியாவில் நடைபெற்றுவரும் ஐ.பி.எல்.கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியும்,கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணித் தலைவர் விராட் ஹோக்லி முதலில் துடுப்பெடுத்துமாறு கொல்கத்தாவை பணித்தார்.

இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாட கொல்கத்தாவின் ரொபின் உத்தப்பா,கௌதம் கம்பீர் ஜோடி களம் புகுந்தது. கம்பீர் முதலாவது பந்துப்பரிமாற்றத்திலேயே 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பெரும் ஏமாற்றமளித்தார். அடுத்து வந்த மனிஸ் பாண்டேயும் 13 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஒரு முனையில் இலக்குகள் சரிக்கப்பட்டாலும் மறுமுனையில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார் உத்தப்பா.

அடுத்து உத்தப்பாவுடன் இணைந்த யூசுப்பதான் ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடி ஓட்டங்களை சேர்ப்பதில் குறியாக இருந்தார். அதனால் 13 பந்துகளில் 22 ஓட்டங்கள் எடுத்திருந்த போது துரதிர்ஸ்ட வசமாக ' ரன்அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து இணைந்தார் ஷகிப் அல் ஹசன் இருவரும் இணைந்து பெங்களூர் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்து ஓட்டங்கள் குவித்தனர். அதிரடியாக ஆடிய அல் ஹசன் 38 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள்,3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 60 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து களம்புகுந்த டொஸ் சட்டேயும் தன்பங்குக்கு அதிரடி காட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களைக் குவித்தது கொல்கத்தா அணி.

ரொபின் உத்தப்பா இறுதிவரை ஆட்டமிழக்காமல் 51 பந்துகளில் 83 ஓட்டங்களைப் பெற்று கொடுத்தார். பந்து வீச்சில் மிச்சல் ஸ்ராக்,அசோக் டின்டா மற்றும் அபு நெசிம் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப் பற்றினர்.

இதனை அடுத்து 196 என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார் கிறிஸ் கெய்ல். அடுத்து யோகேஸ் தக்வெலியுடன் இணைந்த விராட் ஹோக்லி ஓரளவு நம்பிக்கை தரும் வகையில் துடுப்பெடுத்தாடினார். இந்த ஜோடியின் அதிரடி ஆட்டத்தின் மூலம் ஓட்டக் குவிப்பில் ஈடுபட பெங்களூர் அணி வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டபோது ஹோக்லி 38 ஓட்டங்களுடன் வெளியேற அணியின் வெற்றி கேள்விக் குறியானது.

அடுத்து தக்வெலியும் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த ஏனைய வீரர்களும் சோபிக்காத நிலையில் 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் 30 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ். பந்து வீச்சில் சுனில் நரைன் 4 இலக்குகளையும், உமேஸ் யாதவ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக ரொபின் உத்தப்பா தெரிவு செய்யப்பட்டார்.இவ் வெற்றியின் மூலம் ' பிளே ஓவ்' சுற்றுக்குச் செல்வதற்கான வாய்ப்பினை பெற்றது கொல்கத்தா. (த-400)

# வோர்னர் அதிரடி ஹைதராபாத் இலகு வெற்றி

டேவிட் ஹெசி மகேந்திர சிங் டோனி ஆகியோரின் அரைச் சதங்கள் வீண் டேவிட் வோர்னர், ஷிகர் தவான் ஆகியோரின் அதிரடியான துடுப்பாட்டம் மூலம் கடினமான இலக்கைத் துரத்திப்பிடித்து வெற்றி பெற்றது ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி.

ஏழாவது ஐ.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி இந்தியாவில் இடம்பெறுகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் - ஹைதராபாத் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனை அடுத்து சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சிமித்தும்,டியூ பிளஸ்சும் களமிறங்கினர். ஆரம்பம் முதல் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்த இந்த ஜோடி 4 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அணி 33 ஓட்டங்களைப் பெற்ற போது டியூ பிளஸ்சிஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து சிமித்துடன் களம்புகுந்தார் சுரேஸ் ரெய்னா. இவர்கள் இருவரும் அணியை நல்ல நிலைக்கு கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையைத் தவிடு பொடியாக்கினர் இருவரும். அணி 7 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 68 ஓட்டங்கள் பெற்றிருந்த போது 28 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 47 ஓட்டங்களைப் பெற்றார். அதனை அடுத்து சற்று நேரத்தில் சுரேஸ் ரெய்னாவும் வெறும் 4 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார்.

இதனை அடுத்து ஜோடி சேர்ந்த டேவிட் ஹெசி,மகேந்திர சிங் டோனி இருவரும் சன்ரைசர் பந்துவீச்சாளர்களை ஒரு கை பார்த்தனர். இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த இந்த ஜோடி அணியை 185 என்ற நல்ல ஓட்ட நிலைக்கு கொண்டு சென்றார். இதில் 33 பந்துகளைச் சந்தித்த டேவிட் ஹெசி 5 நான்கு, 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 30 ஓட்டங்களும் 4 பந்துகளைச் சந்தித்த டோனி 2 நான்கு ஓட்டங்கள்,4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் கரண் சர்மா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இதனை அடுத்து 186 என்ற கனடி இலக்குடன் களமிறங்கிய சன்ரைசர்ஸ் அணிக்கு டேவிட் வோர்னர், ஷிகர் தவான் ஆகியோர் அதிரடி மூலம் நல்லதொரு அடித்தளத்தை பெற்றுக் கொண்டது. இவ்விருவரும் இணைந்து 116 ஓட்டங்கள் பெற்றபோது ஆரம்ப முதல் அதிரடி காட்டிய டேவிட் வோர்னர் 45 பந்துகளில் 12 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 90 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்துக் களமிறங்கிய நாமன் ஓஜா 19 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஒருபுறம் இலக்குகள் சரிக்கப்பட்டாலும் தனியாக நின்று போராடி அணியை வெற்றி வரை அழைத்துக் சென்றார் தவான். இறுதியில் 19.4 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 189 ஓட்டங்கள் பெற்று 6 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது சன்ரைசர்ஸ் அணி.

அவ்வணி சார்பாக இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ஷிகர் தவான் 50 பந்துகளைச் சந்தித்து 4 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்றார். (400)

# உச்சத்தில் கோஹ்லி

உலக அளவில் விளம்பரத்தின் மூலம் அதிக வருமானம் பெறும் வீரர்கள் பட்டியலில் இந்தியா கிரிக்கெட் அணியின் இளம் வீரர் கோஹ்லி 2ஆவது இடம் பிடித்துள்ளார்.

இந்திய அணியில் சிறந்த இளம் வீரராக வலம் வரும் விராட் கோஹ்லி, இமாலய ஓட்டங்களையும் அதிரடியால் எட்டிப்பிடிக்கும் திறமை பெற்றவர்.

தற்போது ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியை வழிநடத்தும் கோஹ்லி உலக அளவில் விளம்பரத்தின் மூலம் அதிகம் வருமானம் ஈட்டும் வீரர்கள் வரிசையிலும் இமயத்தைத் தொட்டுள்ளார்.

இது குறித்து இங்கிலாந்தின் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியில், உலக அளவில் விளம்பரத்தின் மூலம் அதிக வருமானம் பெறும் வீரர்களில் முதலிடத்தில் இங்கிலாந்தின் பார்முலா வீரர் ஹமில்டன் உள்ளார்.

இதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் வீரர் கோஹ்லி 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். இதில் இடம்பெற்றுள்ள இவர் ஒருவரே இந்திய வீரர்.

மேலும் பிரேசில் உதைபந்தாட்ட வீரர் நெய்மர் (7), போர்த்துக்கல் உதைபந்தாட்ட வீரர் ரொனால்டோ (4), சேர்பிய ரென்னிஸ் வீரர் ஜோகோவிச் (15), இங்கிலாந்து ரென்னிஸ் நட்சத்திரம் அன்டி முர்ரே (21), ஜேர்மனியின் பார்முலா1 வீரர் வெட்டல் (27), பெலாரசின் ரென்னிஸ் வீராங்கனை அசரன்கா (31) ஆகிய வீரர்களின் பெயர்களைப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளது.

இந்த பட்டியலானது அடுத்த 3 ஆண்டுகளில் இவர்கள் விளம்பரத்தில் பெறும் வருமானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. (த)

23 MAY 2014

# ஸ்ரீநிவாசனின் மனு நிராகரிப்பு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஐ.பி.எல். செயல்பாடுகள் அல்லாத மற்ற வழக்கமான செயல்பாடுகள் தொடர்பில் தலைவராக மீண்டும் தன் பணியை தொடர்வதற்கு அனுமதி கோரி அதன் முன்னாள் தலைவர் ஸ்ரீநிவாசன் தாக்கல் செய்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவை நிராகரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். சௌஹன் மற்றும் ஏ.கே.சிக்ரி ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற விடுமுறைக்கால அமர்வு. தடைவிதித்த அமர்விடமே முறையிடுமாறும் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவின் விசாரணையை நாங்கள் ஏற்கமாட்டோம். மற்ற அமர்வுகள் அளித்த தீர்ப்புகளை மாற்றுவதற்கு நாங்கள் இங்கு இல்லை. அந்த உத்தரவை பிறப்பித்த நீதிபதி பட்நாயக் இந்த ஊரில் தான் உள்ளார். அவரிடமே முறையிடுங்கள், என்று இந்த மனுவை விசாரிக்கும் போது நீதிபதி பி.எஸ். சௌஹன் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் ஆட்ட தொடர்பில் போட்டிகளின் மீது சட்ட விரோதமான வகையில் பந்தயம் கட்டுதல், முடிவுகளை நிர்ணயிக்கும் வகையில் தில்லுமுல்லுகள் செய்தல் போன்ற முறைகேடுகள் தொடர்பில் நடந்துவரும் விசாரணை நியாயமாக நடைபெறுவதை உறுதிப்படுத்த கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அப்போதைய தலைவர் ஸ்ரீநிவாசன் தன் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று உயர் நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி தெரிவித்திருந்தது.

அதையடுத்து ஐ.பி.எல். போட்டிகளை நடத்தும் குழுவுக்குத் தற்காலிகத் தலைவராக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் செயல்படுவார் என்று இந்திய உயர் நீதிமன்றம் மார்ச் 28ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இதர நடவடிக்கைகளை அதன் மூத்த துணைத் தலைவரான ஷிவ்லால் யாதவ் மேற்கொள்வார் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியிலிருந்து தன்னை உயர் நீதிமன்றம் நீக்கியது குறித்து ஸ்ரீநிவாசன் கேள்வி எழுப்பித் தாக்கல் செய்திருந்த மனுவை கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி விசாரித்த உயர் நீதிமன்றம் ஸ்ரீநிவாசனுக்கு எந்தவிதமான நிவாரணமும் அளிக்க மறுத்துவிட்டது.

இதன் பின்னணியிலேயே நேற்று முன்தினம் புதன்கிழமை ஸ்ரீநிவாசன் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் தலைவராக மீண்டும் பணியை தொடர்வதற்கு அனுமதி கோரும் மனுவை மூத்த வழக்கறிஞர் நாகேந்திர மூலம் அவர் தாக்கல் செய்தார். (த)


## கடை வாடகைக்கு

இல. 98, பெரியகடை வீதியில் (சயிக்கிள் பாக் ஒழுங்கை) 12 x 12 அடி விசாலமான கடை வாடகைக் குண்டு. தொடர்பு - 077 5790147

## பணிப்பெண் தேவை

உரும்பிராயில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பெண் பணியாளர் தேவை.
வயது : 30- 45
தொலை. இல. - 077 2445404

## தொண்டமானாறு தனு வெளியீட்டகம்

### தரம் 5 புலமைப்பரிசில் பொது பயிற்சி பரீட்சை - 2014

தொண்டமானாறு தனு வெளியீட்டகத்தினால் நடாத்தப்படும் தரம் 5 மாணவர்களுக்கான பொதுப் பயிற்சிப் பரீட்சையின் இரண்டாவது பரீட்சை 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு கீழ் குறிப்பிடும் பரீட்சை நிலையங்களில் வழமை போல் இடம்பெறும்.

1. தனு வெளியீட்டகம் - தொண்டமானாறு
2. ஸ்ரான்போட் கல்லூரி, யூனியன் அருகாமை, உடுப்பிட்டி
3. உதயதாரகை கல்விக் கழகம், கொற்றாவத்தை.
4. நியூ எக்சலண்ட் கல்வி நிலையம், நெல்லியடி, கரவெட்டி.
5. சதாபொன்ஸ் கல்வி நிலையம், அல்வாய்.
6. சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை.
7. கதிர் கல்வி நிறுவனம், புத்தூர்.
8. கலைவாணி கல்வி நிலையம் கோப்பாய்.
9. நியூ ஒக்ஸ்போட் கல்வி நிலையம், திருநெல்வேலி.
10. வள்ளுவர் கல்வி அக்கடமி உடுப்பிராய்.
11. வினைல்ஸ் கல்வி நிலையம், சுன்னாகம்.
12. ACT, இணுவில்.
13. பிற்ஸ்மன் கல்வி நிலையம், மானிப்பாய்.
14. கேம்பிரிஜ் கல்வி நிலையம், சங்கத்தானை.
15. கம்பன், கல்வி நிலையம், சங்கத்தானை, சாவகச்சேரி.
16. உமாதவா கல்வி நிலையம், மீசாலை.
17. New Study Hall, மாசியப்பிட்டி சந்தி, சண்டிலிப்பாய்.

மேலே குறிப்பிட்ட கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமல்லாது இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றவுள்ள எந்தவொரு மாணவர்களும் இந்நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

* முதலாவது பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர் விவரங்களை 20 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

## செங்கன் விசா - பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, சுவிஸ் ........... 2 வருட விசா

**வெறும் 14 இலட்சங்கள் போதும். 3 மாதத்தில் முடிவு தெரிய வரும். உடன் விண்ணப்பிக்கலாம்.**

**(நிபந்தனைகளுடன்)**

* UK ,Student Visa
* நியூசிலாந்தில் படிக்க IELTS

தேவையே இல்லை 2 வருடத்தில் PR. PR பெற்றால் ஆஸ்திரேலியா பறக்கலாம்.

ஆஸ்திரேலியா குடும்ப விசா. 54 வயதுக்குட்பட்டவர்கள் விரையலாம்.

Sponsor , Refusal , Visit Visa

7 நாட்களும் திறந்திருப்போம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090

## BIT # 26, Brown road, Jaffna BIT

பட்டக்கற்கை University of Colombo
புதிய கல்வியாண்டிற்கான பதிவுகள்
BIT Coordinator
MIS BIT CAMPUS | தொழினுட்பக் கல்லூரி எதிரில்....
கடந்த 13 வருடங்களாக யாழ் நகரில் TpNo: 0776577359

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

- எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.

Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyankulam, Vavuniya. Tel : 024 324 5287
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074

Batch 1 : 24.05.2014
Batch 2 : 26.05.2014
Batch 3 : 28.05.2014
Batch 4 : 31.05.2014

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

(C/14198)(7.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

சுங்கத் திணைக்கள பதவிகளுக்கான
பொது உளச்சார்பு
கணிதம்
ஆங்கிலம்
ஒவ்வொரு ஞாயிறும்
1.00 மணி - 4.30 மணிவரை

பல்கலைக்கழக விசேட கற்கை நெறிக்கான
பொது உளச்சார்பு
ஒவ்வாரு சனியும்
3.30 - 5.00 மணி
T.P. 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கியருகில்)


## மரண அறிவித்தல்

# நாகமணி நாகராசா

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் வளாக வீதியை வசிப்பிமாகவும் கொண்ட நாகமணி நாகராசா (19.05.2014) காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நகுலராசா, நகுலராணி, றஜித்குமார், தினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகலா, வாசகீதன், துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் தாரணி, ஆகாஷ், மிதுஷன், திவ்யன், டனுசன், பூஜா, ஜஸ்மி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் லங்காசித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியில் பதிவாளராக, உப அதிபராக, அதிபராக 35 வருடங்கள் சேவையாற்றிய

" கல்லூரி அன்னை"

**Dr. திருமதி கமலலோஜினி** பரமசிவம் DAMS

அவர்களது சேவையை பாராட்டும் விழா 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை 2.00 மணிக்கு லங்கா ஆயுள்வேத மருத்துவ கல்லூரி சுன்னாகத்தில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் பயின்ற வைத்தியர்களையும் மாணவர்கள் மற்றும் ஏனைய வைத்தியர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் பேதங்களை மறந்து சமூகம் தருமாறு வேண்டுகிறோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளவும்.

பாராட்டு விழா ஏற்பாட்டுக்குழு


## FALC FRENCH LANGUAGE CENTRE REGISTERED FRENCH CENTRE.

## FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 805 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி. Note: 2006ம் ஆண்டிலிருந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஒரு ஆசிரியர் - அரியகுளம் மற்றும் Nelliady இல் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறுகிறது.....

ஆரம்பம்:28.05 Wed 8.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 28.05 Wed 4pm. No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456

## கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் உடனடி வேலை வாய்ப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| HV ACடெக்னீசியன் | 10 பேர் | 1900 QR | ஷட்டரிங் காபென்டர் | 36 பேர் | 1200 QR |
| ரெலிகொம் டெக்னீசியன் | 03 பேர் | 2700 QR | டீசல் மெகெனிக் | 06 பேர் | 2000 QR |
| டோர் காபென்டர் | 10 பேர் | 1200 QR | கொங்கீறிட் மேசன் | 12 பேர் | 1200 QR |
| சுத்திகரிப்பாளர் (ஆண்கள்) | 20 பேர் | 900 QR | அசம்பல் டெக்னீசியன்ஸ் | 07 பேர் | 1600 QR |
| தொழிலாளர்கள் | 12 பேர் | 900 QR | சாரதிகள் | 02 பேர் | 1600 QR |
| டயில் மேசன் | 100 பேர் | 1400 QR | பெயின்டர்கள் | 150 பேர் | 1300 QR |
| எலக்ரீசியன் | 03 பேர் | 1500 QR | கை உதவியாளர்கள் | 81 பேர் | 900 QR |

கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம் தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி, உணவு இலவசம், ஒப்பந்த காலம் நீடிக்கப்படக் கூடியது. வேலை நேரம் எட்டு மணித்தியாலங்கள். உங்கள் சுயவிவரக்கோவை, கடவுச்சீட்டு, பாஸ்போட் Photo 8 என்பவற்றுடன் உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் Green Grass Hotel இல் காலை 9.00-2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: கோல்ட் மேன் இன்டர்நேஷனல் (பி) லிமிட்டெட் (LL No. 2248)
No.130, 3/1, 3rd Floor, Grand pass Road, Colombo-14.
077 058 4658 (Vavuniya Lanka Voice)
077 952 7575 (Jaffna Lanka Voice)
(45312)(1.6.3)

## புத்தகவிற்பனையும் கண்காட்சியும்

**இன்றும் நாளையும்**

★ G.C.E.O/L, G.C.E. A/L பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு
*கடந்தகால வினா விடைகள் (2013 உட்பட)*
★ *எதிர்பார்க்கை மாதிரி வினா விடை, வழிகாட்டி நூல்கள்*

இடம்: யாழ். மத்தியகல்லூரி (Romain Hall)
நேரம்: காலை 9 மணி-5 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
இல.234, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 699 2917, 021 222 2573
(சி/14023)(3.6.4)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.